
# தமிழரின் பரவலும் மாறாம்புலத்தின் தோற்றமும்



சி. கணேசமூர்த்தி

தமிழர் பரவலும்
மரம்புலத்தின் தோற்றமும்

# Thamilarin Paravalum Marampulathin Thotramum

[illegible]
(ஓய்வு பெற்ற அதிபர்)

# தமிழர் பரவலும் மாறாம்புலத்தின் தோற்றமும்

# Thamilarin Paravalum Marampulathin Thotramum

அல்வாய் சி. கணேசமூர்த்தி
(ஓய்வு பெற்ற அதிபர்)

# என்னுரை

கடந்துபோன நூற்றாண்டு கால நிகழ்வுகள், எமது மக்கள் தெரிந்திருக்க வேண்டியவை என்ற என் வேட்கையின் வெளிப்பாடே இம்முயற்சி அனைத்து மக்களும் அவரவர் பண்டு தொட்டு வாழ்ந்துவரும் சொந்த ஊர் பற்றிய சமூக புவியியல் அமைப்பு, நாகரீக வளர்ச்சி பொருளாதார நடவடிக்கைகள் பற்றி ஓரளவேனும் தெரிந்திருக்க வேண்டும். இந்நிலை கல்வி, கேள்வி ஞானம் என்பனவற்றால் மட்டுமன்றி அதுபாவத்தாலும் நிறைவாக வேண்டும்.

தம் சொந்த ஊர் பற்றிய அறிவோடு தம் சமூதாயம், தமிழர் பரம்பல், ஊரிற்கு சேவை செய்தோர் வரலாறுகளை ஊக்கத்தோடு கற்றலும் மிக்க பயன் தரும் செயல் வரலாறும் புகழ் நிறுவி சென்றோரின் அறிவாற்றலும் நமக்கு உணர்வத்திபாரமாக அமைய வேண்டும். அது எம்மை பல வழிகளிலும் உயர்வடையச் செய்யும்.

அந்த வகையில் மாறம்புலம் ஊரின் தோற்றம் மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையாரின் தோற்றம் என்பவற்றோடு தமிழரின் பரம்பல் பற்றியும் எழுதவேண்டும் என்ற எண்ணத்துடனும் ஊரில் நெருங்கி உறவாடிய அனுபவத்துடனும் மாறாம்புலத்தானின் அருளோடு இப்புத்தகத்தை எழுதியுள்ளேன்.

எனவேதான் கட்டுக்கதைகளையும் தவிர்த்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விபரங்களையே இங்கு தந்துள்ளேன். இந்நூலின் குறை நிறைகளுக்கு நானே பொறுப்பு என்பதை பணிவண்புடன் கூறுகின்றேன்

இந்நூலின் சிறப்புறவும் விரைவாகவும் அச்சிட்டுத்தந்துதவிய சக்தி அச்சகத்தினருக்கு எனது நன்றிகள் அத்துடன் இந்நூல் அழகுற வெளிவர உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள் என்றும் உண்டு.

சி. கணேசமூர்த்தி
திருவடிநிழல்,
அல்வாய் வடமேற்கு:
அல்வாய்–மாறாம்புலம்.

# நூல் பட்டியல் தகவல்


| | | |
|---|---|---|
| நூல் | – | தமிழர் பரவலும் மாறாம்புலத்தின் தோற்றமும் |
| விடயம் | – | வரலாறு, சமய ஆய்வு |
| ஆசிரியர் | – | சி. கணேசமூர்த்தி |
| முகவரி | – | திருவடி நிழல், அல்வாய் வடமேற்கு அல்வாய்<br>021-2264306 |
| பதிப்பு | – | முதலாம் பதிப்பு 2010 மார்கழி |
| பதிப்புரிமை | – | திருமதி. க. வள்ளிநாயகி |
| பக்கம் | – | 79 |
| அச்சுப்பதிப்பு | – | சக்தி அச்சகம் (7B, கடல்முகவீதி, திருகோணமலை) |

# உள்ளடக்கம்


பகுதி I – வரலாறு

1. மனித இன தோற்றமும் பரவலும்
2. தமிழரின் தோற்றமும் பரவலும்
3. ஈழத்தவர் வரலாறும் இலங்கையில் தமிழரின் பரவலும்
4. மாறாம்புலம் எங்களூர்
5. மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் வரலாறு
6. எனது சமூக அரசியல் தொடர்பான பதிவுகள்
7. எமது ஊர் முன்னோர்கள்.

பகுதி II – ஆக்கங்களும் கட்டுரைகளும்

1. வள்ளுவர் கண்ணோட்டத்தில் பொருளும் பொருள் சேர்வழியும், ஆய்வும் விளக்கமும்
2. மண்ணில் நல்ல வண்ணம் வாழ கோயிலை காண்க
3. தேர்த்திருவிழா
4. மாறாம்புலம் மாணிக்க விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகனின் மகிமைகள்
5. சைவம் ஒரு வாழ்க்கை நெறி

பகுதி I

# வரலாறு

# மனித இன தோற்றமும் பரவலும்

பிரபஞ்சத்தின் அகவை சுமார் 1200 கோடியிலிருந்து 1500 கோடி ஆண்டுவரை இருக்கலாம். உலகம் உட்பட ஞாயிற்றுக் குடும்பத்தின் வயது ஏறத்தாழ 450 கோடி ஆண்டுகள் ஆகும். உலகில் முதல் முதலில் உயிர்கள் தோன்றியது ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முன்னர்தான். முதன் முதலில் பக்டீரியா போன்ற ஒரு செல் உயிர்களே. இன்றுள்ள அனைத்து செடி கொடிகளும் விலங்கு – பறவைகளும் ஒரே மூலத்தில் தோன்றியவையே ஆகும். இவ்வுயிரின வளங்களில் 15இலட்சம் தனி இனங்கள் (Species) கண்டுபிடிக்கப்பட்டு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இன்னும் இனம் கண்டுபிடிக்கப்படாதவையும், பெயர் சூட்டப்படாதவையும் (குறிப்பாக தாவரங்கள், நுண்ணுயிர்கள், சிற்றுயிர்கள்) மும்மடங்கு இருக்கும் என்று கருதுகின்றனர். இன்றைக்கு 24கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தடவையும் ஆறரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்னர் மற்றொரு தடவையும் பேரழிவுகள் ஏற்பட்டு அந்தந்த காலகட்டத்தில் இருந்த உயிரினங்களின் பெரும்பாலானவை அழிந்து விட்டன. (மிகப்பெரிய கொள்ளிகள் (meteors) உலகில் விழுந்ததால் அப்பேரழிவுகள் ஏற்பட்டிருக்கலாம் என்கின்றனர்). இப்பொழுது உள்ள பாலூட்டிகள் (Mamals) அனைத்துமே 16 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உருவான ஒரு சிறிய (எலி போன்ற பருமனுடைய) விலங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்தவையே. குரங்குகளுக்கும், மனிதனுக்கும் மூதாதையான லெமூர் (Lemur) விலங்கு (சுமார் 250 கிராம் எடை) உருவான காலம் ஆறரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும். பூச்சிகள் தோன்றி 50 கோடி ஆண்டுகள், எறும்பு தேனி தோன்றி 10 கோடி ஆண்டுகள், கரையான் தோன்றி 28 கோடி ஆண்டுகள் ஆகின்றன.

மனிதன் எப்படி தோன்றினான்? மனிதக்குரங்கினத்துக்கும் (சிம்பன்சி, கொரில்லா) மனிதனுக்கும் பொதுவான வேறு ஒரு உயிரினம் இன்றைக்கு ஏறத்தாழ 50 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்காவின் இருந்திருக்க வேண்டும் என்பது அறிவியல் முடிவு. இன்று உலகமெங்குமுள்ள 650 கோடி மனிதர்களுமே (அதாவது திராவிடர், இந்தோ ஐரோப்பியர், மங்கோலியர், செமித்தியர், அமெரிக்க இந்தியர் ஆகிய அனைவருமே) கோமோ சேபியன்ஸ் (Home Sapiens) அல்லது (Anatomically Modern Humans) என்னும் ஒரே இனத்தை சார்ந்தவர்கள். இவ்வினம் ஆபிரிக்காவில் இன்றைக்கு ஒன்றரை இலக்கம் அல்லது ஓர் இலக்கம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒரே தாயிடம் இருந்து தோன்றியது என்பது அறிவியலார் அனைவரும் ஏற்ற முடிவு. இப்பொழுது உள்ள மனிதர்களாகிய நம் மனித இனம் (A.H.M வகையை சார்ந்தவர்கள்)

# தமிழரின் தோற்றமும் பரவலும்

வரலாற்றுக்காலத்திற்கு முந்திய செய்திகளையும் நிலவியல் மூலம் அறிந்து கொள்ளலாம். தென்னியாவும் இலங்கையும் உலகின் முதன்முதல் தரைப்பகுதி தோன்றிய காலத்திலேயே உருவானவை என நிலவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அவர்கள் கருத்துப்படி மிகப் பழங்காலத்தில் தென்னிந்தியா, ஆத்திரேலியா, தென்ஆபிரிக்கா, தென்அமெரிக்கா ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய **கோண்டுவானா** என்னும் கண்டம் ஒன்று இருந்தது. பின்னர் மெசொசோயிக் கால இறுதியில் கோண்டுவானா கண்டம் உடைந்து அதன் பெரும்பகுதி அதன் பெரும்பகுதி கடலுள் மூழ்கியது. ஆஸ்திரேலியா, இந்திய, தென்ஆபிரிக்கா, தென்அமெரிக்கா ஆகியவற்றிற்கு இடையே இருந்த தொடர்பு அறுபட்டது. எனினும் அதன் பின்னரும் கூட இந்தியாவையும் ஆபிரிக்காவையும் வால் போன்ற நிலப்பகுதி இணைத்திருக்கலாம் என்று கருதப்பட்டு அந்த இணைப்பு நிலப்பகுதிக்கு "லெமூரியா" என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஜீராசிக் காலத்தில் தென்னிந்தியாவுக்கு கிழக்கிலிருந்த நிலப்பகுதியும் கடலுள் மூழ்கி வங்காள விரிகுடா உருவாகியது. கடைசிப்பனி ஊழி இறுதியில் பெருமளவு பனிக்கட்டி உருவாகியதால் கடல் மட்டம் உயர்ந்து, தாழ்வான பகுதிகள் கடலுள் மூழ்கின இக்கால கட்டத்தில் சுமத்ரா, ஜாவா, போர்ணியோ, போன்ற தீவுகளை அதுவரை இணைத்திருந்த தாழ்வான நிலப்பகுதிகள் கடலுள் மூழ்கவே அவையெல்லாம் தனித்தனி தீவுகள் ஆயின வேத இதிகாச புராணங்களில் இந்நிகழ்வு "மகா பிரளயம்" என்று வர்ணிக்கப்படுகிறது. அப்பிரளயத்தில் தப்பிப் பிழைத்த மனு மாந்த இனத்தின் தந்தையாக ஆனார்.

2.பாகவத புராணத்தின்படி மலைய பருவதத்தை சுற்றியிருந்த திராவிட தேசத்தின் ஒருபகுதி இப்பிரளயத்தில் மூழ்காமல் தப்பியது. திருமாலின் (விஷ்ணு) முதல் அவதாரமாகக் கருதப்படும் மீன் மனுவுக்கு ஒரு கப்பலைக் காட்டி பிரளயத்தில் அழிந்து விடாமல் தப்பிப்பிழைக்க உதவியது. பாண்டிய மன்னர்களின் இலச்சினை மீன் என்பது குறிப்பிடத்தக்கது.இத்தகைய பிரளயக்கதைகள் நம் நாட்டுக்கு மட்டும் சொந்தமானவையல்ல. எபிரேய பைபிளிலும், பாபிலோனிய, சுமேரிய படைப்புகளிலும், வேறுபல நாடுகளிலும் பிரளயக்கதைகள் உள்ளன. இவையனைத்தையும் கட்டுக்கதைகள் என்று ஒதுக்கிவிட முடியாது. மேற்சொன்ன நிலவியல் செய்திகளைக் கருத்தில் கொண்டு இக்கதைகளும் சில வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்தவை எனலாம். எனது **"மத்சயபுராணம் – ஓர் ஆய்வு"** என்னும் நூலில் நான் பாபிலோனிய மற்றும் இந்திய பிரளய கதைகளிடையே உள்ள ஒற்றுமையைகளைச் சுட்டியுள்ளேன். பிரளயம் பற்றிய மெசெபொதாமிய கதையில், மீன், நீர் என்னும் இரண்டு தமிழ்ச் சொற்கள் இருப்பது வியப்புக்குரியது. (1931 இந்திய சென்சஸ் அறிக்கை : பக். 366)

நிலவியல் சான்றுகளின்படி தக்காண பீடபூமியிலும் அதற்கு தெற்கிலுள்ள பகுதியிலும் உள்ள கற்பாறைகளின் காலத்தை ஆய்வு செய்தவர்கள் உலகின் மிகப்பழமையான நிலப் பகுதிகளில் ஒன்று தென்னாடு என்று நிறுவியுள்ளனர். நீலகிரிமலை, பழனிமலை, ஆனைமலை ஆகியவை எல்லாம் மிகப் பழங்காலத்தவை தென்னிந்தியாவில் கற்கால மனிதன் காடுகளில் வசிக்கவில்லை மலையை ஒட்டிய பீடபூமிகளில்தான் வசித்தான் என்பது வல்லுநர்கள் கருத்து ஏனைய காடுகளில் உள்ள பழங்கற்கால மாந்தன் காட்டு விலங்காண்டியல்ல. எனவே

தென்னிந்தியாவில் உள்ள பழங்கற்கால மக்களும் அவர்களுக்கு முந்தியவர்களும் இந்நாட்டின் "மண்ணின் மைந்தர்களாகத்"தான் இருந்திருக்க வேண்டும் தமிழர்களுக்கிடையே தாங்கள் வேறு எங்கிருந்தும் இங்கு வந்தேறியவர்கள் என்று கூறும் புராணம், கட்டுக்கதை கூட இல்லை எனவே அப் பழங்கற்கால மாந்தர்கள் தாம் பழந் தமிழர்களின் மூதாதையர்கள் என்பதை பின்னர் நான் நிறுவ இருக்கிறேன்.

தென்னிந்திய மக்களுக்கும், நண்ணிலங்கரை நாடுகளின் மக்களுக்கும் இடையே உள்ள இனம் மற்றும் பண்பாட்டு ஒருமைப்பாட்டுக்கு என்ன காரணம்? நண்ணிலக்கரை நாட்டுப் பண்டைமக்களுக்கும், ஐரோப்பிய – ஆசியாவின் பிறபகுதிகளில் வசிக்கும் மக்களும் தொல்பழங்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்தே பயனப்பட்டுச் சென்றார் என்பது தான் காரணம் (டாக்டர் இ.மக்ஸின்) வட அமரிக்க இநதியர்களும் தொல்பழங்கால எகிப்தியர்களும் தாங்கள் தத்தம் நாடுகளுக்குப் பிறபகுதிகளிலிருந்து வந்து குடியேறியதாகவே கருதுகின்றனர். எகிப்தியர் மண்டையோட்டு வடிவ அடிப்டையில் அவர்கள் இந்தியாவில் இருந்து சென்றவர்களாக இருக்கலாம் என்று **ஹீராஸ்** கருதினார். எகிப்தியர்களின் பண்டைநாடாகிய **பண்ட்** என்பது ஒரு வேளை பாண்டியநாடாக இருக்கலாமோ என்ற கருத்தம் உண்டு (தற்போது கொல்லம் வரையுள்ள கேரளப்பகுதியும் பண்டைக்காலத்தில் பாண்டிய நாட்டின் பகுதியாகத்தான் இருந்தது.) ஆனால் இது பற்றி முடிவு கூற மேலும் சான்றுகள் தேவைப்படுகின்றன.

பண்டைத்தமிழரின் தோற்றம் பற்றி இப்பொழுது பல கொள்கைகள் வழங்கி வருகின்றன. அவற்றள் முதன்மையான சிலவற்றைக் குறிப்பபிட வேண்டும். திராவிடர்கள் தென்னிந்தியாவிற்குவந்தேறிகளாக நுழைந்து குடியேறியவர்கள் என்ற கேட்பாடு இனறைய நிலையில் சற்றுவலுவாக வழங்குகிறது. அதையே நிறுவப்பட்ட உண்மையாகவும் சிலர் கருதுகின்றனர். தென்னிந்தியாவிலுள்ளபிரதமணரல்லாத சாதியினரும் , தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம், மராட்டி போன்ற மொழிகளைப் பேசுபவர்களும், அவ்வாறு தென்னாட்டுக்கு வந்து குடியேறிய திராவிடர்களின் பறம்பரையினர் என்று கூறப்படுகிறது. அடிப்படையில் பிராமணர்கள் ஆரிய இனத்தவர் எனக் கருதப்படுகின்றனர். அறுசனங்கள் என இப்பொழுது அழைக்கப்படும் பஞ்சமர்கள் ஆதிதிராவிடர்கள் எனப்படுகின்றனர். இக் கோட்பாட்டின் அடிப்படை திராவிடர்கள் தென்னிந்தியாவிற்குள் நுழைந்து பெரும் எண்ணிக்கையில் குடியேறும் முன்னர் நாகரீக மற்று வனப்பகுதிகளில் இங்கு இருந்தவர்களான பழங்குடி மக்களைத் திராவிடர்கள் ஒடுக்கி ஆதி திராவிடர்கள் ஆக ஆகிவிட்டனர் என்பதாகும். இந்திய துணைக்கண்டத்தைப்பொறுத்தவரை ஆரியர் எப்படி வந்தேரிகளோ அப்படித் திராவிடர்களும் வந்தேரிகளே என்று பொதுவாக கருதப்படுகிறது. ஆரியர்களுக்கும் நெடுங்காலம் முன்னரே வந்து குடியேரியவர்கள் திராவிடர்கள் என்கிறார்கள். இதற்கு ஆதாரமாக வேதங்களில் குறிப்பாக **ரீக் வேத சம்ஹிதையில்** தஸ்யு, தாசர் என்பவர்கள் ஆரியர்களால் வெல்லப்பட்டு, அடிமையாக்கப்பட்ட திராவிடர்களே என்று கூறுகின்றனர். இது பற்றிப் பின்னர் பார்ப்போம். மேற் சொன் தருக்கங்கள் எவையும் ஏற்கத்தக்கவை அல்ல என்பதே முடிவாகும். காரணம் இவற்றுக்கான ஓரிரு சான்றுகளும் மிக வலுவற்றவையாகும்.

அடுத்து நாம் பார்க்க வேண்டியது "திராவிடர்கள் யார்?" என்பது. இது குறித்தும் அறிஞர்களிடையே கருத்தெற்றுமை இல்லை. இப்பொழுது பரவலாக வழங்கும் கொள்கைப்படி ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தபொழுது மிக வளர்ச்சியடைந்த தராவிட நாகரீகம் ஒன்று இருந்தது. திராவிடர்கள் நண்ணிலக்கரை நாகரீக இனத்தின் ஒரு பிரிவினரே என்பதாகும் ஆக தழராவிட நாகரீகம் இந்தியாவிற்கு வெளியிலிருந்து தோன்றியது என்றும், எகிப்து, மெசொபொதாமிய நாகரீகங்களோடு உறவுடையது என்றும் கூறப்படுகிறது.

இனங்களை குறிப்பதற்கு உடலியற் கூறுகள் பயன்படுத்தப்டுகின்றது. ஆதிச்சநல்லூர், பலுசிஸ்தானில் நால் (Nal), சிந்துவெளி மொகஞ்சதரோ ஆகிய இடங்களில் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோடுகள் தெல் ஆத்திரேலியப்பழங்குடியினர் வகையச் சார்ந்தது எள்றும், அவை கிஷ், ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் அகழப்பட்ட மண்டையோடுகள், நம் காலத்து (இலங்கை) வெட்டர்கள் மண்டையோடுகள் ஆகியவற்றைப் போன்றலவயே என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆதிச்சநல்லூர் மண்டையோடு அசல் லொல் எகிப்திய மண்டையோடு போலவே இருக்கின்றது என்பார் எலியட் ஸ்மித் தென்னிந்தியாவின் ஆதிக்குடிகள் நீக்ராயிடு இனத்தவர் என்றும் தென்னகக் காடுகளிலுள்ள காடர்கள், ஊராளிகள் ஆகியோரைப் போன்றவர்கள் என்று பொதுவாக கருதப்படுகிறது. அவர்களுடைய அடையாளங்கள் வில் – அம்பு மற்றும் அரசமர வழபாடு (மக்கட் பெருக்கத்திற்காக) ஆகும். அந்த நீக்ராயிடு இன மக்களைப் புறந் தள்ளியவர்கள் தொல் ஆத்திரேலிய இனத்தவர். அவர்கள் மண்பானை, தாழிகளைப் பயன்படுத்தினர். பூமறாங்(வளைதடி), புலோ கன்(ஊடூற புரல) வகை துமுக்கி, மரபுச் சின்ன வழிபாடு ஆகியவை இவர்களின் அடையாளங்களாகும். அடுத்து வந்தவர்கள் நண்ணிலக்கரை இனத்தவர். இப்பொழுது இந்தியாவிலும், குறிப்பாக தென்னிந்தியாவிலும் உள்ள மக்களுள் பெரும்பாலோருடைய உடல் அமைப்பு இவர்களுடைய உடலமைப்பாகவே உள்ளது. இவர்கள் தென்னிந்திய பண்பாட்டை மேம்படுத்தினர். வேளாண்மை, கடல்போக்குவரத்து ஆகியவற்றை இவர்கள் கொண்டு வந்தனர். இவர்கள் வந்தது நண்ணிலக்கரை கிழக்குப் பகுதியிலிருந்து அப் பகுதியில் இருந்த அர்மீனிய இன மக்களுக்கும், அவர்களுக்கும் அங்கே கலப்பு ஏற்பட்டிருக்கும். தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் மடலம் –1 இல் தர்ஸ்டன் கூறுவது அர்மீனிய மண்டையோடு தென்னிந்திய மாந்தனின் மண்டையோட்டைப் போலவே உள்ளது என்பதாகும் நல்லிணக்கரையர், அர்மீனியர் உடலமைப்புகளின் கலந்த வடிவைத் தமிழர்களிடையே நன்கு காணலாம். அண்மைக்கால ஆயாவாளர் முனைவர் குஹா கருத்துப்படி தெலுங்கர்கள் தூய நண்ணிலக்கரை இனத்தலர். அகல மண்டையோட்டினர் (Brachycephalic) குடியேற்றம் பெருமளவுக்கு தமிழ்நாட்டில் நடந்துள்ள போதிலும் ஆந்திர தேசத்தில் அவர்கள் பரவாயில்லை.

மேற்சொன்ன கோட்பாடும் அதுபோன்ற வேறு சிலவும் மேம்போக்காகப் பார்த்தால் ஏற்கத்தக்கனவாகத் தோன்றலாம் ஆனால் அகழ்வாய்வாளர்கள் அண்மையில் வெளிக்கொணர்ந்துள்ள சிந்துவெளி நாகரீக கண்டுபிடிப்புகள் இவற்றையெல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டன அவ் அகழ்வாய்வு எச்சங்களை கவனமாக ஆய்வு செய்த சர்ஜான் மார்சல் சிந்துவெளி நாகரீக எச்சங்கள் திராவிட நாகரீகம் சார்ந்தவையே என்று தெளிவாக கூறுகிறார். சிந்துவெளி நாகரீக எச்சங்கள் திராவிட நாகரீகம் சார்ந்தவையே என்று தெளிவாக கூறுகிறார்.

சிந்துவெளி நாகரீகம் எந்த இனச்சார்புடையது என்பது பற்றி மூன்று கருத்துக்கள் உள்ளன. முதல் கருத்து மார்சல் அறுதியிட்டுள்ளது போல் அது திராவிடர் நாகரீகம் என்பதாகும். இரண்டாவதாக சிலர் சிந்துவெளி நாகரீகத்தை ஆரியத்தனமை வாய்ந்தது. என்று கருதுகின்றனர்.மூனாறாவது கருத்து : இந்நாகரீகம் திராவிடருடையதுமில்லை, ஆரியருடையதுமல்ல இப்பொழுது நம்மிடமுள்ள செய்திகள் அடிப்படையில் எந்த இனத்தை சார்ந்தது என்று கூற இயலாது என்பதாகும். சிந்துவெளி நாகரீகம் "வேத" காலத்துக்குப் பிற்பட்டது என்றோ தமிழர் நாகரீகமென்றோ நிறுவுவதில் மொழியியல் சிக்கல் உள்ளது. இவ் வகையில் அருட் தந்தை ஹீராஸ் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. பஞ்சாபியிலிருந்து பாரசீக வளைகுடா வரையிலுள்ள நிலப்பகுதி முழுவதும் சிந்துவெளி நாகரீகம் ஆமற்கு நோக்கி சுமேரியா, பாபிலோன், எகிப்து போன்ற நாடுகளுக்குப் பரவியது என்றும் கருதும் ஹீராஸ் கோட்பாடு இப்பொழுது வலுப்பெற்று வருகிறது. இச் செய்தி மிகக் கவனமாக ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் முடிவு செய்ய வேண்டியதாகும். இப்பொழுது அத்தகைய ஆய்வில் நுழைய இயலாது.

சுமேரியாவில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள், புடைப்போவியங்கள் ஆகியவற்றிலிருந்து சுமோரிய மக்களின் இனம் தென்னிந்தியரைப் போன்றதே என்று அறியலாம். சிந்துவெளி நாகரீகத்தை அகழ்வாய்வில் கண்டுபிடிப்பதற்கு முன்னரே எச்.ஆர்.ஹால் இதுபற்றித் தெரிவித்த கருத்து இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டாக வேண்டிய உண்மையாகிவிட்டது.சுமேரியரும் சிந்துவெளி நாகரீகத்தினரும் ஒரே இனத்தவரே என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்தெற்றுமை உள்ளது. சிந்துவெளியினரின் நிலம் வழியாகவும், கடல் வழியாகவும் பாரசீகத்தை தாண்டி யூப்ரடீஸ், டைகிரீஸ் ஆற்றுப் பள்ளத்தாக்கிற்குச் சென்று குடியேறினர். வழியில் தங்கள் நாகரீகத்தின் விதையை எலாம் நாட்டில் விட்டுவிட்டுச் சென்றனர். சுமேரியரும் சிந்துவெளி நாகரீக மக்களும் தென்னிந்தியரை போன்ற இனத்தவர் என்பதை மறுக்க முடியாது. என்பதால் சிந்துவெளியிலிருந்து திராவிடத்திற்குமோ அல்லது திராவிடத்திலிருந்து சிந்துவெளிக்கோ மக்கள் பெயர்ச்சி இருந்திருக்க வேண்டும் என்று ஆகிறது. இதற்கு எதிர்பாராத சான்று ஒன்று கிட்டியுள்ளது. சுஅமாரிய கதைகளில் வரும் **ஓயானிஸ்** என்னும் மீன் – மாந்தன் பாரசீக வளைகுடாவை நீந்திக்கடந்து எரிது போன்று சுமேரிய நகரங்களுக்கு நாகரீக கலைகளை கொண்டு வந்தான் என்னும் கூற்று இதற்கு வலுவான நான்றாகும். ஆக பஞ்சாபிலிருந்து பண்டை சுமோரியாவுக்கு மேற்கு நோக்கி நாகரீகம் பரவியது என்று கூறும் பொழுது "திராவிட – நண்ணிலக்கரை" இனம் என்ற கருதுகோளுக்கு ஆதாரம் இல்லாமல் போகிறது.

இரண்டாவதாக மாந்தவியலாளர் திராவிடர் தோற்றம் பற்றி கருதுவதை பார்ப்போம். திராவிடர்கள் குறைந்த உயரமுடையவர்கள் "கருத்தவர்கள், நீண்ட தலை, அகல மூக்கு, நீண்ட முழங்கை ஆகியவற்றை கொண்டவர்கள்" என்பது எச்.ரீஸ்லியின் கருத்தாகும். பின்னர் அவர் ஆரியர், சாகர், சிதியர், மங்கோலியர் கேிய இனங்களோடு ஆங்காங்கே கலந்து இந்தியாவில் மொத்தம்நான்கு கலப்பினங்கள் உருவாகியுள்ளன என்று தனது "இந்திய மக்கள்" என்னும் நூலில் (பக். 46) லிஸ்லி கூறுகிறார். ஆத்திரேலிய பழங்குடி மக்கள் – திராவிடர் உறவு, சிதியர் – திராவிடர் உறவு பற்றியெல்லாம் கூறப்பட்ட

கருத்துக்களும் திராவிடர்கள் இமயமலைக்கு அப்பாலிருந்து இந்தியாவிற்குள் நுழைந்து மங்கோலியர்கள் என்ற கருத்தும் இப்பொழுது ஆதாரமற்றவை என அறிஞர்களால் ஒதுக்கப்பட்டுவிட்டன. திராவிடர்கள் ஆபிரிக்கா கண்டத்திலிருந்து வந்தவர்கள் என்று டபுள்யு. குருக் கூறுவதும் ஆதாரமற்றது. கிரீட் மக்களின் ஒரு பிரிவினரும், ஆசியா மைனரில் இருந்தவர்களும் ஆன **லிசியர்கள்** தங்களை **திரமில்லை** என்று அழைத்துக் கொண்டதாக அவர்களுடைய கல்லறைப் பொறுப்புக்களிலிருந்து தெரியவருகிறது. இந்த (வலுவற்றதும் தற்செயல் வாய்ந்ததுமான)சொல்லமைப்புமைய அடிப்படையாக கொண்டு கிழக்கு நலிலிணக்கரையில் இருந்த **ஈஜிணன்** (Aegean) இனத்தின் ஒரு பிரிவினரே திராவிடராயினர் என்ற தருக்கமும் எழுந்துள்ளது.ஈஜிய நாகரீகம் சுமார் கி.மு. 2500இல் தான் தோன்றியது. ஆனால் தமிழர் நாகரீகம் அகழ்வாய்வுச் சான்றுகளின் படி அக்கால கட்டத்துக்கும் முக்கியதாகும். லிசியர்கள், கிரேக்கர்களல்ல என்றும், கிரேக்க இனக் குழுக்களுக்கு புறம்பானவர்கள் என்றும் அனைவரும் ஏற்கின்றனர்.ஒரு வேளை அவர்கள் ட்ராய் மக்களோடு தொடர்புடையவர்களாய் இருந்திருக்கலாம். அப்படியானால் மேற்கே சென்ற தமிழ்மக்களின் ஒரு பிரிவினர்தாம் தங்கள் பயனத்தில் ஆசியா மைனரில் குடியேறி **திரமில்லை** என்று அழைக்கப்பட்டனர் என்று கூறுவது பொருத்தமானதாகும் இப்பொழுது தென்னாபிரிக்கா, பர்மா, மலேசியா போன்ற நாடுகளில் தமிழர் குடியேற்றங்கள் இருப்பது போன்று அக்காலத்தில் ஆசியா மைனரில் ஏற்பட்டிருக்கலாம்.

மாந்தரவியலறிஞர் கருத்துக்கள் பலவிதமாக இருக்கின்றன.அகழ்வாய்வு மற்றும் வரலாற்றுச்சான்றுகளின் படி தென்னிந்தியாவில் பழங்காலதட்திலிருந்து இன்றுவரை நாகரீகம் தொடர்ச்சியாக வளர்ந்து வந்துள்ளதை மறுக்க முடியாத. மாந்தவியலாளர் கோட்பாடுகளுள் ஒன்று, முதலில் தெல் திராவிடர்கள் உருவாகியதுதான் பழங்கற்கால நாகரீகம் என்பதும் அதன்பின் புதுக்கற்கால இறுதியில் திராவிடர்கள் வந்தேறிகளாக நுழைந்தனர். என்பதும் ஆகும். காடு, மலைப் பகுதிகளில் வாழும் குறும்பர், இருளர், தொதவர், இலங்கைவாழ் வெட்டர்கள் போன்றவர்களைத் தொல் திராவிடர் என்கின்றனர். தென்னிந்திய இனக்குழுவினருள் நீக்ரோ அல்லது நெக்ரீத்தோ(நேபசவைழ) கூறுகள் உள்ளன என்று பலரும் கருதுகின்றனர். இந்த நெக்ரீத்தோ கூறுகள் ஆபிரிக்க ஈஸ்திரேலியச் சார்புடையவையல்ல மலேசியா சார்புள்ளது என்றும் கருதப்படுகிறது. மலேசியாவில் சகப்(ளுயமயளை) இனக் குழுவினருக்கும் ஒப்புமைகள் தர்ஸ்டன் சுட்டியுள்ளார். தொல்பழங்காலத்திலிருந்தே தென்னிந்தியா, மலேசியா, பசுபிக் தீவுகள் ஆகியவற்றிற் கிடையே வணிகத் தொடர்பு இருந்தமையினால் மலேசியா மற்றும் பசுபிக் தீவு மக்கள் சிலர் தென்னிந்தியாவில் குடியேறித் தென்னிந்தியருடன் கலந்திருக்க வேண்டும். மலேசிய மொழியில் இந்திய, குறிப்பாக தென்னிந்திய சொற்கள் மிகச்சிலவே. இதிலிருந்து மலேசியாவில் பழங்காலத்தில் குடியேறிய தமிழர் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்க வேண்டும் என்றும் தென்னிந்தியாவில் குடியேறிய மலேசியா இனக்குழுவினர் மிகச் சிலரே என்றும் தெரிய வருகிறது.

மற்றொரு கோட்பாடு திராவிட மொழிகளைப் பேசிய இனக் குழுவினருடனும் முண்டா மொழிகளைப் பேசிய இனக் குழுவினரும் பெருமளவுக்கு கலந்துவிட்டனர் என்பதாகும். முண்டா மொழிகளைப் பேசியவர்கள் எவரும் தமிழகத்தில் எக்காலத்திலும் வாழ்ந்ததாக கூற ஆதாரமில்லை. கோதாவரி ஆற்றின் எல்லைவரை முண்டா மொழிகளின் தாக்கம் உள்ளது. எனினும் அதற்கு தெற்கே அத்தாக்கம் இல்லை. சிறுசிறு இனக்குழுவினரின் பேசும் மொழிகளையெல்லாம் துல்லியமாக கணக்கெடுத்தப் பின்னரே இதுபற்றி இறுதியாக கூறமுடியும். (இப்பொழுது பாக்கிஸ்தானி லுள்ள) பலுசிஸ்தான் வாழும் பிராகூயி மக்கள் பேசும் மொழியானது திராவிட மொழி என ஏற்கப்பட்டுள்ளது. திராவிடர்கள் இந்தியாவுக்குள் வடமேற்கு கணவாய்கள் வழியாக நுழைந்தனர் என்னும் தருக்கத்திற்கு இது ஒரு சான்றாக கூறப்படுகிறது. காலப் பகுதியின் கான் (சிற்றரசன்) ஆளுகையில் உள்ள இடங்களிலே பெருமளவுக்குப் பிராகூயி மக்கள் வாழ்கின்றனர், என்றாலும் பலுசிஸ்தானின் பிற பகுதிகளிலும் அவர்கள் ஓரளவிற்கு காணப்படுகின்றனர். தாங்கள் அலெப்போவிலிருந்து இங்கு வந்து குடியேறியதாக அவர்கள் கருதுகின்றனர். உடல் தோற்றத்தில் அவர்கள் பட்டாணியர், பலுச்சி மக்கள் ஆகியோரிடமிருந்து வேறுபட்டுள்ளனர். அவர்கள் பெரும்பாலும் ஆடு, மாடு, மேய்ப்பவர்கள். பிராகூயி மொழியில் இந்தோ–ஆரிய மொழிகளில் இருந்து கடன் பெற்ற சொற்கள் மிகப்பல இருந்தபோதிலும் அடிப்படையில் அது இந்தோ–ஆரிய மொழி அல்ல: தென்னிந்தியாவில் வழங்கும் திராவிட மொழிகளைப் போன்றதாகும் அது ஒட்டு நிலை மொழியில் உள்ள பெயர்ச்சசொல், அடைபெயர் போன்ற இலக்கணக் கூறுகளெல்லாம் பெருமளவுக்கு திராவிட மொழிகளைப்போன்றவை. இதுவும் திராவிடர்கள் இந்தியாவிற்குள் புலுசிஸ்தான் வழியாக நுழைந்தனர் என்பதற்கு ஆதாரமாகக் கூறப்படுகிறது. பிராகூயி மொழி திராவிட மொழியாக இருந்தபோதிலும் அதனைப்பேசும் மக்கள் (தென்னாட்டு) திராவிட இனத்தவர்கள் அல்லர் என்றும் துருக்கிய–இராணிய இனத்தவர்களே என்றும் மாந்தவியலாளர் கருதுகின்றனர். பழங்காலத்திலேயே திராவிட மொழி பேசுநர் தாக்கம் அப்பகுதியில் இருந்தது என்பதை ஏற்றுக்கொண்டால் தெற்கிலிருந்து வடக்கு/வடமேற்கு நோக்கி சென்ற திராவிடர்கள் பலுசிஸ்தானில் குடியேறினர் என்று ஏன் கருதக்கூடாது?

இராஜபுதனத்திலும் நடு இந்தியாவிலும் வில்லி மொழி, சந்தாலி மொழி, போன்ற திராவிட மொழிகள் பேசப்படும் அடிப்படையில் அப்பகுதிகளி யெல்லாம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் திராவிட மொழி பேசுநர் பரவினர் என்பது உறுதியாகிறது. மொகஞ்சதரோ முத்திரை எழுத்துக்களும் அநேகமாக திராவிட மொழி சார்ந்ததாகவே கருதப்பட வேண்டும். யூப்ரடீஸ் ஆறு தெற்காக வளையுமிடத்தில் (மிதன்னி) பேசப்படும் காரியன் (Kharian) அல்லது ஹரியன் (Hurrian) மொழியும் ஒலியனியல்,இலக்கணம், சொல்வளம் ஆகியவற்றின் அடிப்படையில் திராவிட மொழிகளைச் சார்ந்ததாகவே இருக்கின்றது. கி.மு 1500ஐ ஒட்டி மிதன்னி அரசரும் எகிப்திய அரசரும் தம்முள் போரிட்டுக் கொண்டனர். அவர்களுள் திருமண உறவும் இருந்தது. அதுபோலவே எலாம் மொழியும் பிராகூயி மொழியும் உறவுள்ளவை மிதன்னியில் பேசப்பட்ட மொழியும் பிராகூயி மொழியும் உறவுள்ளவை. மிதன்னியில் பேசப்பட்ட மொழியும் எலாம் மொழியும் மெசொபதாமியாப் பகுதியில்தான் இருந்தன. சுமேரிய மொழியும் ஒட்டுநிலை மொழியே மெசொபதாமியாவிலும் ஈரானிலும் உள்ள

பல இடப்பெயர்கள் திராவிட மொழிப்பெயர்களைப் போன்ற உள்ளன என்பதை அண்மையில் ஷோனார் கண்டுபிடித்துள்ளார் (அமெரிக்க கீழையியல் ஆய்வு கழக இதழ், JAOS, 1930 இல் பிரவுன் எழுதிய கட்டுரையைக் காண்க)

இந்தியர் குடியேற்ற எச்சங்கள் எகிப்தில் மெம்பிஸ் அருகில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன 'ஊர்' என்னும் பெயரே தூய தமிழ் சொல். தமிழிலக்கியத்தில் ஊர் தென்னாட்டில் உள்ள சிற்றூர் அல்லது நகரத்தைக் குறிக்க வழங்கி வருகின்றது மெம்பிஸ் அகழாய்வில் மிக அழகான அடுக்கு ஒன்றில் நீல (கிரி) மலையிலிருந்து போன அமெசானைட் மணி கண்டெடுக்கப்பட்டுள்ளது இவற்றுக்கும் திராவிடர் தோற்றத்திற்கும் என்ன தொடர்பு திராவிட மொழி பேசுநர்களுடன் அம்மெழியும் சென்றுள்ளது என்பதே இதிலிருந்து திராவிடர்கள் மேற்காசிய பகுதியிலிருந்து இந்தியாவிற்குள் வந்தேரியவர்கள் என்று நாம் மேம்போக்காக கருதி விடலாமா? இல்லை உண்மை இதற்கு நேர்மாறானது.

வேதங்களில் அநாச எனக் குறிப்பிடப்படும் தாசர்களும் தஸ்யுக்கங்களும் திராவிடர்களா என்பதும் ஒரு புதிராகவே உள்ளது. அநாச என்பதற்கு வேறுபட்ட பொருள்கள் கூறப்பட்டுள்ளன இது திராவிட இன குழு மக்களுள் சப்பை மூக்கினராக இருந்தவர்களைச் சுட்டுவதற்காக 'மூக்கல்லாதவன் என்ற பொருளில் வழங்கியது என்பவர் சிலர். அச்சொல்லுக்கு ஆஸ்யராஹித அதபவது பேச்சற்றவர்கள் என்ற பொருளைச் சயனர் தருகிறார். பேச்சற்றவர்கள் என்றால் பொருளைச் சயனர் தருகிறார். பேச்சற்றவர்கள் என்றால் ஊமையர்கள் என்று பொருளல்ல பண்பட்ட சமற்கிருதம் போன்று அல்லாமல் புரியாத மொழியை பேசினவர்கள் உன்ற பொருளைத்தான் கொள்ள வேண்டும் தஸ்யுக்களின் இனச்சார்பு குறித்து மனம்போனவாறு பல கருத்துகள் உள்ளன அவர்கள் இரானியர்கள் என்பதும் ஒரு கருத்து. ஆனால் தஸ்யுக்கள் முல்லை பாலை நிலங்களில் வசித்து வந்த பண்படாத இனக் குழுவினர் தெளிவான மொழியோ சமயக்கூறுகளோ இல்லாதவர்கள்.ஆகியோரை சுட்டுகிறது என்பதே பொருத்தமாகும். ஐத்தரேய பிராமனத்தில் விசுவாமித்திர முனிவரின் மகன்கள தஸ்யுக்கள் என்றழைக்கப்படுகின்றனர். ரிக்வேத சம்ஹிதையின் மூன்றாம் மண்டலத்தில் விசுவாமித்திரரின் பெயரும் வருகிறது. சில அறிஞர்கள் கூறுவது போல் திராவிடர்கள் தஸ்யுக்கள் என்றால் விஸ்வாமித்திரரும் திராவிடராகத்தான் இருக்க வேண்டும். ஆனால் உண்மையில் தஸ்யுக்களை ஆரியலல்லாதவர்கள் எனக் கூறஇயலாது. ஆரியர்கள் இந்தியாவிற்குள் படையெடுத்ததாக கூறப்படும் நிகழ்ச்சிக் காலத்தில் பஞ்சாப் – கங்கை சமவெளிப் பகுதியில் வசித்த தஸ்யு – திராவிடர்கள் தோல்வியுற்று தென்னிந்தியா சென்று குடியேறினர் என்றும் வாதம் ஆதாரமற்றது.

ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் மக்கள் குடியேற்றம் இல்லாதிருந்த பின்னர் முதலில் வந்தேறிகளாக திராவிடர்களும் அதன் பின்னர் ஆரியர்களும் நுழைந்தனர் என்ற கோட்பாடுகள் ஒட்பம் இன்றிப் பின்பற்றி வருகின்றனர். எடுத்துக்காட்டாக ஆர். பிளெஞ்ச் எம்.ஸ்பிரிக்ஸ் 1997இல் தொகுத்து வெளியிட்ட தொல்லியலும் மொழியும்: (1) கோட்பாட்டு ஆய்வுநெறிக் கருத்தோட்டங்கள் என்னும் நூலில் ரென்புரூ பின்வரும் முடிவைக் கூறுகிறார்:–

"(மத்திய கிழக்குப் பகுதிகளில் இருந்து வேளாண்மைத்தொழில் மக்கள் பண்டு பரவத்தொடங்கியது பற்றிய) தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் தொல் இந்தோ ஐரோப்பியன், தொல் ஆப்ரோ–ஏசியாடிக், தொல் எலாமைட், திராவிடம், தொல் அல்டாய்க் மொழிகள் ஆகிய மொழிகளைப் பேசியோர் அனைவரும் மிகச் சுருங்கிய மையக் கிழக்குப் பகுதியில் (சுமோரியா, ஏலாம், இன்றைய துருக்கி) உடன் உறைந்து இருக்கவேண்டும். இம்மொழிகள் எல்லாம் (நாஸ்திராடிக் மொழி யியலாளர் கூறுவது போல) தொடர்புடையதாக இருப்பது உண்மையானால் அவர்கள் எல்லாம் அப்பகுதியைவிட்டு பிரிந்து விலகிய கி.மு.8000–6000 காலகட்டத்திற்கு முன்னர் ஒரு சில ஆயிரம் ஆண்டுகள் இம்மொழி அனைத்திற்கும் மூலமான நாஸ்திராடிக் மொழி அந்நிலப்பகுதியில் பேசப்பட்டிருக்க வேண்டும் என்பது தெல்லியல் கண்டு பிடிப்புகளுக்கும் ஒத்து வரும் வாதமாகும்

இவ்வாறு தொல் – நாஸ்திராடிக் பேசியவர்கள் அனைவரும் 10000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருங்கே மையக்கிழக்குப் பகுதியில் வாழ்ந்திருந்தார்கள் என்ற இந்தக் கோட்பாட்டையும் (அதன் தொடர்பான "இந்தியாவுக்குள் அங்கிருந்த திராவிடர்கள் இறங்கியது சுமார் கி.மு 3000ஐ ஒட்டித்தான்" என்ற கோட்பாட்டையும்) பொய்ப்பிப்பது திராவிட மொழிகளுக்கு ஆஸ்திரேலிய பழங்குடி மக்களின் மொழிகளுக்கும் இடையே உள்ள நெருங்கிய பிணைப்புஆகும். இதுபற்றி காலின் மாசிகா 999இல் கூறியது குறிப்பிடத்தக்கது. "தென் ஆசியாவில் கழிபழங்காலத்தில் ஒரு பொதுவான மூதாதை மொழி இருந்திருக்க வேண்டும். தற்போதைய மாந்தர் இனம் (சுமார் 1இலட்சம் ஆண்டுகளுக்கு மன்னர்) உலகமெங்கும் பரவத்தொடங்கிய காலகட்டமே தொல் திராவிட மொழியின் தொடக்க காலம் ஆகும்" (It may a ouestion of a veru ancient common substratum in south asia pre-Dravidian going back even tothe original peopling of the world: **'the Year Book of South Asian Languagcs and Linguistic' 2001 New Delhi)**

ஏறத்தழ ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தற்கால மாந்த இனம் அல்லது Antomically Modern Humans ஆப்ரிக்காவில் தோன்றியது என்று கண்டோம். முதல் தாய்மொழி ஏறத்தாழ 50000 ஆண்டுகளுக்கு முன்னர் உருவானது எனக் கருதப்படுகிறது. இன்றைக்கு ஒரு இலட்சம் – 50000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து தவறான கருத்துக்கள் எப்பொழுதும் விரைந்து பரவுகின்றன. அப்படியே ஆரிய இனம் பற்றிய கருத்தும் ஐரோப்பா முழுவதும் சடுதியில் பரவியது. இந்த விளைவைக்கண்ட மாக்ஸ் முல்லர் பின்காலத்தில்1888இல் வெளியிட்ட சொற்களின் பிறப்பு வரலாறும் ஆரியர்களின் "பூர்வீக" நிலமும் என்னும் தம் நூலின் 120ம் பக்கத்தில் பின்வருமாறு விளக்கினார். "ஆரியன் என்று நான் கூறும் பொழுது இரத்தம், எலும்பு, மயிர், மண்டையோடு போன்றவற்றின் அடிப்படையில் கூறவில்லை. ஆரிய மொழியைப் பேசியவன் என்பதே என் கருத்து இதை நான் அடிக்கடி கூறியுள்ளேன். ஒரு மொழியியல் அறிஞர் "நீள் மண்டையர் அகராதி" என்றோ "அகல மண்டையர் இலக்கணம்" என்றோ குறிப்பிடுவது. எவ்வளவு தவறோ அவ்வளவு(தவறு) ஆரிய இனம், ஆரிய இரத்தம், ஆரியக்கண், ஆரியமயிர் என்று மாந்தவியளாலர் குறிப்பிடுவதுமாகும்". ஆனால் அந்த விளக்கத்தை அவர் தருவதற்கு முன்னர் ஆரிய

இனக்கோட்பாடு வேரூன்றி பலர் அதனை மும்முறமாகப் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். இன்று செருமானிய முற்றதிகாரி இட்லர் ஆட்சியில் யூதர்கள் கொடுமை படுத்தப்படுவதும் ஆரிய இனக் கொள்கையின் வேண்டாத விளைவுகளில் ஒன்றுதான். எது எப்படி இருந்தபோதிலும் உண்மையை நாடுவோரும் அறிவியல் அறிஞர்களும் 'ஆரிய இனக் கொள்கை' என்பதை முழு அபத்தம் என்றே கருதுகின்றனர்.

திராவிட இனக்கோட்பாட்டையும் இந்த நோக்கில்தான் காண வேண்டும். ஆரிய இனக்கொள்கை பொலியானது: திராவிட இனக்கொள்கை அதைவிடப்போலியானது. தென்னிந்தியாவில் வழங்கிய தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளைப் பேசியவர்களைச் சுட்டுவதற்காக திராவிடம் என்ற சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மொழிகளுக்குள் மிகப்பழையதுதமிழ் என்பது வெளிப்படை **தமிழிலிருந்துதான் ஏனைய திராவிட மொழிகள்** தோன்றின என்பது என்கருத்து.அண்மையில் சிலர் கன்டன மொழியின் தொன்மையை மிகைப்படுத்திக் கூறியுள்ளனர்.இருப்பினும் கன்டனம், தெலுங்கு, மலையாளம், ஆகியவை சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மன்னர்தான் பண்பட்ட தனித்தனி மொழிகள் ஆயின என்பதும் அந்தக்காலகட்டத்தில் தென்னிந்தியாவில் சமஸ்கிருதமொழி ஆளுமை பெருகிருந்ததே அதற்குக்காரணம் என்பதுமே ஏற்கத்தக்கதாகும் ஆதியில் தமிழ்மொழியையும் அதிலிருந்து உருவான மொழியையும் சுட்டுவதற்குத்தான் திராவிட எனும் சொல் பயன்படுத்தப்பட்டது. தொல் பழங்காலத்தில் இனக்குழுவினர் ஆங்காங்கு குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மட்டும் வாழ்ந்த பொழுது பண்பாட்டுப்பரவல் ஒரே சீராக இருந்ததில்லை. அந்தந்த அனக்குழுவின் சூழ்நிலைக்கேற்ப ஒழுக்கம், மனநிலை, உடலமைப்பு ஆகியவற்றில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டன. உணவு, பருகுதல், உடை ஆகியவற்றிலும் ஒழுக்க நடைமுறைகளிலும் தனிமாற்றங்கள் ஏற்பட்டன. அகமண முறை உருவாகியது. ஓர. இனக்குழுவின் வாழ்க்கைச்சூழ்நிலை, மனநிலை ஆகியவற்றிற்கேற்ப கட்டமைப்புகள் உருவாகி தலைவர்களும் தோன்றினர். இனக்குழு உறவு முறையிலிருந்து அந்தக்குழுவை அடையாளங் காட்டும் வாழ்க்கை முறையும், மண உணர்வுகளும் உருவாகியன என்பது பண்டைய இந்திய வரலாற்றிலுமிருந்தும் குறிப்பாக தென்னிந்திய வரலாற்றிலிருந்தும் நாம் காண்பதாகும். இத்தகை குழுக்கள் இனக்குழுவாகவோ, சாதியாகவோ, தொழிற்குழுவாகவோ இருக்கலாம். உத்தகைய குழுவாயினும் சரி இக்குழுக்கள் குடிநாயக முறையில் அரசும், குமுகாயமும் முன்னேறவகை செய்தன. திராவிட மொழிகள் பேசும் தென்னாட்டில் இருந்து மக்கள் பண்முகம் கொண்ட, ஆனால் அதே நேரத்தில் தென்னிந்தியப் பண்பாடு அல்லது தமிழ்ப்பண்பாடு என்று ஒட்டு மொத்தமாகக் குறிப்பிடும் அளவுக்குப் பொதுமைப் பண்புகள் நிறைந்த நாகரீகத்தை உருவாக்கினர்.

ஓரிடத்தில் பல நூறு ஆண்டுகள் மக்கட் குழுவினரின் குறிப்பிட்ட வாழ்க்கைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வரும் பொழுது அந்தந்தப் பகுதியின் தட்ப வெப்ப நிலைகள் போன்ற காரணங்களால் மாந்த உடல் கூறு மாறுதலடைகிறது.இவ்வாறு உடல் கூறுகள் மாறுதலடைந்த குழுக்களை தனித்தனி இனம்( சுயஉந) எனக் குறிப்பிடப்படுவது அறிவியலுக்கு ஒவ்வாது தோலின் நிறம், மூக்கின் வடிவம், ஆகியவையெல்லாம் தட்பவெட்பம், புவியியல் சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்தவையே இன்று தமிழர்களை விட மலையாளிகளே சிவப்பாக உள்ளனர். அவர்களை விட மங்களூர் மேலும் சிவப்பாக உள்ளனர்.

ஆர்ய எனும் சொல் பயன்படுத்தப்படும் இடங்களிலெல்லாம் ஒன்று அது ஆயர்வத்தம், மத்யதேசம், தக்ஷினபதம்(திராவிடம்) என மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆயவர்த்தம் அல்லது ஆரியநாட்டில் தண்டகாரணியமும் அடங்கியிருந்ததாக பதிற்றுப்பத்து கூறுகிறது. திராவிட தேசத்தில் வசித்து, திராவிட மொழி பேசியவன் திராவிடன் எனப்பட்டான். இந்திய இலக்கியம் எதுவும் ஆர்ய இனத்தான், திராவிட இனத்தான் என்று யாரையும் பிரித்துக் கூறுவது இல்லை பண்டைய தமிழர்களின் இருப்பிடம் திராவிடம் ஆகும். அங்கம், வங்கம், மகதம் போல திராவிடமும் ஒரு நாட்டுப்பெயயரே தமிழ் எனும் சொல்லில் இருந்துதான் தமிழ் – தமில் – தமில – த்றமில – த்றமிட – திராவிட என்றவாறு திராவிட எனும் சொல் உருவானதாக தெரிகிறது.

இன்று நாம் திராவிடர் என்னும் பொழுது, தமிழ், மலையாளம் பேசும் மக்களை குறிக்கின்றோம். இது தமிழிலக்கியத்திலும், வடமொழி இலக்கியத்திலும் உள்ள செய்திகளைக் காண்போம். தமிழிலக்கியத்தின்படி வேங்கட மலைக்கு தெற்கிலுள்ள நிலப்பகுதி முழுவதும் தமிழகம் ஆகும். ஆந்திரதேசம், மைசூர்–கன்டனம் பகுதிகளும் 'தமிழ் நாட்டிற்குள்' அடங்கியவையல்ல தென்னிந்திய பாகுபாட்டின் சிறப்புக்கூறுகளாக குறிப்பிடத்தக்கவை திணைப்பாகுபாடு (ஐந்து திணைகள்) தன்மையை விரும்புதலும் வெம்மையை வெறுத்தலும் ஆசியாவின் பிற பகுதிகளில் உள்ளது போன்ற பீடபூமிகள் இன்மை சுமேரிய – கால்தியா பகுதிக்கு உரிய திராட்சை, அத்திப்பழம் போன்றவை இன்மை ஆகியவை குறிப்பிடத்தக்கது.

## அகழ்வாய்வுச் சான்றுகள்

பண்டைய நாகரீகத்தையும் வரலாற்றையும் தெளிவா விளக்கத்தக்க, தடயங்கள் கிடைக்கக்கூடியப் பல இடங்கள் தென்னிந்தியாவில் இருந்தபோதிலும் தொல்பொருள் ஆய்வுத்துறை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும் செயல்ப்பட்டு, அவ்விடங்களில் அகழ்வாய்வு செய்யாமல் இருப்பது வருந்துதற்குரியது. இத்துறையில் முன்னோடியாக செயல்பட்டு சிறந்த பணிசெய்த புரூஸ் புட் பெயர் நினைவிற்கொள்ளத்தக்கது.
நீல(கிரி) மலைப் பகுதியின் தொன்மை வரலாறுடறை அகழ்வாய்வு அடிப்படையில் ஆய்வு செய்த பீரீக்ஸ் இன் பெயரும், ஆதிச்சநல்லூரில் அகழ்வு செய்த அலெக்ஸாண்டர் ரியா பெயரும் குறிப்பிடத்தக்கவை. தென்னிந்திய அகழ்வாயின் முன்னோடிகளாகிய இவர்கள் கண்டெடுத்தத் தொல்பாருள் எச்சங்களின் அடிப்படையில் நான் எனது தருக்கத்தைத்தொடர்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் வல்பழங்காலத்தில் இடுகாடாக இருந்த 114 ஏக்கர் நிலப்பகுதியில் அகழ்வாய்வு செய்தவர் ரியா ஆவார் தென்னிந்தியாவில் புதுக்கற்காலத்திற்குப் பின் வந்த இரும்புக்காலத் தொடக்க நிலைக் காலகட்டத்தைச் சார்ந்தவை ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளாகும். இத்தாழிகளையே போன்றவை புதுக்கோட்டை சமஸ்தானம் அன்னவாசல், பழனி, ஆணமலைப் பகுதிகள், நீலமலை(கிரி), கோயம்புத்தூர், சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காட, அனந்தப்பூர்,பெல்லாரி, கருநூல் ஆகிய மாவட்டங்கள் இவற்றிலெல்லாம் கிடைத்துள்ளன.

இதுவரை பழங்கற்கால மனிதன் குடியிருப்பு எச்சங்கள் கிடைக்கவில்லை. எனினும் அவர்கள் பயன்படுத்திய பல்வேறு வகையான கற்கருவிகள் ஏராளமாகக் கிடைத்துஉள்ளன. பிற நாடுகளில் இருந்த பழங்கற்கால மாந்தனைப் போல் அல்லாமல், தென்னிந்தியப் பழங்கற்கால மாந்தன் அவ்வளவு காட்டுவிலங்காண்டித்தனம் வாய்ந்தவனல்ல என்று நான் சொன்னதற்கு இக் கருவிகளே ஆதாரமாகும். தென்னிந்தியாவில் தாராளமாகக் கிடைக்கும் குவார்ட்சைட் (Quartzite) கல்லிருந்து உருவாக்கப்பட்டவை இக்கருவிகள் தக்காணப் பீடபூமியின் மையத்தில் பெல்லாரிக்கு அருகிலும் மைசூர் சமஸ்தானப் பகுதிகளிலும் கிடைத்துள்ள கருவிகள் அங்குத் தாராளமாகக் கிடைக்கும். இரும்புக்கனிமம் குவார்ட்சைட்டால் ஆனவை. பழங்கற்கால கருவிகள் பயன்பாட்டு அடிப்படையில் பத்து இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. புரூஸ் புட் நூலின் படம் 1-இல் கண்டுள்ளபடி பெரும்பாலான கருவிகள் நீள்வட்ட வடிவில் இருந்தன. கோடாரி,குறும் ஈட்டி, குத்துக்கோல், சப்பைக்கல், மழு, கத்தி, சுரண்டி, கல்லுருண்டை, சுத்தியற்கல், கேயவையே மேற்சொன் பத்து வகைக் கருவிகளாகும். அந்தப்படத்தில் 2204-7 எண்ணுள்ள கருவிகள் வளைந்த சுரண்டுமுனை கொண்டவையாகும்.

'பசுபிக் பெருங்கடல் தென்பகுதித் தீவுகளில் பெரியமரக்கட்டைகளின் நடுவில் நெருப்பு வைத்துக் கொளுத்திய பின்னர் கருகியபாகத்தை குடைந்து எறிந்து **கெனோ** என்னும் படகை தயாரித்து வந்தனர். அவ்வாறு தயாரிக்கும் பொழுது சுரண்டி எடுக்க இக்கருவி மிக பொருத்தமானதாக இருந்திருக்கும். வேட்டையாடிக் கொன்ற விலங்குகளின் தோலை உரிக்கவும் சுரண்டி பயன்படுத்தப்பட்டிருக்கும் புதுக்கற்கால மக்களும் இவற்றைப் பயன்படுத்தினர். பழங்கற்கால மக்களுக்கு நெருப்பின் பயன் தெரிந்திருக்கும் எனினும் நெருப்பின் தடயமோ சுட்டமண்கலத் தடயமோ கிடைக்கவில்லை. இக்கருவிகளின் நேர்த்தியைக் கண்ட புரூஸ் புட் இவற்றை உருவாக்கியவர்கள் அறிவுக்கூர்மை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்கிறார்கள். பல இடங்களிலும் இப்பழங்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ள போதிலும் முக்கியமான இடம் அலிசூர் மலையே ஆகும்.

தக்காணத்தில் தாராளமாக கிடைக்கும் கருங்கற்பாறைகளைக் கொண்டு (Black Trap Rocks) புதுக்கற்கால மக்கள் கருவிகளைச் செய்தனர். சிவப்பு நிறமுடைய குவார்ட்சைட் பாறைகளை அவர்கள் விரும்பவில்லை. காரணம் அவற்றைவிட கருங்கல் வலுவானது நீடித்து உழைப்பது புரூஸ் புட் தொகுத்தவற்றுள் புதுக்கற்காலக் கருவிகள் 1000க்கு மேல் உள்ளன. அவற்றை அவர் 78 வகைகளாப் பிரித்துள்ளார் வழவழப்பாக்கப்பட்டவை 41வகைகள் மீதி 37ம் வழவழப்பாக்கப்படாதவை.(புரூஸ் நூலின் படம் 3). புதுக்கற்காலத்தில் வண்ணம் ஊட்டப்பட்ட மண்களங்களும், பச்சைநிற அமொசான் கல், பெல்ஸ்பர் (felspar) போன்ற இரத்தினக் கற்களும் பயன்படுத்தப்பட்டன. நண்ணிலக்கடலில் க்ரீட் தீவு, கிரேக்க நாடு, போன்ற சில மேலாநாடுகளிற் போல தென்னிந்தியாவிலும் புதுக்கற்காலத்தை அடுத்து உடனடியாக இரும்புக்காலம் தொடங்கிவிட்டது. புதுக்கற்கால மக்கள் இரும்பின் பயன்காடடை அறிந்ததும் அது கருங்கல்லை விட வலுவானதும் நீடித்துழைப்பதும் ஆகையால் தைப்பயன்னடுத்தினர். புதுக்கற்காலக் குடியிருப்பு இடங்களில் இரும்புக்காலத்தைச் சார்ந்த சுடுமண் கலங்கள் கிடைத்துள்ளன. அதே காலகட்டத்தில் சிந்துவெளிப் பகுதிகளில் இருந்த மக்கள் செம்புக்கருவிகளை மட்டுமே பயன்படுத்தி வந்த

போதிலும் தென்னிந்தியாவில் செம்உ அல்லது வெண்கலக் கருவிகள் பயன்படுத்தப்படாமல் இரும்புக்கருவிகள் பயன்படுத்தப்படாமல் இரும்புக்கருவிகள் தாம்பயன்படுத்தப்பட்டன. செம்பு மற்றும் வெண்கலத்தைப் பயன்படுத்திய மக்களோடு கொண்ட தொடர்பால் இரும்புக்கால பிற்பகுதியில் கலப்பு மாழைகள் செய்யவும் கற்றுக்கொண்டனர். இரும்புக்காலத் தொடக்கம் கி.மு.நான்காயிரத்துக்கு முன்னர் இருந்திருக்க வேண்டும். படம் -42இல் காணப்படும். சங்கு வளையல்கள் இரும்புக்கால தொடக்கத்தை சார்ந்தவை. ஐப்பான் தீவுகளில் அகழ்வாய்வு செய்தவரும் மாழைத்தொழில் அறிஞரும்ஆன பேராசிரியர் கௌலாந்து (புழறடயனை) கருதுவது தற்செயலாக இரும்புக்கனிமத்தை உருக்கினால் இரும்பு கிடைப்பது தென்னிந்தியாவில்கண்டுபிடிக்கப்பட்டு இருக்கவேண்டும். எனவேதான் நிறைய இரும்புக்கருவி எச்சங்கள் கிடைத்துள்ளன ஐரோப்பாவில் இரும்புக் கருவிக்காலம் தொடங்குவதற்கு முன்னரே தென்னிந்தியாவில் அது தொடங்கி விட்டதென்பதாகும். அப்படியானால் க்ரீட் தீவு மக்கள் எப்படிப் புதுக்கற்காலத்திலிருந்து நேரடியாக இரும்புக்காலத்திற்கு முன்னேறினர் ? க்ரீட் தொல் வரலாற்று ஆய்வாளர்கள்தான் இதற்கு விடை கூறவேண்டும். கற்கால மக்கள் காட்டுப்பகுதிக்குள் வாழ்ந்தவர்களாகத் தெரியவில்லை. அவர்கள் குடியிருந்த இடங்கள் குன்று சார்ந்த சமவெளிப் பகுதிகளேயாகும். இரும்பு கண்டுபிடிக்கப்பட்டு இரும்புக்கருவிகள் உருவாக்கப்பட்ட பின்னர்தான் வனப்பகுதிகளுக்குள் மாந்தன் குடியேறியிருக்க வேண்டும். பின்னர்தான் வனப்பகுதிகளுக்குள் குடியிருப்பிடம் அமைந்திருக்க வேண்டும்.

இரும்புக்காலப் பிற்பகுதியில் நாகரீகம் வளர்ந்தது. வெண்கலம் போன்ற மனழைக்கலவைகள் செய்யத் தொடங்கினர். இரும்புக்கருவிகளோடு தங்கம், வெண்கலம், செம்பு ஆகியவற்றாலும் பொருட்கள் கருவிகள்,கலங்கள் செய்யப்பட்டன. சுடுமண்கலம் உருவாக்கம் மிக முன்னேறியது என்பதை இடுகாடு களிலும் பெருங்கற்கால கல்லறைகளிலும் இருந்து கிடைந்த எச்சங்களிலிருந்தும் அறிகிறோம். இந்தக் காலகட்டத்தில்தான் திராவிடர்கள் தென்னாட்டிற்கு வந்து குடியேறினர் என்று சிலர் கருதுகின்றனர். தென்னாட்டில் பழங்கற் காலப்பண்பாடு, புதுக்கற்காலப் பண்பாடு ஆகியவற்றோடு பின்னிப்பிணைந்து இரும்புக் கால நாகரீகம் அமைந்துள்ளது என்பதை மறந்துவிட்டு இவ்வாறு அவர்கள் கூறுகின்றனர். சில கோட்பாடுகளை அறிஞர் சிலர் ஒருவர் பின் ஒருவாறாக கூற அவர்களைப் பின்பற்றுவோரும் நுண்ணறிவின்றி கிளிப்பிள்ளை போல அவற்றையே கூறிவருவதால் தவறானவையானாலும் நிலைத்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாக அசோகர் புத்த மதத்தை பின்பற்றியவர். என்பது அப்படிப்பட்ட ஒரு கோட்பாடாகும். (அசோகர் காலத்தில் புத்தரின் அறிவுரைகள் ஒரு மதமாக உருவெடுத்திருந்ததாக மெய்பிக்கவே இயலாது) காலப்போக்கில் ஆதாரமற்ற ஒரு கருதுகோளும் வலுவானதாக ஏற்கக்கப்பட்டு விடுகிறது. திராவிடர்கள் நண்ணிலக் கடல் பகுதியிலிருந்து குடியேறிய இனத்தினர் என்னும் கோட்பாடும் அத்தகையதேயாகும். இத்தவறான கொள்கையை மறுக்கும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டுள்ளது.

திராவிடர்கள் வந்தேரிகள் என்னும் கருதுகோளை உடையவர்கள் கூட ஒன்றை மறுக்கமுடியாது. அது என்ன? தென்னிந்தியாவில் பழங்கற்காலத்திலிருந்து இன்றுவரை இடையீடின்றி நிலைப்பெற்றுள்ள பண்பாட்டுவழிமுறை ஒற்றுமையே அது. குறிப்பாக மட்கலங்கள், ஈமச்சின்னங்கள் ஆகிய இரண்டிலும் இத்தகைய ஒருமைப்பாடு காணப்படுகின்றது. முதலில் மட்கலங்கள் கற்காலத்திலிருந்து தென்னிந்தியக் கைத்தொழில்களில் சிறந்து விளங்குவது மட்கலம் வனைதல் ஆகும். மட்கல உருவாக்கத்தில் நான்கு கால கட்டங்களை காணவாம். புதுக்கற்காலம் அக்காலத்திற்கும் இரும்புக்காலத்திற்கும் இடைப்பட்ட பகுதி, இரும்புக்காலம், இரும்புக்காலத்திற்குப் பிற்பட்ட அதாவது வரலாற்றுக்கு சற்று முந்திய (புரோடா ஹிஸ்டாரிக்) காலம் ஆகிய நான்குமே அவை புதுக்கற்கால மட்கலம் மங்கிய நிறத்திலும் கரடு முரடாகவும் அமைந்தது. இரும்புக்கால மட்கலம் பளிச்சென்னும் ,நிறத்துடன் மழமழப்பானது. வடிவமைப்பும் கலைத்திறன் வாய்ந்தது. தென்னிந்திய மட்கலங்களிலும் மண்சாடிகளிலும் மாந்த உருவங்கள் தீட்டப்படாதது குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் நீலமலையில் கிடைத்த மட்கலங்களில் மாந்த உருவங்களும் விலங்கு உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. நீலமலைக் கல்லறைகளில் கிட்டிய மட்கலங்கள் குயவன் சக்கரத்தில் செய்யப்பட்டவை அடிப்பக்கம் கூறாவோ, கோளவடிவமாகவோ உள்ளது. கோடுகளும் விளிம்புகளும் கையால் உருவாக்கப்பட்டுள்ளன தக்கணத்தில் இலைச்சத்திர வேலைப்பாட்டுடன் கூடிய பானைகள் அரைக்கோளக்கும்பா பூ வேலைப்பாடுகளுடன் அமைந்த கலங்கள் ஆகியவை கிடைத்துள்ளன வேலைப்பாடற்ற கலங்களுடன் அழகுவேலை நிறைந்த கலங்களும் கிடைத்துள்ளன. பெரும்பாலானவை கையால் செய்யப்பட்டவை ஒரு சில குயவன் சக்கரத்தில் உருவாகியவை சமசுகிரதப் பண்பாடு தென்னிந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்னரே மட்கலங்கள் கவின் வேலைப்பாடு உருவமைப்பு ஆகியவற்றில் நேர்த்தியடைந்து விட்டன அத்தகைய அழகிய சாடிகள் எகிப்து, கிரேக்கம், எத்ருஸ்கன் ஆகிய நாடுகளின் மடகலங்களை மிகவும் ஒத்துள்ளன. ட்ராய் நகரத்தில் கண்டெடுத்த கலங்களைப் போல பல கால்கள் அமைந்த ஏராளமான புதுக்கற்கால மட்கலங்களும் கிடைத்துள்ளன பல்லாவரத்தில் கிடைத்த பிணம் புதைப்பதற்கான மட்கலம் பாக்தாத் நகருக்கு அருகில் கிடைத்த அத்தகைய கல்லறைக் கலங்களையும், எஸ்தருக்கன் நாட்டுக்கலங்களையும் ஒத்துள்ளது.

மட்கலங்களோடு தொடர்புடையவை தென்னிந்தியாவின் ஈமச்சின்னங்களாகும். இந்த ஈமச்சின்னங்களாகும். இந்த ஈமச்சினங்களிலும் தலைமுறை பண்பாட்டு ஒருமைப்பாடு தொடர்ந்து வந்துள்ளது. ஐந்து வகையான ஈமச்சினங்கள் தெரியவருகின்றன.

கேரளத்திலும் வயநாட்டிலும், தமிழ்நாட்டில் ஆதிச்ச நல்லூரிலும் கிடைத்துள்ள மிகப்பெரிய ஈமத்தாழிகள் பெருங்குடுவை அல்லது (சாடி)கள் மடகலங்கள் பெரும் எண்ணிக்கையில் பிணங்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. உடல் முழுவதையும் கொள்ளக்கூடிய பெரிய ஈமத்தாழிகளும் சில உள்ளன. பிணங்களை எரியூட்டியதற்கான தடயங்கள் இல்லை.

மண்டையோடுகள் பெரும்பாலும் நீள் மண்டை இனத்தவருடையதாக இருந்தன ஆதிச்சநல்லூர்த் தாழிகளின் மேற்பகுதியானது கலயங்கள் மற்றும் பிற பொருட்களினால் நிரப்பப்பட்டிருந்தது. வயநாட்டுத் தாழிகள் இரண்டு மூன்று கலயங்கள் மட்டும் இருந்தன வேறுபொருட்கள் இல்லை சங்ககாலத்திய **புறநானூற்றில்** நான்கு பாடல்களில் ஈமத்தாழிகள் பற்றி பற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

**கால் வைத்த தாழிகள்:** இத்தகைய ஈமக்கலங்கள் பல்வேறு உருவங்களில் கிடைத்துள்ளன. சென்னை நகரில் கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் சாலையில் **பாண்டினாய்** என்னும் வீட்டில் இத்தகைய கலங்கள் பெரியவையும் சிறியவையும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. பெரியவை நீள் சதுர வடிவில், ஆறு அல்லது எட்டுக்கால்களை உடையவையாக இருந்தன. சிறிய கலங்கள் சதுரமாக நான்கு கால்களுடன் இருந்தன இவை ஒவ்வொன்றுக்கும் சுட்ட மண்ணால் ஆன மூடியும் இருந்தது. மூன்றுகால் அல்லது நான்கு கால் கொண்ட ஈமத்தாழிகள் பல இடங்களிலும் கிடைத்துள்ளன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் மூன்று கால் தாழிகள் கிடைத்துள்ளன.

**பாறையில் தோண்டிய கல்லறைகள்** இவைகுடைக்கல்லு அல்லது குடைக்கல் கல்லறைகள் என்று அழைக்கப்படுபவை (லோகன் '**மலபார் மனுவல்**' படம் 9) 6–8 அடி விட்டத்தில் பாறையில் செங்குத்தாக நாலடி ஆழம் தோண்டப்பட்டிருந்தது. வட்டமான கல்பாளம் ஒன்று மூடியாக பயன்படுத்தப்பட்டது. இவற்றைப் பாறைக் கல்லறைகள் (ஜுழடஅநல) என்பர். இவையும் பெரிய ஈமத்தாழிகளை போன்றவையே.

**மலபார் மாவட்டத்தில் உள்ள 'தொளை' கல்லறைகள்:** (லோகன் '**மலபார் மானுவல்**' பக் 182) இவை கற்பாறையில் நீளவாட்டத்தில் குடையப்பட்டுள்ளன. உச்சியில் ஒரு துளை விடப்பட்டு அத்துளை கற்பாலத்தால் மூடப்பட்டுள்ளது. க்ரீட் தீவில் பழங்காலத்தில் இத்தகைய கல்லறைக்குத் '**தொளை**' என்றே பெயர் வழங்கப்பட்டது வியக்கத்தக்கதாகும். அங்குக் கற்பாறைத்தளத்தின்மேல் செங்கல்லால் தேன் கூடுவடிவத்தில் இக்கல்லறைகள் கட்டப்பட்டன. தொடக்ககால **மினோவன்** நாகரீகம் சார்ந்த முத்திரைகள் பலவண்ண ஓவியம் வரைந்த சாடிகள், வாள்கள் போன்றவை அந்த கிரீட் கல்லறைகளில் கிடைத்துள்ளதாக ஜி.குலோட்ஸ் (பு.புடழவண) குறிப்பிடுகிறார். தொளை துளை இந்தப் பெயரில் அமைந்த கிரீட் தீவுக் கல்லறைகளில் ஒரே குடும்பத்தினர் அனைவரும் அருகருகே அவரவர் பயன்படுத்திய பொருட்களுடன் அடக்கம் செய்யப்பட்டனர். (**ஈஜிய நாகரீகம்,** பக். 133–7)


கி.மு 4000தில் புதுத்தற்கால எகிப்தில் கல்மட்டுமே பயன்படுத்தப்பட்டது. தென்இந்தியாவதில் கிடைத்துள்ள புதுக்கற்கால மட்கலங்கள் எகிப்தில் ஆண்ட பல்வேறு பரம்பரைக்கு முற்பட்ட காலத்ததைச் சார்ந்தவை. தென்இந்தியாவிற்கும் எகிப்திற்கும் அக்காலத்திலேயே தொடர்பு இருந்திருக்கவேண்டும். புதுக்கற்கால எகிப்தில் இருந்துதான் நண்ணிலக்கரையில் ஈஜியன் பகுதிக்கு நாகரீகம் பரவி இருக்கவேண்டும் என்பார் டாக்டர் கால். ஈஜியன் நாகரீகத்திலிருந்து கறீத்தீவுக்கு மினோவன் நாகரீகம் வளர்ந்தது. இவை யெல்லாம் ஒன்றிலிருந்து ஒன்று கடன்பெற்று வளர்ந்தவை. ஆனால் பண்டைக்கால கிரேக்க நாகரீகமும் எகிப்து நாகரீகமோ உண்மையில் யாரிடமிருந்து பெற்றவை என்பதை நாம்

அறியமுடியவில்லை. கிரேக்க எகிப்திய நாகரீகத்தை உருவாக்கியவர்கள் வேறு நாட்டில் இருந்து வந்தவர்கள் என்றும் அவர்கள் ஆரிய மொழி பேசுகின்றவர்கள் அல்ல என்றுமே பண்டைய கருத்து உள்ளது. இதிலிருந்து திராவிட பண்பாட்டிலிருந்துதான் அவை உருவாகின என்று ஊகிப்பதுதான் பொருத்தமாயிருக்கும். புது கற்கால நாகரீகத்திலிருந்து ( வெண்கலம் செம்புக்கால நாகரீக நிலைக்கப் போகாமல்) நேரடியாக இரும்புக்கால நாகரீகம் கிறீத்தில் உருவானது. தென் இந்தியாவில் நடந்தது அதுவே. தென் இந்தியாவிலம் வெண்கலக்காலம் ஒன்று இல்லை. இவற்றையெல்லாம் சுர்ந்து ஆய்வசெய்தால் தென் இந்தியாவிலிருந்து சென்று குடியேறியவர்களான திராவிட மொழி பேசுனரே நண்ணிலக்கரை பகுதி நாடுகளின் தொன்மை நாகரீகங்களை உருவாக்கியவர்கள்' என்பதே முடிவு. மொழியும் சென்றது, மொழி பேசுனரும் சென்றனர், ஆகவே மனித நாகரீகத்தோற்றம் நண்ணிலக்கரையில் நிகழ்ந்ததல்ல. இந்திய தீபகற்பத்தில், காவிரி, தாமிரபரணி, பெரியாறு, அமராவதி, கிருஸ்ணா கோதாவரி, நர்மதை ஆகிய ஆறுகளின் கரையில்தான் நிகழ்ந்தது என்பது முடிவு

நன்றி – தமிழரின்தோற்றம் – வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர்.



சமாதான நீதவான் பட்டமளிப்பின்போது





மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் ஆலய தோற்றம்

# ஈழத்தவர் வரலாறும் இலங்கையில் தமிழரின் பரம்பலும்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நீண்டகால இடைவிடாது நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. இலங்கையிலிருந்து இராட்சசர்கள் அதிகாரம் தென்னிந்தியா. தக்காணம் முழுவதும் இருந்தது மட்டுமின்றி அயோத்தியை ஆண்ட தசரதன் அரசெல்லை வரையும் இருந்தது. எனவேதான் விசுவாமித்திரர் தன் பாதுகாப்பிற்கா இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு தசரதனை வேண்டினார். இக்கதையிலிருந்து வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இலங்கையில் தொடர்பு இருந்து வந்ததை அறிகிறோம். இலங்கை மீது இராமன் படையெடுத்து வென்றதையும் அதன் விளைவுகளையும் நாம் அறிவோம். கி.மு 300 ஒப்பு விஜயன் இலங்கைத்தீவுக்கு கடல் வழியாக வந்து இறங்கிய பொழுது அந்த ராட்சச இனக் குழுவினரின் வழிவந்தோரைக் கண்டு அவர்களை இயக்கர் என்று அழைத்தான்.

ஆதியில் எமது நாடு முழுவதும் ஈழம் எனவும் வடபகுதியாகிய தமிழ் மக்கள் வாழும் பகுதி ஈழமண்டலம் எனவும் வழங்கியது. இந்துமா கடலின் திலகம் என்னுமாறு எழிலுற விளங்கும் இந்நாடு மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிது என்பதற்கேற்ப பல வளமும் பொருந்தி, மலை கடல் ஆறு எனும் இயற்கை ஏதுக்களாலும் பச்சை பசேலென்று எங்கும் பரந்து விரிந்துள்ள பசும் புற்றரைகளினாலும் உலக மக்களின் மனதை கவர்ந்தமையும் அவ்வாறு கவரப்பெற்ற தென்னிந்திய தமிழ் அரசர்களாலும், பின்னைய ஐரோப்பியரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என்போரினதும் ஆளுகைக்கு உட்பட்டு, அல்லல் பல அநுபவித்த நீண்ட சரித்திரமும் கொண்டது நம் நாடு.

இலங்கையில் வரலாறு என்பது இரண்டு இனங்களுக்கிடையிலான தொடர் போராட்டமாகவே இன்றுவரை தொடர்ந்து வருகின்றது குடிசார் வரலாற்றுப் புவியியல் அடிப்படையில் திராவிடஇனத்தின் பாரம்பரிய தீவாகிய இலங்கை இடையில் புதியதொரு இனத்தினைக் சேர்த்துக் கொண்ட சம்பவம் 2400 வருடங்களுக்கு முன் இடம்பெற்றது. வங்கதேசத்து சத்திரிய மரபிற் பிறந்து இலாடா தேசத்தை அரசாண்ட சிங்காவாகு எனும் மன்னன் தன் நாட்டிற்கு உதவாதவர்கள் எனக்கருதிய தன் மகன் சிங்க விஜயனையும் அவனது தோழர்கள் எழுநூறு பேரையும் மரக்கலமொன்றில் ஏற்றி நாடு கடத்தி விட்டான். அவர்கள் கி.மு 483ம் ஆண்டு தாமிரபரணி என்ற கொனா நதிக்கும் (கலாஓயா) கதம்பநதிக்கும் (அருவியாறு) இடைப்பட்ட பிரதேசத்தில் வந்து சேர்ந்தனர். சிங்க விஜயனின் வருகையுடன் இலங்கையில் சிங்கள மக்களது தோற்றம் ஆரம்பமாவதாக வரலாற்றுச்செய்திகள் கூறுகின்றன. அவை கூறத்தவறிய செய்திகள் என்னவென்றால் விஜயனும் அவனது தோழர்களும் இலங்கையின் கரையில் இறங்கியபோது, இலங்கையில் நாகரீகத்தில் முன்னேறிய ஒரு மக்கட் கூட்டமும், பண்டைய வாழ்க்கை முறையினைக் கைக்கொண்டு வாழ்ந்த ஒரு மக்கட் கூட்டமும் வாழ்ந்துள்ளனர் என்பதாகும்.

நாடுகடத்தப்பட்ட சிங்களவர் ஓரளவு நாகரீகமடைந்திருந்த மக்கள் வசத்தில் இந்தநாடு இருந்ததாக கண்டனர்.

எனப்பாக்கள் என்பார் தன் புராதன இலங்கை என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆரிய மொழி பேசிய மக்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இயக்கர் என்று அழைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தினர் இலங்கையில் வசித்து வந்தார்கள். சிங்கள வரலாற்று இதிகாச வரலாற்றுப்பனுவலான மகாவம்சத்தில் இருந்தே இலங்கையில் இயக்கர், நாகர், என அழைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினர் வாழ்ந்துள்ளனர் என அறிய முடிகிறது.

இயக்கர்

மகா வம்சத்தின் படி புத்தர் ஞானம்பெற்று ஒன்பது மாதங்களுக்குப்பிறகு இலங்கைக்கு வந்திருந்தார் அவ்வேளை இலங்கையில் இயக்கர்கள் வாழ்ந்து வந்தனர். மகாநாக தோட்டத்தில் இயக்கர்கள் குழுமியிருந்த போது அவர்கள் முன்தோன்றிய புத்தர் இயக்க மக்களது பயங்களை நீக்கி ரட்சித்ததாக குறிப்பு உள்ளது. அருவியாற்றுக்கும் மகாவலி கங்கைக்கும் தெற்கே இவர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன விஜயனின் இலங்கை வருகையின் போது அவன் சந்தித்த இயக்கர் குல இராணி குவேனி பற்றி தகவல்கள் மகாவம்சத்திலுள்ளன. யக்கா என்ற இந்த இயக்கர் இன இளவரசியே குவேனி. குவேனியை விஜயன் மணமுடித்து அரசாண்டான்.

## நாகர்

பண்டைய இலங்கைத்தீவு முழுவதும் நாகர் இன மக்கள் பரவி வாழ்ந்துள்ளரெனினும். சிறப்பாக நாகதீவு என வரையறுக்கப்பட்ட வடபகுதியில் செறிந்து வாழ்ந்துள்ளனர். நாகதீவு என்ற பெயரை இப்பிரதேசம் பெறுவதற்கு இங்கு பண்டையகுடிகளான நாகர்கள் வாழ்ந்ததே காரணமாகும்.

இலங்கை வரலாற்றில் செய்திகளை அளிக்கும் நூலாக கருதப்படும் மகாவம்சம், கௌதம புத்தர் இலங்கைக்கு இரண்டாவது தடவை விஜயம் செய்தபோது நாகதீவிலிறங்கி இரண்டு நாக அரசர்களின் பிணக்கைத் தீர்த்து வைத்தார் எனக் கூறப்படுகிறது.

மகோதரன், குலோதரன் எனப்பெயர்கொண்ட சகோதரரான இராசகுமாரர்கள், இராட்சிய பரிபாலனம் சம்பந்தமாக மனம் மாறுபட்டு குரோதம் முற்றி விபரீதம் நடைபெறவிருந்த காலத்தே தக்க தருணத்தில் புத்த பிரான் தோன்றி சமரசம் செய்து வைத்தார் என்கிறது மகாவம்சம். ஆதிக்குடிகளான நாகர்கள் சிவவழிபாட்டுடன் நாகவழிபாட்டினையும் பின்பற்றி உள்ளார்கள். சிந்து நதி நாகரீககாலத்திலிருந்து இவ்வழிபாடுகள் நிலவி வந்துள்ளது. இந்த நாகர் இனத்தவர் பல நாடுகளுடன் வர்த்தகம் நடாத்தக்கூடிய அளவிற்கு கலாச்சார மேம்பாடுடையவர்களாக விளங்கினர் என்று கி.பி 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாகியான் என்ற நாடுகாண் பயணி கூறியுள்ளார்.

# திராவிடர்

உலக மொழிகளை மொழி நூலறிஞர் துரோணியம், ஆரியம், சேமியம் என்ற முப்பெரும் குடும்பத்தில் அடங்குவர். துரோணியம் சித்தியம் எனவும் சொல்லப்பெறும். தமிழ் துரோணியம் குடும்பத்தையும் சார்ந்தவை துரோணியம் சார்ந்த தமிழை ஏனைய இரு குடும்ப மொழிகளோடு ஒப்பீட்டு உறவுபடுத்தி முதற்கண் ஆராய்ந்தவர் கார்டுவெல். அதன்பின் அறிஞர் பி.இராமநாதன், பாவனர் என்போர் ஆராய்ந்தனர்.

ஆரியத்தில் தமிழ் இருக்கின்ற உண்மையை கண்டு காட்டியவர் கார்டுவெல். பார்வை உறுப்பாகிய கண் எனும் சொல் மேலையாரியத்திலும் கீழையாரியத்திலும் எவ்வெவ்வாறு திரிந்து வழங்குகின்றதென்று கார்டுவெல் தன் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலில் விளக்கியுள்ளார்.

ஈழத்தின் நாகரீக கர்த்தாக்கள் திராவிடரே என்பது பல அறிஞரது தீர்மானம். இன்றைய சிங்கள – தமிழ் பேசுவோர் அவர்கள் சந்ததியினரே என்பதும் உறுதியாகின்றது. அத்துடன் இவ்விரு மொழி பேசுவோருக்கிடையே ஏற்பட்ட கலாசார வேறுபாடு ஈழத்தின் வரலாற்றுக் காலத்தில் பௌத்த மதத்தின் வருகையோடுதான் ஏற்பட்டது எனலாம். இங்குள்ள சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் மூதாதையர்களினதும் ஒன்றுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளைப் பேசினாற்போல் தெரிகின்றது. இவற்றுட் தமிழோடு சிங்களத்தின் மூதாதை மொழியாகிய "எலு" வும் காணப்பட்டது எனலாம் இந்த எலு மொழி பௌத்தம் வந்தபோது அதன் சமயமொழியாகிய பிராகிருதமாகிய பாளியுடன் கலந்தபோதே இன்றைய சிங்களமொழி உருவாகியது. இலங்கையில் விஜயன் வருவதற்கு முன்னரே திராவிட மக்கள் தமக்குரிய கலாச்சாரத்துடன் வாழ்ந்துள்ளனர் என்பது நிருபணமாகியுள்ளன.

# வரலாற்றுக்கால மன்னர்கள்

மகத தேசத்து மன்னன் துஷ்டத்தனங்கள் செய்து நாட்டுக்குடிமக்களை துன்புறுத்திய தனது மகன் விஜயனையும் அவனது துர்க்குல சீலரான எழுநூறுபேரையும் வலுக்கட்டயமாக மரக்கலங்களில் ஏற்றி நாடு கடத்தினான். கி.மு 483ம் ஆண்டளவில் விஜயனும் அவனது எழுநூறு தோழர்களும் இலங்கையின் தாமிரபரணி கரையை வந்தடைந்தது. இதிலே ஒரு விடயத்தை மகாவம்சம் கூறுகின்றது என்னவெனில் விஜயனின் தகப்பன் ஒரு ஒரு சிங்கத்திற்கும் ஒரு மானிட இராணிக்கும் பிறந்ததாக கூறுகின்றது. இது கட்டுக்கதையாக இருக்கலாம்.

தாமிரபரணியில் வந்து இறங்கிய விஜயன் இயக்கர் குல தலைவியான குவேணியை மணந்து கொள்கிறான். இவ்விஜயன் மன்னனே சிங்கள இனத்தவரின் முதலாவது மன்னனாக அடையாளம் காட்டப்பட்டுள்ளான் ஆனால் இதற்கு முன்னரே இலங்கையில் திராவிட மக்கள் வாழ்ந்து வருவதை ஆய்வுகள் நிருபிக்கின்றன.

விஜயன் பாண்டிநாட்டு அரசனுடன் சிநேகம் பூண்டு பாண்டிநாட்டிலிருந்து தனக்கு ஒரு இளவரசியையும் தனது எழுநூறு தோழர்களுக்கும் எழுநூறு பாண்டிநாட்டு பெண்களையும் வரவழைத்து திருமணம் செய்து கொண்டனர். இவ்வாறு பாண்டிய நாட்டு இளவரசியை விஜயன் மணமுடித்தமையினாலே அப்பாண்டியனின் ஆட்சிக்குட்பட்டிருந்த மாந்தையோடு, மணற்றி முதல் திருகோணமலைக்குட்பட்ட சகல பாகங்களும் விஜயனுக்கே உரித்தாயிற்று எனவே முழு ஈழத்தினதும் ஒரே மன்னன் எனும் சிறப்பையும் அவன் பெற்றான்.

விஜயன் 30க்கும் மேற்பட்ட வருடங்கள் அரசாற்றிய பின் அவன் வழித்தோன்றல்கள் பதினொருவர் ஒருவர் ஒருவராக ஆட்சி நடாத்தினர். பண்ணிரண்டாவது மன்னனாக அசேலன் என்பவன் ஆட்சி செய்தான் அவன் ஆட்சிக்காலத்தில் எல்லாலன் எனும் தமிழ் மன்னன்பெரும்படை திரட்டிக்கொண்டு திருகோணமலையிலிருந்து அசேலனை நோக்கி படையெடுத்தான் கடும்போரின் பின் அநுராதபுரி எல்லாளன் கைப்படலாயிற்று ஈழம் மீண்டும் முற்றிலும் தமிழரசு ஆயிற்று

விஜயனின் ஆட்சிக்காலமும் அவன் பின்னரான மன்னனது ஆட்சிக்காலங்களும்

| ஆண்டு | அரசன்பெயர் | ஆட்சி நகரம் |
|---|---|---|
| கி.மு 483 – கி.மு 445 | விஜயன் | இலங்கையின் வடமேற்கு பகுதி |
| கி.மு 444 – கி.மு 414 | பண்டுவாசுதேவா | அநுராதபுரம் |
| கி.மு 414 – கி.மு 394 | அபயன் | அநுராதபுரம் |
| கி.மு 377 – கி.மு 307 | பண்டுகாபயன் | அநுராதபுரம் |
| கி.மு 307 – கி.மு 247 | முத்துசிவன் | அநுராதபுரம் |
| கி.மு 247 – கி.மு 207 | தேவநம்பியதீசன் | அநுராதபுரம் |
| கி.மு 207 – கி.மு 197 | உத்தியன் | அநுராதபுரம் |
| கி.மு 197 – கி.மு 187 | மகாசிவன் | அநுராதபுரம் |
| கி.மு 187 – கி.மு 177 | சூரதீசன் | அநுராதபுரம் |
| கி.மு 177 – கி.மு 155 | சேனன், குத்திகன் | பூநகரியிலிருந்து |
| கி.மு 155 – கி.மு 145 | மகாசிவன் மகன் அசேலன் | அநுராதபுரம் |
| கி.மு 145 – கி.மு 101 | எல்லாளன் | அநுராதபுரம் |
| கி.மு 101 – கி.மு 17 | துட்டகாமினி | அநுராதபுரம் |
| கி.மு 17 – கி.பி 09 | சேரநாதன் | அநுராதபுரம் |
| கி.பி 09 – கி.பி 66 | சிவா, வாதுகன், தீசன், நீலியன் எனும் தமிழ் சிங்கள மன்னர்கள் | |
| கி.பி 67 – கி.பி 111 | வசபமன்னன் | |

அக்ரபோதி – கி.பி 593ம் ஆண்டு இலங்கையின் அரசனாகிய அக்ரபோதி இலங்கை முழுவதும் விஜயம் செய்த போது வன்னியரையும் தன் அதிகாரத்திற்கு உட்படுத்தி திறை கொடுத்து அரசாளும்படி கூறி தன் இராசதானி சென்றான்.

கி.மு 2ம் நூற்றாண்டிலிருந்தே யாழ்ப்பாணம் பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதை தொல்பொருள் சான்றுகள் கூறுகின்றன கி.மு நூற்றாண்டிலிருந்து பிற நாடுகளுடன் தொடர்புகொண்டு எழுத்தின் உபயோகத்தையும் அறிந்து வாழ்ந்து வந்துள்ளனர் இவ்வாறே யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளிலும் முன்னேற்றமடைந்த மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும். இவ்வாறு சிறப்பாக வாழ்ந்து வந்த வட இலங்கை மக்கள் மீது பொறாமை கொண்ட தென்னிலங்கை சிங்கள மன்னர்கள்படையெடுத்தனர். அதன் பின்னர் பல சிங்கள மன்னர்கள் வடபகுதியையும் ஆட்சி புரிந்தனர். இவ்வாறு கிளர்ச்சி செய்தவர்களில் உக்கிர சிங்கன் என்பவன் பிரதானமானவன். கலிங்கதேசத்தவராகிய இவன் மணற்றியில் குடியேறியிருந்தான். உக்கிரசிங்கன் போரிட்டு யாழ்ப்பாண இராச்சியத்தை மீண்டும் கைப்பற்றினான். கி.பி 735ம் ஆண்டளவில் உக்கிரசிங்கன் கந்தரோடையை தலைநகரமாகவும் பின்னர் சிங்கை நகரை தலைநகராகவும் கொண்டு யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டு வந்தான் இந்த சிங்கை நகர் என்பது தற்போதைய பூநகரி பிரதேசம் என குறிப்பிடுகின்றது.

உக்கிரசிங்கன் ஆட்சி செய்தபோது சோழ இளவரசனாகிய மாருதப்புரவள்ளி என்பாள் கீரிமலைக்கு வந்தாள். அவளை உக்கிரசிங்கன் மணந்து கொண்டான். அவனின் வேண்டுகோளிற்கிணங்க மாவிட்டபுரத்தில் கந்தனுக்கு ஆலயம் கட்டுவித்து இந்தியாவிலிருந்து விக்கிரகங்களையும் அந்தனர்களையும் வரவழைத்தான்.

தொண்டைமான் – உக்கிரசிங்கன் ஆட்சி செய்த போது தென்னிந்தியாவிலுள்ள தொண்டை மண்டலத்தை அரசாண்ட தொண்டைமான் எனும் அரசனும் தனது பரிவாரங்களுடன் கீரிமலைச் சாரலில் வந்து இறங்கி அரசனைச் சந்தித்து யாழ்ப்பாணத்தை சேர்ந்த கரணவாய், வெள்ளைப்பரவை எனும் இடங்களில் விளையும் நல் உப்பைத்தனது நாட்டிற்கு தரவேண்டும் என்று வேண்டி கொண்டான்.

உக்கிரசிங்கன் தொண்டைமானின் கேள்விக்கிசைந்து உப்பை எடுக்கவும், அதற்கேற்ற ஒழுங்குகளை செய்ய உத்தரவு கொடுத்தான் தொண்டைமான் மிகுந்த சந்தோசமடைந்து வடகடலிலிருந்து உப்பு விளையும் இடத்துக்கு தனது மரக்கலங்களில் சென்று உப்பை ஏற்றிவர ஓர் சிற்றாற்றை வெட்டுவித்தான். அந்த ஆறு இன்று தொண்டைமனாறு என்று அழைக்கப்படுகின்றது.

உக்கிரமசிங்கனுக்கு ஜெயதுங்கன் பரராசசிங்கன் (நரசிங்கன்) எனும் மகனும் செண்பகவதி எனும் மகளும் பிறந்தார் ஜெயதுங்க பரராசசிங்கனின் அரசியற்றும் நாளிலே யாழ்ப்பாடி எனும் குலத்தவன் ஒருவன் பரிசுபெற வேண்டி அரசவைக்கு வந்து யாவரும் அதிசயிக்க யாழ் இசைக்கருவி மீட்டி பாடினான். அவ் யாழ்ப்பாடியின் திறமையை கண்ட அரசன் அவனுக்கு பரிசாக மணற்றி எனும் இடத்தை (கரையூர், பாசையூர்) பரிசாக வழங்கினான். யாழ்ப்பாடியும் மகிழ்வுடன் ஏற்று தனது குலத்தலருடன் மனற்றியில் குடியேறினான். அதனால் அவ்விடம் யாழ்ப்பாணம் என அழைக்கப்பட்டது.

## தென்னிந்திய அரசர்களின் படையெடுப்பு

சிங்கை நகரிலிருந்து வட இலங்கையை ஜெயதுங்கன் ஆண்ட சமயத்தில் தென் பகுதியை முதலாம் சேனன் என்பவன் அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்து கொண்டிருந்தான். அன்றைய காலத்தில் சிங்கள தமிழ் கலகங்கள் கூடுதலாக இடம்பெற்றதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த வேளையில் தென்னிந்தியாவில் தமிழரசுகள் வலிமை பெற்றிருந்தன. ஆதலால் அவர்கள் அலங்கை மீது படையெடுப்புக்களை மேற்கொள்ளத் தொடங்கினார். அவ்வாறே சீறிமாற வல்லபன் என்ற மன்னன் இலங்கைக்கு படையெடுத்து வந்து ஜெயதுங்கனையும் சேனனையும் வென்று திறை பெற்று ஆட்சி செய்தான்(கி.பி 815 – 862)

கி.பி 945ம் காலகட்டத்தில் தென்னிந்திய சோழப் பராந்தகன் படையெடுத்து இலங்கை வந்து அரசனானான். பின்னர் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த 4ம் மகிந்த மன்னன் யாழ்ப்பாணத்திற்கு படை அனுப்பி அப்பகுதியை தனது ஆட்சிக்கு உட்படுத்தினான். (கி.பி 956 – 972) அதன் பின்னர் கி.பி 1003ல் இராஜராஜ சோழன் இலங்கை மீது படையெடுத்து வெற்றி கொண்டான்.

இராஜராஜ சோழ மன்னன் பொலநறுவையிலிருந்து தனது நல்லாட்சியை இலங்கையில் நடாத்தினான். இச் சோழ மன்னனால் பல அரசுப்பிரதிநிதிகள் பல இடங்களில் நியமிக்கப்பட்டார்கள் அந்த வகையில் புவனேகபாகு என்பவர் வட பகுதிகளுக்காக அரச பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார் அவர் பூநகரிலிருந்து தனது நிர்வாக ஆட்சியை மேற்கொள்ளலானார்.

சோழ மன்னன் மனுநீதி வழுவாது செங்கோல் செழுத்தி வரும் காலத்திலே குடிசனம் குறைந்த இந் நாட்டிலே அநேக மக்கள் வாழவேண்டும் என்று விரும்பி தமிழ் மன்னர்களுக்கு தகவல் அனுப்பினான். இவ்வரசனது வேண்டுகோளுக்கிணங்கி சிறந்த பல தமிழர்கள் யாழ்ப்பானம் வந்து சேர்ந்தனர் அவர்களுடனும் உள்ளூர் தமிழர்களையும் இணைத்து திருநெல்வேலி, மயிலிட்டி, இனுவில், பச்சிளைப்பள்ளி, புலோலி, வல்லிபுரம் , தொல்புரம், கோயிலாக்கண்டி, இருபாலை, நெடுந்தீவு, அத்துடன் பல்லவராயன் கட்டு முதலிய இடங்களில் குடியமர்த்தினான்.

கி.பி. பதினோராம் நூற்றாண்டில் இலங்கையின் சோழரை துரத்திவிட்டு இலங்கை முழுவதற்கும் முதலாம் விஜயபாகு (1055 – 1110) அரசனானான். அவனது காலத்தில் வட இலங்கையும் அவனது ஆட்சிக்கு கீழ்ப்பட்ட விஜயபாகு காலத்தின் பின் கி.பி 1110 ஆம் ஆண்டளவில் குலோத்துங்கசோழன் சோழராட்சியை மீண்டும் நிலைநாட்ட இலங்கை மீது படையெடுத்தான் அப்படைக்குத் தலைமை தாங்கியவன் கருணாகரத்தொண்டைமான் அவன் சிலகாலம் யாழ்ப்பாணத்தை நிர்வகித்ததாக கூறப்படுகிறது. தொண்டைமானாற்றில்

தானாகவே விளையும் உப்பை சோழநாட்டிற்கு ஏற்றுவித்தான் உரும்பிராயிலுள்ள கருணாகரப்பிள்ளையார் கோவிலை இவனே உருவாக்கினான். பதின் மூன்றாம் நுஸற்றாண்டின் நடுப்பகுதிவரை சிங்கைநகர் வட இலங்கையின் தலைநகராகவும் சோழரின் ஆட்சியிலும் இருந்து வந்துள்ளது.

13ம் நூற்றாண்டில் இலங்கை முழுவதும் முதலாம் பராக்கிரமபாகு எனும் மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கி.பி 1286 வரை இம்மன்னனது ஆட்சி நடைபெற்றதாக குறிப்பிடப்படுகிறது.

## யாழ்ப்பாண இராச்சியம்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடர் வரலாற்றில் 13ம் நூற்றாண்டு முக்கிய காலகட்டமாகும். இக்காலத்திலேயே சுதந்திர தமிழ் இராட்சியம் நிறுவப்பட்டது.

கி.பி 950ல் சிங்கையாரியச்சக்கரவர்த்தி அரசாளத்தொடங்கினான். சிங்கையாரியன் இந்தியாவிலிருந்து வந்த பிரபுக்களை அவரவர் குடிகளுடன் குறிப்பிட்ட பிரதேசங்களில் குடியிருத்தி நான்கு திசைகளுக்கும் நான்கு சேனைகளைக் காவலாக நிறுத்தினான். மேல்திசை சேனைக்கு வல்லியமாதாக்கள், கீழ்த்திசை சேனைக்கு சண்பகமாதாக்கள், வடதிசை சேனைக்கு இமையானனவன், தென்திசை சேனைக்கு விசயபராக்கிரசிங்க மன்னன் ஆகியோரை சேனாதிபதிகளாக்கி வீரசிங்கனை அனைத்து சேனைக்கும் நாயகமாக்கினான். அத்துடன் புவனேயபாகு என்பவனை மந்திரியாக்கி நல்லாட்சி புரிந்தான்.

இவ்வாறு ஆரியச்சக்கரவர்த்தி எனச் சிறப்புபெயரோடு விதந்தோதப்படும் தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

| ஆட்சி வருடங்கள் | வட இலங்கையை ஆண்ட அரசர்களின் பெயர்கள் |
|---|---|
| 1) கி.பி 950 – 1215 | சிங்கை ஆரிய சக்கரவர்த்தி – இக்காலத்தில் 13 அரசர்கள் அரசாண்டதாக கூறப்படுகிறது. |
| 2) 1215 – 1236 | கலிங்கமாகன் பொலநறுவையை நகராக கொண்டு ஆட்சி செய்தான். |
| 3) 1236 – 1247 | குலோத்துங்க சிங்கையாரின் யாழ்ப்பாணத்தை நகராக கொண்டு ஆட்சி செய்தார் |
| 4) 1247 – 1258 | சுந்தர வீர பாண்டியன் மீன் சின்னத்துடன் ஆட்சி செய்தான் |

5) 1258 – 1284 பரராசசேகரன் –1 (குலசேகர சிங்கை ஆரியன்)

6) 1284 – 1292 செகராசசேகரன் –2 (குலோத்துங்க சிங்கை ஆரியன்)

7) 1292 – 1302 பரராசசேகரன் –2 (விக்கிரம சிங்கை ஆரியன்)

8) 1303 – 1325 செகராசசேகரன் –3 (வரோதய சிங்கை ஆரியன்)

9) 1325 – 1347 பரராசசேகரன் –3 (மார்த்தாண்ட சிங்கை ஆரியன்)

10) 1347 – 1380 செகராசசேகரன் –4 (குணபூசன சிங்கை ஆரியன்)

11) 1380 – 1410 செகராசசேகரன் –5 (சயவீர சிங்கை ஆரியன்)

12) 1410 – 1440 பரராசசேகரன் –5 (குணவீர சிங்கை ஆரியன்)

13) 1440 – 1245 செகராசசேகரன் –6 (கனகசூரிய சிங்கை ஆரியன்)

கனகசூரி சிங்கை ஆரிய சக்கரவர்த்தி மிகவும் திறமையாக ஆட்சி செய்தார். அவ்வேளை அவன் பொருள் வளம் சக்தி வளமும் மிக்கவனாக காணப்பட்டான். அதனை விரும்பாத பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பாணத்தை நோக்கி படையெடுக்க விரும்பினான். அப்போது 1415 அளவில் கோட்டை மன்னனாக இருந்தான். 1950ம் ஆண்டு சபுல் குமாரையா எனும் சிறீசங்க போதி புவனேயபாகு எனும் தளபதியை கொண்டு யாழ்ப்பாணத்தை கொண்டு யாழ்ப்பாண இராட்சியத்தை கைப்பற்றினான். இத்தளபதியாகிய புவனேயபாகு விஜயபாகு என்பவனை யாழ்ப்பாண மன்னனாக்கி விட்டு அவன் கோட்டைக்கு போனான். பராக்கிரமபாகு இறந்துபோக புவனேகபாகு கோட்டை இராச்சியத்தின் மன்னன் ஆனான். 1467ம் ஆண்டுவரை அவன் ஆட்சி செய்தான்.

பராக்கிரமபாகு மன்னனின் படையெடுப்பால் வடஇலங்கையை விட்டு கனகசூரிய சிங்கை ஆரிய மன்னன் இந்தியா சென்றான். அங்கு அவ் மன்னன் தனது புதல்வர்களான பரராசசேகரன், செகராசசேகரன், அகியொரை வீரத்திலும் அறிவிலும் திறம்பட வழி நடத்தினார் கனக சூரிய சிங்கை ஆரிய மன்னன் தனது புதல்வர்களுடன் மீண்டும் வட இலங்கை மீது படையெடுத்து மீண்டும் தனது ஆட்சியை நிலைநாட்டினான் இவன் தனது மூத்த புதல்வனான பரராசசேகரனை 1478ம் ஆண்டு மன்னனாக முடிசூட்டினான். செகராசசேகரன் மருத்துவத்திலும் சோதிடம் என்பவற்றில் மிகவும் திறமையாக விளங்கினான். இவரால் பல நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பரராசசேகரனுக்கு சிங்கவாகு, பண்டாரம், பரநிருபச்சிங்கன், சங்கிலி என நான்கு ஆண்மக்கள் இருந்தனர். பரராசசேகரத்தின் பின் பல சூழ்ச்சிகள் செய்து சங்கிலி 1519ல் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னன் ஆனான்.

## பறங்கியர் காலம்

1506ம் ஆண்டில் கொழும்புக்கரையை பறங்கியத்தளபதி அடைந்தான். இவன் போர்த்துக்கீச நாட்டவராவார். பறங்கியர் கொஞ்சம் கொஞ்சமாக இலங்கை முழுவதும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டனர். சங்கிலி மன்னன் மன்னாரில் வைத்து போர்த்துக்கீசருடன் போரிட்டான். இறுதியில் மன்னாரும் 1544ம் ஆண்டு பறங்கியர் வசமானது. ஆனால் பறங்கியர் பலமுறை முயன்றும் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முடியவில்லை இதற்கு சங்கிலி மன்னனின் எதிர்ப்பே காரணமாகும்.

சங்கிலி மன்னன் 1565ம் ஆண்டு வரை ஆட்சி செய்தான் எனக் குறிப்பிடப்படுகிறது. சங்கிலி மன்னனுக்கு பின்பு புவிராச பண்டாரம், காசி நயினார் (1565) பெரியபிள்ளை செகராசசேகரன் (1570), புவிராசபண்டாரம் பரராசசேகரன் (1582), எதிர்மன்ன சிங்ககுமாரன் (1591) பின் சங்கிலிகுமாரன் செகராசசேகரன் (1616) ஆகிய
ஆறு மன்னர்கள் யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளர்களாக விளங்கினார்.யாழ்ப்பாண இராச்சியத்தில் நிகழ்ந்த உள்நாட்டு குழப்பங்களினாலும், போர்த்துக்கேயரின் தலையீடுகளாலும் இம்மன்னர்கள் தொடர்ந்து ஆள முடியாது போனது.

கி.பி 1591இல் போர்த்துக்கேயர் மூன்றாவது தடவையாக பெரும்படையுடன் யாழ்ப்பாணம் வந்தனர். தமிழர்படையும் பறங்கிப்படையும் நல்லூர் கோவிலடியில் மோதின பறங்கிப்படை தமிழர்படையை வென்று பெரிய பிள்ளையின் மகனாகிய எதிர்மன்ன சிங்கனை தமது சார்பில் மன்னனாக்கினார்கள். கி.பி 1616ல் எதிர்மன்ன சிங்கன் மரணமடைய சங்கிலிகுமாரன் செகராசசேகரன் ஆட்சியில் அமர்ந்தான். இவனே யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனாவான்.

கி.பி 1620ம் ஆண்டு தாமே இலங்கை முழுவதும் ஆள வேண்டும் என்ற எண்ணத்துடன் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் படையெடுத்தனர். அப்போது சங்கிலி குமாரன் சிறைபிடிக்கப்பட்டு கொல்லப்பட்டான். பல நூற்றாண்டு காலமாக பேணி பாதுகாத்து வந்த தமிழர் இராட்சியத்தின் கி.பி 1621ம் ஆண்டு சுதந்திரம் பறிபோனது.

பறங்கியர் ஆட்சியானது கி.பி 1620 இல் இருந்து 1658வரை நீடித்தது பின்னர் ஒல்லாந்தர் தமது ஆட்சியை இலங்கையில் நிறுவினர் இவர்கள் கி.பி 1658இல் இருந்து 1796 வரை ஆட்சியை நடத்தினார். அதன் பின்னர் 1948 வரை ஆங்கிலேயரால் இலங்கை ஆளப்பட்டது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பண்டாரவன்னியன் வன்னிப் பிரதேசத்தில் வீரமாக ஆட்சி செய்து வந்தான். ஒல்லாந்தர் பலமுறை படையெடுத்தும் அவனை வெல்ல முடியவில்லை பின்னர் கி.பி 1803ல் இருந்து கி.பி 1811 வரை ஆங்கிலேயருடன் சமரிட்டு தனது ஆட்சியை வன்னியில் நிலைநாட்டினான். இறுதியில் கி.பி 1811ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஆங்கிலேயருடனான போரில் பண்டாரவன்னியன் வீரமரணம் அடைந்தான்.

1948ம் ஆண்டு மாசிமாதம் " பிரித்தானியா ஆட்சியிலிருந்து இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. அன்றிலிருந்து இலங்கையானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசாக மாறியது. இந்த சனநாயக மாற்றமானது இலங்கையில் பெரும்பான்மையின மக்களின் ஆட்சிக்கே வழிகோழியது. இப்பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளறால் இலங்கை தமிழரது கல்வி, பொருளாதாறம், என்பன மட்டுப்படுத்தப்படலாயிற்று. இதன் காரணமாக இலங்கைத் தமிழர் தமது அதிகாரத்திற்கான போராட்டத்தை ஆரம்பித்தனர் அது இன்றுவரை தொடர்கின்றது.

இலங்கைத்தமிழரது அதிகார மீட்பும் போராட்டமுமானது வெற்றிபெறாமல் நீண்டு போவதற்கு காரணம் தமிழரது சமூகபலம் பலவீனமாக காணப்படுகின்றமையாகும். இதுவரை காலமும் இலங்கைத்தமிழரின் தலைவர்கள் தமது கல்வி, ஆளுமை தன்னம்பிக்கை என்பவற்றை கொண்டே அரசியல் நடாத்தினர் அதன் மூலம் அவர்கள் தமது சுயநலங்களை அநுபவித்தனர். இன்றுவரை ஒரு தமிழ்த் தலைவர் கூட சமூகபலத்தை கட்டி எழுப்பவில்லை என்பது எனது தீர்மானமாகும் பொதுவாக தமிழர் ஒவ்வொருவரும் தனிப்பட்ட பலத்தினையும், அறிவு, ஆளுமை, தன்னம்பிக்கை, என்பவற்றை கொண்டு காணப்படுகின்றனர். இது எமக்கு இறைவன் கொடுத்த வரமாகும் இதனாலேயே மீண்டும் மீண்டும் அழிவிலிருந்து மீண்டெழுகின்றோம். ஆனால் இதே தமிழர்கள் தமக்கிடையில் காணப்படுகின்ற பிரதேசவாதம், சாதியம் , சுயநலன், உறவுகள் என்ற போதைகளில் கட்டுண்டு வாழ்கின்றனர். இவற்றையே தமிழரின் எதிரிகள் மிக சாதுரியமாக பயன்படுத்தி எம்மை பிரித்தாடுகின்றனர். இதனாலேயே சமூகபலம் என்பது தமிழருக்கு மிகவும் அவசியம் தமிழர்கள் தமக்கிடையே சிறந்த சமூக பலத்தினை கட்டி எழுப்பிவிட்டால் அவர்களுக்கான சுதந்திரம் மிகவும் எளிதாக கிடைக்கும் என்பது எனது எண்ணம்.

# மாறாம்புலம் எங்கள் ஊர்

பண்டுதொட்டு மக்கள் கூட்டம் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு பெயர்ந்தேனும், முதற்குடியுமாக ஓர் இடத்தில் தங்கி வாழத்தொடங்கினர். அவ்வாறு பொருத்தமான இடங்களில் தங்கி வாழத்தொடங்கிய காலத்திலே அவ்விடத்தற்கு பொருத்தமான பெயரொன்றை இட்டுக்கொள்வது இயற்கை. தமது கிராமத்தை ஏனைய அயற்கிராமங்களில் இருந்து வேறுபடுத்தி குறிப்பிடுவதற்கே கிராமப்பெயர்கள் சூட்டப்பட்டன.

நமது முன்னோர்கள் தமது சுயதேவையை நிறைவு செய்யக்கூடிய இடங்களையும், சுயகௌரவத்தை பேணக்கூடிய இடங்களையே தேர்தெடுப்பது வழக்கம். அவ்வகையில் எமது மூலஇனமான நாகர் இனத்தில், சாய வேர் பிடுங்கும் தொழிலை மேற்கொண்டோர் முதன் முதலில் 1294 ம் ஆண்டளவில் இலங்கையின் வடபகுதியின் வல்லிபுரக்குறிச்சியில் வாழ்ந்தனர். இப்பிரதேசத்தில் சாயவேர் அதிகமாக காணப்பட்டதால் தம் தொழிலுக்காக அப்பிரதேசத்தை தேர்தெடுத்தனர். இம்மக்கள் இந்தியாவின் கோடிக்கரை பிரதேசத்தில் வசிக்கும் மக்களுடன் தொழில் நிமித்தம் தொடர்புடையவர்களாக காணப்படுகிறார்கள் எனப் பலராலும் கூறுப்படுகின்றது.

இம்மக்கள் சாயவேரை பிடுங்கி விற்பனை செய்து வந்ததினால் வேர்க்குத்தியர் என அனைவராலும்அழைக்கப்பட்டனர். இச்சாய வேரை பிடுங்க பயன்படத்தும் "பாறை" எனும் கருவி இன்றும் எமது வீடுகளில் காணப்படகிறது. இச் சாயவேரானது துணிகளுக்கு நிறம் தீட்டுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் கடற்றொழில் உபகரணமான கடடுமரத்தின் சீலையை நிறம் தீட்டவும் பயன்படுத்தப்பட்டது. இதனால் இதறகு கூடுதலான கேள்வி அன்றைய காலத்தில் காணப்பட்டது. அத்துடன் துணிகளுக்கு போடப்படும் இச்சாயம் பல காலம் கெடமால் நிலைத்து நிற்பதற்கு கடுக்காய் உதவும் என்பதையும் அனுபவ ரீதியாக கண்டு கொண்டார்கள். அதனால் அவர்கள் தாம் வாழ்கின்ற இடங்கில் கடுக்காய் மரங்களை உண்டாக்கி வளர்த்து வந்தனர். இன்றும் இக்கடுக்காய் மரம் வல்லிபுரக் குறிச்சியில் காணப்படுகின்றது.

வல்லிபுரப்பகுதியில் இவ்வேர்கள் அதிகமாக காணப்பட்டமையினால் தமது தொழில் முயற்சியினை ஆரம்பித்தனர். இச்சாய வேரின் தேவையை பறங்கியர் காலத்தில் உணரக்கூடியதாக உள்ளது. பறங்கியர் தமது அரசிறை வருமான மூலங்களில் இச்சாயவேர் விற்பனை வருமானங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனை யாழ்பாண வைபவ கௌமுதி பின்வருமாறு கூறுகின்றது. (பக்கம் 76-106)

அரசிறை வருமானம்:- புகையிலையால் பெருந்தொகை அரசிறை வந்துகொண்டிருந்தது. யானைகள் விற்று வரம் ஊதியம் பெருவருவாயாயிற்று.
சாயவேர் இன்னுமொரு அரசிறை வருமானமாக இருந்தது. காரைதீவிலும் மன்னாரிலும் அத்துடன் வல்லிபுரத்திலும் அவ்வேர் காணப்பட்டது.

சாயவேர்- சாயம் காச்சுவது போல் சாயவேர் வியாபாரமும் அக்காலம் அரசினர் வருமானமாக இருந்தது. இதனை பிடுங்கி கொடுப்பது வேர்குத்தியினரது தொழில்.

ஆரம்ப காலத்தில் வல்லிபுரப்பகுதியில் வந்து குடியேறிய எமது முதாதையினர் தமத பிரதான தொழிலாக சாய வேர் எடுத்து துணி நெசவு செய்பவர்களுக்கு விற்று பொருள் ஈட்டி வந்துள்ளனர். இதனால் அவர்களை "வேர்குத்தியர்" என காரணப் பெயரால் அழைக்கும் வழக்கம் உண்டாயிற்று.. சாயவேர் விற்பனைக்கும் உற்பத்திக்கும் சொந்தமான நிலப்பரப்பு அவசியமாக காணப்பட்டது. அதனால் தமது வதிவிடங்களில் சொந்தமாக பல காணிகளை உரிமையாக்கிக்கொண்டனர். வேர் பெறுவதற்கு ஏகப்பட்ட நிலம் தேவை என்பதை உணர்ந்தவரும், நில உடமையாளருமாகிய "புலோலி இராசா" என்பவரது உதவி இவர்களுக்கு கிடைத்தமை தாங்களும் நிலஉடைமையளராக வருவதற்கு உதவியது. மழவராயர், பெற்றயினர், நீலக்கொடி, தேவர் முதலிய குறிச்சிகளை உடைய நிலங்கள் இவர்களது ஆளுமைக்குட்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
இன்றும் அம்மக்கள் நிலச்சுவாந்தர்களாக வாழ்வது இதுவே காரணமாகும்.

இவ்வேர்க்குத்தி மக்கள் தமது வாழ்விடங்களுக்கு சலவைத் தொழிலாளர்களையும் அழைத்து வந்தனர். தமது சாயத்தொழிலை மேம்படத்துவதற்கு சலவைத் தொழிலாளர் தேவை என்பதால் அவர்களையும் தங்கள் அருகிலே வாழ வைத்தனர் . இவ்வாறு எமது மூதாதையர் அன்றைய காலத்திலேயே விற்பனை மேம்படுத்தல் தொழிற்பிரிப்பு சுயதொழிலில் வல்லமை நில உடமையாளர்கள் என அனைத்து வகையிலும் சிறந்தவர்களாக வாழ்ந்தனர் இவ்வாறு வல்லிபுரக்குறிச்சியில் வாழ்ந்த எம்மவர்கள் சாயவேர் கிடைப்பது குறைவடைந்தமையாலும், காலத்தின் தேவையை உணர்ந்ததாலும்., அப்பகுதியை விட்டு இடம் பெயரத்தொடங்கினர். இன்று வல்லிபுர ஆழ்வார் நிலை கொண்டிருக்கும் நிலப்பகுதி மாறாப்புலப்பகுதி வாழ் மக்களுடையது என்பதனை ஆலய வரலாற்றிலையே காணலாம்.

இங்ஙனம் இடம்பெயர்ந்த வேர்க்குத்தி மக்கள் மூன்ற பிரிவினறாக பிரிந்து ஒரு பகுதியினர் தம்பசிட்டியிலும் அல்வாய்

மாறாம்புலப்பகுதியிலும் மற்றப் பிரிவினர் வல்வெட்டியிலும் அடுத்த பிரிவினர் கரவெட்டி கிழக்கிலுமாக குடியமர்ந்தனர். அவர்கள் குடியமர்ந்த இடங்களில் கடுக்காய் மரங்களை நாட்டினர். அத்துடன் தங்களுக்கு உதவியாக சலவை தொழிலாளஉகளையும் தங்களின் நிலங்களை வழங்கி தமது அருகில் குடியமர்த்தினர்.

தம்பசிட்டியில் கொற்றன் கோவிந்தன் தலைமையில் சில குடும்பங்கள், தென்னிலங்காவத்தை, வெண்டாமணல், வாரிவளவு போன்ற இடங்களில் குடியமர்ந்தனர். அவர்கள் வசித்த இடங்களின் பெயர்கள் இன்றும் நிலவி வருகின்றன. மாறாப்புலத்தில் அருணர் பரம்பரையினர் குடியேறினர். குட்டியார் பரம்பரையினர் வல்வெட்டியிலும், சின்னக்குட்டியர் பரம்பரை கரவெட்டி கிழக்கிலுமாக குடியேறினர். இங்கு எனக்கு தெரிந்த பெயர்களையே குறிப்பிட்டுள்ளேன். இவர்கள் தாம் குடியேறிய இடங்களை தமது நிரந்தர வாழ்விடமாக உருவாக்கிகொண்டனர்.

இவ்வாறு புதிய இடங்களில் குடிபுகுந்தவர்கள் தமது வாழ்வாதாரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழிவகைகளை ஆராய்ந்தனர். அதன் படி காடுகளையும் தரிசு நிலங்களையும் விவசாய நிலமாக மாற்றினார்கள். மரங்களையும் இலைகளையும் கொண்டு தற்காலிக சிறு குடில்களை அமைத்து வசிக்கலாயினர். தம்மால் துப்பரவாக்கப்பட்ட நிலங்களில் தானியம், வெங்காயம் மற்றும் மரக்கறிச்செய்கை போன்ற விவசாய நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபடலாகினர். அதன்மூலம் அவர்கள் வாழ்விலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைந்தனர். சிலர் விவசாய முயற்சியுடன் பனை தொடர்பான வேலைகளையும் மீன்பிடித் தொழிலையும் இணைத்தொழிலாக மேற்கொண்டனர். இவ்வாறு அவர்கள் இடமாறியபோதும் தமது வாழ்விலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றம் கண்டமைக்கு அவர்களது தன்னம்பிக்கை ஆளுமை கடும்முயற்சி போன்ற தனித்துவப் பண்புகளே பிரதான காரணம் என்பதனை அறியலாம்.

தம்பசிட்டியில் வாழ்ந்த மக்கள் தென்னிலங்கவத்தை எனும் இடத்தில் முதலி கோயில் வைத்து வணங்கி வாழ்ந்து வந்தனர். பின்னர் 15ம் நூஉற்றாண்டளவில் தம்பசிட்டியில் வாழ்ந்த மக்கள் மீண்டும் வேறு இடம் நாடிச் செல்லத்தொடங்கினர். அதன் படி ஒரு பிரிவினர் அல்வாய் மாறாப்புலத்திற்கும் ஒரு பிரிவினர் திருகோணமலைக்கும், மறு பிரிவினர் இளவாலைக்கும் குடிபுகுந்தனர். இளவாலையில் 'வேர்குத்திக்கடவை' எனும் இடத்தில் வசிக்கலாயினர். பின்னர் போர்த்துகேயரின் நெருக்கடியினால் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டனர். திருகோணமலைக்குச் சென்ற மக்கள் 10ம் இலக்க கடற்கரை வீதியில் வசிக்கலாயினர். அத்துடன் காரைதீவிலும் (காரைநகர்) வசிக்கிறார்கள்.

இவர்களது இடம்பெயர்வு நிகழ்வு சமய வாழ்விற்கும் கல்விமுன்னேற்றத்திற்கும் இடையூறு செய்ததில்லை. தாம் வாழ்ந்த காலங்களில் அவ்வவ் இடங்களில் கோயில்களை நிறுவி வழிபட்டனர். அவ்வகையில் தம்பசிட்டி தென்னிலங்கவத்தையில் முதலி கோவிலும், வல்வெட்டியில் விறுமர் கோவிலும் கரவெட்டி கிழக்கில் விறுமர், முதலி வன்னிபிள்ளையார் என பல கோவில்களை நிறுவி வாழ்ந்து வந்தனர். இவர்களது சமயபற்று விரத முறைகளோடு வளரத்தொடங்கியது. இவ்வாறு பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்ற எமது மக்கள் லகள் எதுவும் செய்யாது சுதந்திரமாகவும் சுயகௌரவத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்.

அப்பகுதியில் மற்றைய சமுகத்தவருடன் ஒற்றுமையாகவும் பண்பாகவும் நடந்து தம் குலக் கௌரவத்தை பாதுகாத்து வருகின்றனர். அதனால் அனைத்து மக்களும் எமது மக்களை மதிப்பும் மரியாதையும் கொடுத்து பழகி வந்தனர். அத்துடன் அவ்வப்பகுதி கல்வி நிலையங்களில் சிறப்பாக கல்வி கற்று வந்தனர் என்பதற்கு சாட்சியாக வைத்தியம், சோதிடம், புராணபடலம் முதலிய துறைகளில் ஈடுபட்டுப் பெரும் மதிப்புடையவர்களாக இருந்ததை காணக்கூடியதாக இருக்கிறது.

சாயவேர் வியாபரத்தில் தனியுரிமையுடனும் தனித்துவமாகவும் சிறப்பாக வியாபாரம் செய்த எமது முன்னோர்கள் ஏனைய வியாபுரங்களிலும் ஈடுபடத்தொடங்கினர். இவர்கள் கடல் கடந்து இந்தியா சென்று உப்பு, புடவை முதலியவற்றையும் எடுத்து வந்து வியாபுரம் செய்ததற்கு சான்றுகள் உண்டு. உப்பு வியாபாரத்தில் காலல்துறையினரின் தேடுதலுக்கு பயந்து கிணற்றில் உப்பு மூடைகளை கொட்டித்தப்பினர் எனவும் கூறுகின்றனர். பெரியதோட்டம் எனும் காணியில் உள்ள பாழடைந்த கிணறு இதற்கு சான்றாகும்.

அத்துடன் ஆடு மாடு, கோழி வளர்ப்பும் வியாபாரமும் எமது மக்களால் விரும்பி மிகவும் சிறப்பாக மேற்கொண்டனர். சாயவேர் வியாபாரத்தின் பின்னர் எமது முன்னோர்கள் விவசாயத்தையே மிகவும் சிறப்பாக மேற்கொண்டனர். இதனால் மாறாம்புலம் பகுதியிலும், கிளிநொச்சி, வவுனிக்குளம், முரசுமோட்டை, இளவாலை, கரவெட்டி போன்ற பிரதேசங்களில் மக்களால் இன்றும் மேற்கொண்டு வருகின்ற விவசாய நடவடிக்கைளை குறிப்பிடலாம். இதன் பிரகாரம் விவசாயம் தொழில், வியாபாரம், கல்வி மற்றும் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்காக எமது மக்கள் இன்று அல்வாய் மாறாம்புலம், கரவெட்டி, வல்வெட்டி, இளவாலை, திருகோணமலை, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் நில உடமையாளராக சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். வேர்க்குத்தி அன்று தொட்டு இன்று வரை நிலஉடமையாளராக இருந்து அடிமை வேலை

சுயாதீனமாக இயங்கிய எமது முன்னோர்களிடம் சைவசமய பற்றும் மேலோங்கிக் காணப்பட்டது. .கோவில் வழிபாடுகளும் விரதங்களும் மிகவும் பக்தி பூர்வமாகவும் முறையாகவும் பின்பற்றினர். அத்துடன் சமயக்கிரிகைகளிலும் ஆர்வம் கொண்டு வீடுகளை அலங்கரித்து ஒழுகலாயினர். அன்றைய காலத்தில் எமது மாறாம்புலம் ஊரைச்சுற்றி வேள்விக் கோவில்கள் பல காணப்பட்ட போதும் உயிரினங்களை பலியிடும் முறையை எதிர்த்தனர். இதனாலேயே அவர்கள் தமதுஊரில் வேள்விக்கோவில்களை உருவாக்கவில்லை . அவர்கள் பிள்ளையார், முருகன் முதலான சைவசமய கடவுளரை வழிபடுவதற்கு பக்கத்துக் கிராமங்களுக்கு செல்ல வேண்டி எற்பட்டது. அன்றைய காலத்தில் மற்றவர்களின் கோவிலுக்குள் செல்வது என்பது பிரச்சினைக்குரிய விடயமாக ஆலய கட்டுப்பாடுகள் காணப்பட்டது.

இதனால் இவ்வகையான கோவில்கள் எமது கிராமத்தில் இல்லை என்ற விடயம் அவர்களை வருத்தியது. இந்நிலை அவர்களை மேலும் விநாயகர் மீது அன்பு கொள்ள வைத்தது. இந்த உத்வேகத்தால் 1594 ம் ஆண்டளவில் மாறாம்புலத்தில் பிள்ளையார் கோவில் எமது முன்னோர்களால் நிறுவப்பட்டது.

அன்று தொடக்கம் தனித்துவமானவர்களாகவும், சுயாதீனமானவர்களாகவும் எமது மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காகவும் அடக்கு முறையை எதிர்ப்பதற்காகவும் பல நடவடிக்கைகளும் தியாகங்களும் எமது மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று வரை அதன் பரிமாணம் தொடர்கின்றது.

எமது முன்னோர்களால் எமக்கு அளிக்கப்பட்ட பரம்பரை பழக்க வழக்கங்கள், ஒழுக்ககங்கள், விழுமியம், தன்னம்பிக்கை பண்பாடு, கடும் உழைப்பு, ஒற்றுமை மற்றும் சுயாதீனம் போன்ற பண்புகளால் கட்டியெழுப்பப்பட்ட நாம் இன்று மிகவும் சிறப்புடன் நிமிர்ந்து வாழ்ந்து வருகின்றோம். இந்நாட்டில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் உயர்ந்து நிற்கின்றோம். இன்று இவ்வாறு நாம் சிறப்பாக வாழ்கின்றோம் என்றால் எமது முன்னோரால் எமக்கு வழங்கப்பட்ட பண்பாடு, பழக்க வழக்கங்களே காரணமாகும். இந்நாட்டில் மட்டுமல்ல உலகின் புலம் பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளிலும் தமது பண்புகளுடன் வாழ்நது வருகின்றனர்.

# மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய வரலாறு

இற்றைக்கு 400 வருடங்களுக்கு முன் 1594ம் ஆண்டு இவ்வாலயத்தை நிறுவி பரிபாலித்து நித்திய நைமித்தியம் வழுவாது காத்தவரும் மாறாம்புலம் பகுதிவாழ் மக்கள் தங்கள் குல தெய்வமாகவும், என்றும் துணையாய் நின்று காப்பவரும் இவ்வாலயத்தில் மூல மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்கள்.

தென்னிந்தியாவிலன் ஆலவாய் பகுதியை அண்டிய அல்வாய் மாறாம்புலத்தில் வாழ்ந்தமையினாலோ என்னவோ இப்பகுதி மக்கள் சைவ சமயத்திலும் ஒழுக்கத்திலும் இறுக்கமான கட்டுப்பாட்டுடையவர்களாக வாழ்ந்தனர். வாணிபத்திலும் விசவாசத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட இம்மக்களிடம் சைவசமயப்பற்று மேலோங்கிக் காணப்பட்டது. இவர்கள் சைவ அபிமானிகளாகவும், நல்ல ஆசார சீலராகவும் வாழ்ந்து வந்தனர். விரதம் இருந்து இறைவனைத் துதித்து தோத்திரங்கள் பாடுவதிலும், புராணக்கதைகளை வாசித்து உரை சொல்வதிலும் வல்லவர்கள். இவ்வாறு ஒழுக்க சீலர்களாக வாழ்ந்த வேர்க்குத்தி வாசிகள் தமக்கென சொந்தமான விநாயகர் ஆலயத்தையும் அவர்களின் சைவ அபிமானத்தையும் நிலைநாட்டவேண்டிய தேவை ஏற்பட்டது.

அன்றைய காலத்தில் சமூகப்பிரச்சனைகள் மிகவும் உயர்வாக காணப்பட்டது. உயர்சாதி சமூகம் எனத்தம்மை வரித்துக்கொணடவர்களும், அவர்களால் தாழ்ந்த சாதி, சமூகம் எனக் குறிக்கப்படவர்களும் என ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி சமூகப்பிரச்சனைகள் உயர்வாக காணப்பட்டன. இச்சமூக முரண்பாடுகள், பிரிவுகள், ஏற்றத்தாழ்வுகள் என்பன தொழில், கல்வி, நிலவுடமை, ஆடை அணிதல் மற்றும் கடவுள்களை தெரிந்து பிரித்து வழிபடல் என எல்லாவற்றிலும் உள்வாங்கப்பட்டன. அதன்படி சைவசமயத்தில் காணப்பட்ட கடவுள்களும் அடையாளப்படுத்தப்பட்டு வணங்கப்படலாயிற்று.

இந்த நிலையிற்தான் எமது மக்களின் சைவ வழிபாடு நிலைநாட்டப்பட்டது. அக்காலத்தில் சமூகக் கொடுமைகள் மிகவும் மலிந்த காலம் உயர் குலம் எனக் கூறப்படுபவர்களின் ஆலயங்களுக்குள் தாழ்குலத்தவர் எனக்கூறப்படுபவர்கள் செல்ல முடியாத நிலை. ஏனெனில் தாழ் குலத்தவர்கள் எனக் கூறப்படுபவர்கள் உயர்குலத்தவர்களின் வேலை ஆட்களாகவும் அவர்களில் தங்கி வாழ்பவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் உயர் குலத்தவர்களினால் உருவாக்கப்பட்டு வணங்கப்படும் விநாயர், முருகன், சிவன், அம்மன், கோயில்களுக்குள் சென்று வழிபட முடியாத நிலை காணப்பட்டது. எம் வேர்க்குத்தி மக்கள் நில உடமையாளர்களாகவும், சுயாதீனமாக இயங்குபவர்களாகவும் வாழ்ந்த போதிலும் இவ் ஆலயக்கட்டுப்பாடுகள் அவர்களை வருத்தியதுடன் அவர்களை சிந்திக்கவும் தூண்டியது.

எமது முன்னோர்கள் சைவக்கடவுளில் விநாயகர் மீது மிகுந்த பக்தியும் பாசமும் கொண்டவர்கள். பிள்ளையாரை நினைத்து மனமுருகி, விரதம் இருப்பார்கள். அதிலும் பிள்ளையார்கதை விரதம் என்றால் மிகவும் பக்தியுடன் சிரத்தையாகவும் ஒழுக்கமாகவும் அவ் விரதத்தை அனுஷ்டிப்பார்கள் பக்குவமான பக்தி நெறியைக்காட்டி சைவவழிபாட்டில்

சிறந்தவர்களாக வாழ்ந்து காட்டினார்கள். ஆனாலும் தமது விரதகாலத்தில் பிள்ளையாரை தரிசிப்பதற்காக அயலூருக்கு செல்லவேண்டிய நிலையே காணப்பட்டது.

இந்நிலையிற்தான் இவர்கள் வசித்த இடமருகே பூதறா கோயில் ஒன்று இருந்தது. அங்கு பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். இந்த சிறு விநாயகர் ஆலயம் இன்றும் சிறு ஆலயமாகக் காட்சிதருகின்றது. அக்கோவிலில் விநாயகர் சஷ்டி விரதத்தை முறையாக நோற்றனர். விநாயகர் விரதம் இலகுவானதென்றாலும் முதலில் வணங்கவேண்டியவர் விநாயகப் பெருமான் என்பதாலும் இவ்விரதத்தை அனைவரும் கடைப்பிடிக்கும் வழக்கம் காணப்பட்டது. விநாயகர் சஷ்டி விரத காலம் கார்த்திகை மார்கழி மாதமாகும். இக்காலம் அடைமழை பொழியும் காலமாகும்.

இப்பூதரா கோவிலில் பிள்ளையார்கதை விரதம் சிறப்பாக நடைபெறுவதால் எமது ஊர்மக்களும் அவ்வாலயத்திற்கு சென்று விரதம் ஆனுஷ்டித்தார்கள். எமது ஊரிலிருந்து கூடுதலாக பெண்களே விநாயகர் விரதம் அனுஷ்டித்து அவ்வாலயம் சென்று பக்தி சிரத்தையுடன் விரதம் இருந்தனர். எமது ஊரவர்களில் ஆறாத்தை எனும் வயோதிப மாது ஒருவரும் காணப்பட்டார்.

விநாயகர் கதை விரதம் 21 நாட்கள் மார்கழி மாதத்தில் நடைபெறும். இக்காலம் மழைகாலம்மாகும். எமது ஊரவர்கள் விரதம் அனுஷ்டிப்பதற்காக ஒவ்வொருநாளும் பூதறா கோவிலுக்கு சென்று வருவார்கள் அதிலும் ஆறாத்தை அம்மாவிற்று ஒவ்வொரு நாளும் கோவிலுக்கு சென்று விநாயகர் தரிசனத்தை காணாவிடின் நித்திரை, நிம்மதி இருக்காது. ஆதலால் தவறாது ஒவ்வொரு நாளும் கடும்மழையும் பொருட்படுத்தாது பூசைக்கு போய்வருவார். கூடுதலான நாட்களில் அவர் மழையில் நனைந்தே வீடு வந்து சேருவார். ஏனென்றால் கோவில் மண்டபத்திற்குள் வெளியாட்கள், ஏனைய சமூகத்தவர் செல்வதற்கு அனுமதி இல்லை. இவ்வாறு மழையையும் வசதியீனத்தையும் பொருட்படுத்தாது விரதத்தை கடைப்பிடித்து வந்தார். விநாயகர் விரதத்தில் 21வது நாளில் காப்பு கட்டி மறுநாள் காப்பினை வெட்டி விரதத்தை முடிப்பது வழக்கமாகும். எம்மவர்கள் காப்பு கட்டுவதும் இல்லை வெட்டுவதுமில்லை. அவர்கள் விரதத்தை மனதில் நினைத்து நோற்றனர். இவ்வாறு விரதத்தை கடைப்பிடித்து வரும் வேளையில் பெருங்கதையன்று அடைமழை சோவெனப் பொழியத்தொடங்கியது. ஆறாத்தை அம்மாவும் விநாயகரின் தரிசனத்தை கண்டபின்பே வீடு செல்ல வேண்டும் என்ற வைராக்கியத்துடன் மழையையும் பொருட்படுத்தாது பூதறா கோவிலில் வணங்கியபடியே நின்றார். மழையில் நனைந்தபடியே பூசையில் விநாயகரின் தரிசனத்தை முடித்தபின் நனைந்தபடியே வீடுபோய் சேர்ந்தார். மனதிலே வருந்தி வருந்தி விநாயரை நினைத்து உருகி உருகி விரதத்தை முடித்தார். தமக்கென கோவில் இல்லாமையையும் தனது சமூகத்தின் இயலாத்தன்மையையும் நினைத்த கண்கலங்கி பிள்ளையாரை வணங்கினார். எமக்கு அருள்புரியுமாறு விநாயகரிடம் மனமுருகி வேண்டினார். மனம் தளராது உறுதியாக விநாயகர் சஷ்டி விரதத்தை முடித்த திருப்தியில் சந்தோசத்துடன் நித்திரைக்கு சென்றார்.

ஆறாத்தை அம்மா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது "ஆறாத்தை நீ வருந்தாதே" என விநாயகர் தோன்றி கூறினார். எனை நனைத்து வழிபடும் உன் அன்பை உணர்ந்தேன், நீ துன்பப்பட வேண்டாம். நீ எனை தரிசிப்பதற்கு இனிமேல் அங்கு வரவேண்டாம் . நானே உன்னிடம் வந்துள்ளேன். மாறாம்புலம் எனும் இடத்தில் உள்ள புளிய மரத்தடியில் எனக்கு ஆலயம் அமைத்து வழிபடுக. அவ்விடத்தினை எனது இருப்பிடமாக்கியுள்ளேன். அங்குள்ள புளியமரம் பட்ட மரம் என்பது உனக்கு தெரியும். விடிந்ததும் போய் பார் பட்ட புளியமரம் துளிர்விட்டு உயிராய் நிற்கும் என்று கூறிவிட்டு பிள்ளையார் மறைந்தார்.

பிள்ளையாரே! என அலறித்துடித்தெழுந்து ஆறாத்தை அம்மா பரக்கபரக்க விழித்துக்கொண்டிருந்தார். சிறிது நேரம் தான் படுத்திருந்த பாயை சுற்றிவர பார்த்துக்கொண்டாள். அப்பொழுதுதான் அவர் இன்று தன் கனவிலே விநாயகர் காட்சி தந்ததையும் அசரீரியாக தனது செயலை கூறிவிட்டு மறைந்து விட்டார் என்பதையும் உணர்ந்தார்.

ஆறாத்தை அம்மாவிற்கு உள்ளம் படபடத்துக்கொண்டிருந்தது. கூடவே ஒரு இனம்புரியாத ஒரு உவகையும் அவரை ஆட்கொண்டது. விடிந்ததும் தனது உறவினரை அழைத்துக்கொண்டு மாறாம்புலம் காணிக்கு சென்றார். அங்கு அதிசயம் அங்கிருந்த பட்ட புளியமரம் தளிர் விட்டு பச்சையுடன் பிரகாசித்தது. ஆறாத்தை அம்மா விநாயகரின் அன்பை எண்ணி மனமுருகினார். அன்று பிள்ளையார் கதை பாறணை நாளாதலால் ஆறாத்தை அம்மா அப்புளியமரத்தடியிலேயே தனது பாறணையை முடித்துக்கொண்டார். அங்கு அவர் விநாயகரை மனமுருகி நன்றியுடன் வணங்கி நின்றபோது அப் பட்ட புளியமரம் மேலும் தளிர் விட்டு காட்சிகொடுத்தது.

அன்று முதல் முழுநேர விநாயகர் அடியாராகவே ஆறாத்தை அம்மா மாறிவிட்டார். அவர் புளியமரத்தடியில் சிறு கொட்டில் அமைத்து விநாயகரை பிரதிஷ்டை செய்து வணங்கத் தொடங்கிவிட்டார். விதிமுறை தவறாது விநாயகப் பெருமானுக்குபணிவிடை செய்தார். அன்று முதல் அங்கு கோவில் கொண்ட விநாயகரை பட்டபுளி தழைக்கப்பண்ணிய மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் எனும் நாமத்துடன் வீற்றிருக்கலானார். இங்கு பட்டபுளி தழைத்த சம்பவத்திற்கான பாட்டுப் பாடப்பட்டு வருகின்றது. அவரைத் தொடர்ந்து அவரது உறவினர்களும், ஊரவர்களும் மாறாம்புலம் மாணிக்க விநாயகரை வழிபட்டு விநாயகர் சஷ்டி விரதத்தை சிறப்பாக அனுஷ்டித்து வந்தனர். அன்று தொடங்கிய அம்மக்களின் ஆன்மீக விருட்சம் இன்று பெரிதாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

அன்றைய காலத்தில் எமது ஊரைச்சுற்றுவர வேள்விக் கோவில்கள் காணப்பட்டபோதும் முதல் முதலாக சைவ முறைப்படி விநாயகர் வழிபாடு எம்மக்களாலேயே ஆரம்பமானது. விநாயகர் விரதங்களும் ஏனைய சைவவழிபாடுகளும் ஆசாரமாகவும் ஒழுங்குமுறைப்படியும் நடைபெற்றது. பிள்ளையார்கதை விரதம் எமது ஆலயத்தில் சிறப்பாக கொண்டாடப்படுவதுடன் இவ்விரதம் இன்று ஏனைய அயற்கிராமங்களுக்கும் பரவி கொண்டாடப்படுகிறது.

சிறிது காலத்தின் பின்னர் பட்டபுளி இருந்த இடத்தை கற்பகக் கிரகமாக்கி கல்லினாலும், சுண்ணாம்பினாலும் மடாலயம் கட்டி வழிபட்டனர். 1800ம் ஆண்டளவில் மடாலயம் கட்டிய மண்டபத்திலே பிள்ளையாரை பிரதிஷ்டை செய்யும் எண்ணம் இவர்கள் மனதில் தோன்றியது. அப்போது தென்னிந்திய வர்த்தகத்தில் ஈடுபாடுடைய மக்களில் சிலர் தென்னிந்தியாவிலிருந்து கருங்கல்லினால் செய்யப்பட்ட பிள்ளையார் உருவம் கடல்வழியாக எடுத்து வந்தனர். அவர்கள் இந்தியாவிலிருந்து கட்டுமரத்தில் எமது இடம் நோக்கிவந்து கொண்டிருந்தபோது இலங்கையின் கடற்பிராந்திய சோதனைப்படையினரால் இவர்களின் கட்டுமரம் வழிமறிக்கப்பட்டது. கருங்கல் விநாயகர் உருவத்தடன் வந்தவர்களில் ஒருவர் படையினரிடம் பிடிபட்டுக்கொள்ள மற்றவர்கள் விநாயகர் சிலையுடன் தப்பி ஊர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கருங்கல் விநாயகர் உருவத்தை நீலாவில் கிணற்றில் உள்ள பொந்தில் மறைத்து வைத்துவிட்டு ஒளிந்து கொண்டனர். அவ்வாறு பல சிரமத்தின் மத்தியில் இக் கருங்கல் விநாயகர் உருவமே 1821ம் ஆண்டளவில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இன்றும் வழிபாடு செய்யபடுகின்றமை எமக்கு பெருமையாகும்.

1821ம் ஆண்டளவில் கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்டு நித்திய பூசை ஒழுங்கும் செய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை பிராமணர்கள் மூன்றுகாலப் பூசைகள் செய்து வருகின்றனர்.பிள்ளையார்கதை, சித்திரக்கதை, விநாயகர் புராணப்படிப்பு, சரஸ்வதி பூசை, கந்தசஷ்டி, திருவெம்பாவை என்பன சிறப்பாகவும் விஷேடமாகவும் நடைபெற்று வருகின்றனர்.

## சிறை மீண்டல்

இந்தியாவிலிருந்து கருங்கல் விநாயகரை கொண்டு வந்தவரில் ஒருவர் கடலில் பிடிபட்டு கொழும்பு மகர சிறையில் (மாத்தறை) தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சிறையில் இருக்கும்போது எப்பொழுதும் மாறாம்புலம், மாறாம்புலம் என்றே வணங்கலானார். அப்போது அவருடன் நயினாதீவைச் சேர்ந்த பிராமணர் ஒருவரும் கூட இருந்தார். அப்பிராமணர் மாறாம்புலம் என அடிக்கடி கூறுவதன் காரணத்தை கேட்டறிந்து கொண்டார். அன்றுமுதல் அவரும் மாறாம்புலம் மாணிக்க விநாயகர் பக்தரானார். அவர் மாறாம்புலம் மாணிக்க விநாயகரை வழிபட்டு இங்கு எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் மீது பதிகம் பத்து பாடினார். இங்கே மீண்டும் எமது மாணிக்க விநாயகர் தனது அருளை வெளிப்படுத்தினார். ஆம் அப்பதிகம் பத்து பாடி முடிவுறும் தறுவாயில் அப்பிராமணரும் எமது ஊர் மகனும் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்திற்கு முன்னரே விடுதலையானார்கள். விடுதலையானதும் அவர்கள் இருவரும் நேராக மாறாம்புலம் வந்து பிள்ளையாரை வணங்கினார்கள். அதன்பின்பே அப்பிராமணர் தனது ஊரான நயினாதீவு சென்றடைந்தார். அப்பிராமணரினால் பாடப்பெற்ற பதிகத்தின் காப்புச் செய்யுளில் "கருணை என்மீது வைத்தாளும் எம்பரனே" எனும் வரியினால் அவரின் அன்பினை அறியக்கிடக்கின்றது. இப்பாடல் இன்றும் எமது கோவிலில் பாடப்பட்டு வருகின்றது.

## பூசகரும் செயற்பாடும்

1821ம் ஆண்டளவில் கோவிலில் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு நித்திய பூசை செய்வதற்கு பிராமண குலத்தவர்களை ஒழுங்குபடுத்தினர். முதலில் திக்கம் கிராமத்தில் இருந்த சின்னையா ஐயர் நித்திய பூசை செய்வதற்காக நியமிக்கப்பட்டார்.

கோவிலுக்கென்று நிலமும் ஒதுக்கப்பட்டது. அத்துடன் பிராமணர் குடியிருப்பதற்கென்று காணியும் வழங்கப்பட்டது. இப் பிராமணர்கள் இருந்த இடம் பிராமணர் வளவு என்றும் பிராமணர்க்கு வழங்கப்பட்ட தோட்டம் ஐயர் அடைப்பு என்றும் அழைக்கப்படலாயிற்று. காலக்கிரமத்தில் கோவில் பிறாமணர்க்கு வழங்கப்பட்ட தோட்ட காணிகள் அனைத்தும் அவரின் தனிப்பட்ட உடமைக்குரிய ஆதனங்களாக மாற்றியமைக்கப்பட்டன. பிறாமணவளவு மட்டும் கோவிலுக்கு அ-ர்மையில் நிலைத்து நின்றது. எனினும் சின்னையா ஐயர் காலத்திலேயே கோவிலுக்கு வேண்டிய தீபங்கள், சோடப சாரங்கள், பிள்ளையார் கதை, சித்திரபுத்திரனார் கதை, ஊஞ்சல் ஆகியன உருவாக்கப்பட்டன.

## முதலாவது மகா கும்பாபிஷேகம் – 1926

1926ம் ஆண்டளவில் முதலாவது மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதாக கூறப்படுகின்றது. இக்காலப்பகுதியில் கோவில் பல மண்டபங்களுடன் காட்சியளித்தது. இவ்வாலயம் மடாலயமாக இதற்கு முன்னர் இருந்த காலத்தில் சித்தர் என்பவர் முன்னின்று செயற்பட்டு இக்கோவிலை வழிநடாத்தினார். அதன் காரணமாக அவரே முதன் முதல் மணியகாரணாகவும் செயற்பட்டார். 1930ம் ஆண்டளவில் சுண்ணாம்பினால் கோவிலின் உள்வீதி மதில் கட்டப்பட்டது. இவற்றை சிறப்பாக தடையின்றி கட்டுவதற்காக பலர் தமது பொருட்களையும் பணத்தினையும் நேரத்தையும் செலவிட்டு சிறப்பாக பணியாற்றி ஒற்றுமையோடு வாழ்ந்தனர். மதில் கட்டுவதற்கு தேவையான கற்களை சக்கோட்டை கடல் முருகைக்கற்களே பயன்படுத்தப்பட்டன. அதற்காக ஊரில் வாழ்ந்த அனைவரும் ஆண் பெண் என்றுபாராது தலையில் சுமந்து வந்து கற்களை சேர்த்தனர். இந்நடவடிக்கையில் பங்காற்றிய சிலர் இன்றும் உயிரோடு இருக்கின்றார்கள்.

வருடாவருடம், சித்திரைக்கஞ்சி, ஆணிஉத்தரம், கந்தசஷ்டி, என்பன உரிய முறையில் நடைபெற்று வந்தன. இக்காலகட்டத்தில் துன்னாலையை சேர்ந்த செல்லையா ஐயர் கோவிலை பொறுப்பேற்று பூசை செய்து வந்தார்.

சித்தரின் பின்னர் வல்லிக்குட்டி என்பவர் சிலகாலம் மணியக்காரனாக இருந்தார். இவரின் பின்னர் திரு. சுப்பர் என்பவர் மணியக்காரனாக பொறுப்பேற்றார். இவருடைய காலத்தில் வெளிமண்டபம் கட்டப்பட்டது. இம்மண்டபத்தின் ஆறு தூண்களையும் கட்டுவதற்கு சத்திரந்தை ஆழ்வார் உதவினார். சுப்பரைத் தொடர்ந்து குமாரப்பா என்பவர் மணியகாரனாக செயற்பட்டார்.

## இரண்டாவது மகா கும்பாபிஷேம்

1952ம் ஆண்டளவில் மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்று மருந்தும் சாத்தப்பட்டது. இக்காலத்தில் திரு.சபாபதி என்பவர் கோவிலின் மணியகாரராக செயற்பட்டார். அப்போது அவருடைய தனிப்பெரும் முயற்சியினாலும் ஏனையோருடைய உதவியாலும் மணிக்கூண்டுக் கோபுரம், மணி, பிள்ளையார் எழுந்தருளி, வேல் எழுந்தருளி, திருவாசி என்பன உருவாக்கினார். வருடம் தோறும் பிள்ளையார் மஞ்சத்தில் உலா வருவது உண்டு. தீர்த்தமாடுவதற்கு சக்கோட்டை கடலுக்கு சென்று வருவது வழக்கமாகும். சக்கோட்டையில் தீர்த்தமாடும் இடம் எமது ஆலயத்திற்குரிய நிலமாக இன்றும் காணப்படுகிறது. விநாயகப்பெருமான் தீர்த்தமாடச் செல்வதற்கு மஞ்சம் பயன்படுத்தப்படுகிறது. இம்மஞ்சமானது வ.பு.ஆழ்வாப்பிள்ளை என்பவரால் வழங்கப்பட்டது. மஞ்சம் வருவதற்கு முன்னர் வட்டமான கேடகத்திலேயே எம்பெருமான் கொண்டு செல்லப்படுவார். மஞ்சமானது நாலாபுறமும் யாழியுடன் மிகவும் அழகாக இருந்தது. பீடம், ஊஞ்சல் என்பன திருமலையில் இருந்து எடுத்துவரப்பட்டன. தேர்காவும் கம்புகள் திரு. அன்னலிங்கம் என்பவரால் வழங்கப்பட்டன.

திரு. வ.சபாபதி அவர்களுக்கு உதவியாக ஆழ்வார் இருந்து கோயில் கருமங்களை செவ்வனே நிறைவேற்றி வந்தனர். அப்போது வருடா வருடம் தீட்சை பெறும் வைபவமும் நடைபெற்று வந்தன. இக்காலத்தில், களஞ்சியஅறை, கிணறு, மடம் என்பன உருவாக்கப்பட்டன. இவர்களது காலத்தில் கோவில் தருமகர்த்தா சபை உருவாக்கப்பட்டது. திரு.சி.மாணிக்கம், திரு. சி.ஏரம்பு, திரு.க.வேலுப்பிள்ளை ஆகியோரால் பரிபாலனசபை உருவாக்கம் பெற்றது. இச்சபையில் முதலாவது மனேஜராக திரு. சின்னத்துரை என்பவர் தெரிவு செய்யப்பட்டார். முன்னைய காலத்திலிருந்து இன்று வரை வேர்க்கத்தியின் ஆண் சந்ததியினரே கோவில் நிர்வாகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டனர் என்பது குறிப்படத்தக்கது.

## மூன்றாவது மகா கும்பாபிஷேகம்–1994

மீண்டும் எமது கோவில் அழகாகவும், அழகிய வெள்ளைப் பொழிகல், சீமெந்து என்பவற்றால் கட்டவேண்டும் என்று எம்மக்கள் விரும்பினார். அதற்காக 1977ம் ஆண்டு பாலாபிஷேகம் செய்யப்பட்டு திருப்பணிச் சபையினரும் தமது செயற்பாட்டை விரைவாக தொடங்கினர். அதற்காக அப்போது பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. வேலும்மயிலும் அத்திவாரக்கல்லை நாட்டி திருப்பணி வேலைகளை தொடக்கி வைத்தார்.

மல்லாகம் சிற்பாச்சாரி திரு. பசுபதி பொழிகல் வேலைகளைச் செய்து வந்தார். பொழிகல் வேலைகள் யாவும் முடிந்தபின் மேல் வேலைகள் நடைபெற்றன. இக்காலத்தில் 1983ம் ஆண்டின் பின்னர் நாட்டில் அரசியல் பிரச்சனைகள் மிகமோசமாகி யுத்தம் நடைபெற தொடங்கின. மரணங்களும், இடப்பெயர்வுகளும் கைதுகளும் சாதாரணமாக இடம்பெற்றன. ஆலய திருப்பணிக்காக இருந்த மூலப்பொருட்கள் காணாமல் போயின. சீமெந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது. இதனால் திருப்பணி வேலைகள் ஸ்தம்பித்த நிலையில் இருந்தது.

இக்காலவோட்டத்தில் எம்மவர் பலர் வயோதிப நிலையை அடைந்தனர். அவர்களின் அர்ப்பணிப்போடு தொண்டு வேலைகள் செய்த சிலர் இறக்கும் நிலையேற்பட்டது. கோவிலில் சிறப்பாக உதவிகள் செய்து வந்த திரு. மா.சண்முகேஸ்வரமூர்த்தி யுத்தத்தின் பிடியில் இளமையில் மரணமானார். இவை யாவும் கட்டுமான வேலைகளை பின்னடையச் செய்தது.

ஆலயத்தை புனருத்தாபனம் செய்யும் பொருட்டு 1977ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்ட எமது ஆலய திருப்பணி வேலைகள் 1994ம் ஆண்டில் நிறைவுக்கு வந்தது. 1994ம் ஆண்டு ஆடி மாதம் 06ம் திகதியில் துதியைத்திதியும் பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிருந்து அலங்கார உற்ஷவம் பத்துத்தினங்கள், ஆனிப்பூசம் அமாவாசையிலிருந்து பூரணை வரை நடைபெற்று வந்தன. இந்த அலங்கார உற்ஷவத்தை மகோற்ஷவமாக்குவதற்கு அடியவர்களாகிய நாம் விரும்புகின்றோம். இதற்கு எம்பெருமான் அருள்புரிவாராக.

இதுகாலவரை நடைபெற்ற திருப்பணியில் ஊர்மக்கள் முழுப்பொறுப்பையும் மனமுவந்து செய்துள்ளார்கள். பணமாகவும், பொருளாகவும் எல்லோரும் உதவி புரிந்துள்ளார்கள். அத்துடன் தனிப்பட்ட ரீதியிலும் திருப்பணி வேலைகளுக்கு உதவினார்கள். அவ்வாறானோர்கள் எல்லோரும் எமது நினைவிற்கும் நன்றிக்கும் உரியவர்கள். அப்போது தனிப்பட்ட வேலைகள் செய்தோரின் விபரங்களை மட்டும் குறிப்பிட்டுள்ளேன்.

| | திருப்பணி வேலைகள் | உதவிபுரிந்தோர் |
|---|---|---|
| 01. | மணி, பிள்ளையார் எழுந்தருளி | வ.சபாபதி |
| 02. | மூலஸ்தான திருப்பணி | சி. ஆழ்வாப்பிள்ளை குடும்பம் |
| 03. | அர்த்தமண்டபம் (3ம் மண்டபம்) | க.வேலுப்பிள்ளை குடும்பம் |
| 04. | மணிக்கூண்டு கோபுரம் | வே.கந்தசாமி குடும்பம் |
| 05. | வசந்த மண்டபம் | மா. ஸ்ரீரங்கநாதன் குடும்பம் |
| 06. | மடைப்பள்ளி, களஞ்சியம், வாகனசாலை | சி.கணேசமூர்த்தி |
| 07. | தரிசன மண்டபத்தின் எட்டுதூண்கள், | சத்திரந்தை |
| | முருகன் எழுந்தருளி | ஆ.செல்லத்துரை குடும்பம் |
| 08. | ஆலய மின்சார வேலைகள் | பு.நவசிவாயம் |
| 09. | தீர்த்தக்கிணறு திருத்தம் | சி.மாரிமுத்து |
| 10. | நந்தி, பலிபீடம் | ஆ.சிவகுரு (வல்வெட்டி) |
| 11. | ஒலிபெருக்கி | அருமைலிங்கம் (வல்வெட்டி) |
| 12. | வைரவர், சகடை | நல்லதம்பி (ரத்தினம்) |
| 13. | எலி வாகனம் | இராசலிங்கம் |

மேலும் பல்வேறுபட்ட பொருட்களையும் சேவைகளையும் எமது ஊர்மக்கள் எல்லோரும் வழங்கி ஆலயத் தேவைகளை நிறைவேற்றி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உதவி புரிந்தனர். இவ்வாலயத்தின் தேவையை உணர்ந்து நிறைவு செய்த எமது ஊர்மக்களை பிற்கால சந்ததியினர் நினைவு கூர்ந்து நன்றி சொல்வார்கள். அத்துடன் அவர்களும் மேலும் மேலும் எமது கோவிலை அழகுபடுத்தமுன்வருவார் என்பது எனது எண்ணம்.

## நான்காவது மகா கும்பாபிஷேகம்

எமது ஆலயத்தினை மேலும் அழகுபடுத்துவதற்காகவும் எம் விநாயகரின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் மீண்டும் புனருத்தாபனம் செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2007ம் ஆண்டு எமது ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மூன்றாவது கும்பாபிஷேகத்தின் பின்னர் ஆலயத்தின் தேவைகளை உணர்ந்து பலர் தமது பெரும் உதவிகளை புரிந்தனர். அந்த வகையில் அவர்களையும் இங்கே குறிப்பட விரும்புகிறேன்.

| | | |
|---|---|---|
| 1. | சித்திரத்தேர் | திரு. பெ.சிவானந்தன் |
| 2. | தேர் முட்டி | திரு. பெ.சிவானந்தன் |
| 3. | பஞ்சமுக விநாயகர் | திரு. ச.முருகையா |
| 4. | தேர் வீதி | பொது மக்கள் |
| 5. | யானைமுக வாகனம் | திரு. சிவலிங்கம் (கரவெட்டி) |
| 6. | தண்ணீர்த்தாங்கி | திரு. மா.ஜெயரூபன் |

இப்போது நான்காவது கும்பாபிஷேகத்துக்கான திருப்பணி வேலைகள் எம்மக்களாலும் வெளிநாடுகளில் வாழுகின்ற எமது பிள்ளைகளினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் மிக வேகமாக நடந்த திருப்பணி வேலைகள் இப்போது மந்த நிலையில் காணப்படுகிறது. எனவே எமது மக்களும் நிர்வாகமும் சிறந்த நடவடிக்கை எடுத்து கடும் உழைப்பினை வழங்கி திருப்பணி வேலைகளை முடிவுறுத்தப்பட வேண்டும். அதன் மூலமே எம் பெருமானுக்கு மகிழ்வினை ஏற்படுத்த முடியும். அதன் மூலமே எம் மக்களுக்கான அருளினைப் பெறமுடியும்.

## எனது சமூக சமய அரசியல் தொடர்பான பதிவுகள்

நான் 1932 ஆம் ஆண்டு பிறந்தேன். ஐந்து வயதாகிய பின் ஆரம்பக்கல்வியை சக்கோட்டை றோ.க.வில் ஆரம்பித்தேன். தொடர்ந்து ஐந்தாம் வகுப்பு வரை கற்று மேல் வகுப்பிற்காக தேவரையாளி சைவ வித்தியாசாலைக்கு சென்று எட்டாம் வகுப்பு வரை கற்று வந்தேன். 1945 ஆம் ஆண்டு ஆங்கிக்கல்வி இலவசமாக வழங்கவதற்கு ஏற்பாடாகி நெல்லியடி மத்திய கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலம் கற்கத்தொடங்கினேன். ஆரம்பத்தில் 6யு வகுப்பில் படிக்கத்தொடங்கி ஆங்கிலத்தில் கனிஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தேன். தொடர்ந்து ஒன்பதாம் பத்தாம் வகுப்பு வரை இக்கல்லூரியில் ஆங்கில சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியெய்தினேன்.

1953 ஆண்டு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அப்பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்க எனக்கு நியமனம் கிடைத்தது. கவிஞர் மு.செல்லையா,க.முருகேசு ஆகியவர்கள் வந்து கேட்ட பின் நானும் வீட்டாரும் சம்மதித்து பாடசாலைக்கு கற்பிக்கச் செல்லத்தொடங்கினேன். ஸ்ரீலங்கா வித்தியாசாலை அரசினரால் பெறுப்பேற்காத நிலையில் சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் மாதம் 25 ரூபாய் வழங்கினார். 1956 ஆம் ஆண்டு அரசினர் நன்கொடை பெறும் அந்தஸ்து கிடைத்து. முழுசம்பளமும் வழங்கப்பட்டது. பாடசாலைக்கு ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு மிகுதியை மு.செ எனக்கு உதவினார். இக்காலப்பகுதியில் பாடசாலை வளர்ச்சிக்காக விசேட வகுப்புகள் இரவில் நடத்துவோம். என்னிடம் படித்தவர்கள் பல நல்ல பதவிகளில் இருக்கிறார்கள் எனக்கும் மதிப்பும் கொடுக்கிறார்கள்.

பாடசாலை சார்ந்த சமூக மக்களுடன் மிகவும் நெருக்கமாகவும் பழகி அவர்களது நன்மதிப்பைப் பெற்றேன். எல்லோருடனும் அன்பாக பழகி மகிழ்ச்சியுடன் இருந்த என்னை சகலரும் நேசித்தார்கள் கிராம மக்களிடம் வேற்றுமை காட்டாது ஒற்றமையாகவும், விட்டுக்கொடுத்தும் பண்பாக நடந்தமையாலும் எல்லோராலும் உபாத்தியாயர் என அன்போடு அழைக்கப்பட்டேன். மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் மடாலயமாக இருந்தமையால் விநாயக சஷ்டி சிறப்பாக 21 நாளும நடைபெறும். அப்போது ஆலய விடயங்களில் நான் முன்நின்ற நடத்துவேன்.

வருடா வருடம் நாடகம் நடத்தப்படும். எல்லாவற்றிற்கும் நானே பொறுப்பாக இருந்து கவனித்து வந்தேன். ஊர் இளைஞர்கள் எல்லோரும் என்னிடத்தில் நம்பிக்கை வைத்து செயற்பட்டார்கள். 1958 ஆம் ஆண்டளவில் கோவில் கட்டும் பணியில் ஈடுபட்டு அதற்குரிய வேலைகளில் செயல்பட்டேன். அப்போது உதவி அரச அதிபராக இருந்த பி.வேலும்மயிலும் அவர்களால் அத்திவாரக்கல் வைக்கப்பட்டது. கோயில் முழுமையாக இடிக்கப்பட்டது. மல்லாகம் பசுபதி கல் வேலைகளை செய்து வந்தார்.

நான் சமூக, சமய தொடர்பால் மக்கள் என்னிடம் நெருங்கிப்பழகியதால் அரசியலிலும் நாட்டம் ஏற்பட்டது. கிராம சங்க தேர்தலில் க.சி.மாணிக்கம் அவர்களை அல்வாய் கிராம சபைத் தேர்தலுக்கு நிற்கச் செய்து ஆதரவுகாட்டினேன் பலர் என்னுடன் ஒத்துழைத்தார்கள்.

பாராளுமன்றத் தேர்தலில் தோழர் க.தர்மகுலசிங்கம் போட்டியிட்ட போது அவருக்கு ஆதரவாக பெரியவர்களுடன் சேர்ந்து ஆதரவு திரட்டினேன். இலங்கை சமசமாசக்கட்சியில் இருந்தேன். இதன் பின்னர் பொன் கந்தையாவுக்கு கம்யூனிஸ்ட்கட்சிக்கு மாறி ஆதரவு தேடினேன். அப்போது எமக்கு கட்சி பெரிதாகப்படவில்லை. எமது சமூகத்தின் தேவையை யார் நிறைவேற்றி தருவதான கோரிக்கைகளை முன்வைத்து களத்தில் இறங்குவோம். பின்னர் இலங்கை தமிழரசுகட்சி தோற்றம் பெற்று மக்களின் ஆதரவ பெருகிவருவதை உணர்ந்த நான் தோழர் க.துரைரத்தினத்தை ஆதரிக்கத் தொடங்கினேன். இக்கட்சிக்காக உழைத்தேன். பின்னர் தமிழர் விடுதலைக்கூட்னியில் தோழர் த.இராசலிங்கத்திற்கும் வாக்கு கேட்டு மக்களிடம் சென்றுள்ளேன்.

எமது சமூக மக்கள் குறைவாக இருந்தமையால் ஒரு தனிப்பாரம்பரிய முறைகளைக் கடைப்பிடித்து வந்ததர்கள். எம்மவர்களை வேர்குத்தியர் என்று தொழில் முறையாக அழைத்து வந்தார்கள். சொந்தமாக நிலங்களை வைத்திருந்தார்கள் அதனால் ஏனைய சமூகத்தினரும் மரியாதையுடன் பழகுவார்கள் எனது தந்தையர் அல்வாய் மேற்கு கிராம அலுவலர் அவர்களுடன் (நான் சின்ன வயதள்ளவனாக இருக்கும் பொழுது) கூடச் சென்று வருவதால் சின்ன விதானையார் என அழைக்கலானார். எமது சமூகத்தில் அடக்குமுறை அதிகம் இருந்தமையால் ஆரம்ப காலத்தில் நான் சமூக சேவக சங்கம், சிறுபான்மை தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு இயக்கம் ஆகியவற்றில் ஈடுபட்டு சமூக விடுதலைக்கு பாடுபட்டேன் .இதன் மூலம் பலருடைய தொடர்பு உண்டாயிற்று. எமது சமூகம் கல்வி சமய வழிகளில் நாட்டமுடன் காணப்படடனர். அதனால் ஒரு வாசிகசாலை ஆரம்பிக்க

உத்தேசித்து கோயிலுக்கு பக்கத்தில் இளைஞர்களின் உதவிடன் உருவாக்கிவைத்தேன். பலர் இதற்க உதவினார்கள் பல வருடங்கள் நடாத்தி வந்தேன். இக்கால கட்டத்தில் எமது கிராமத்திற்கு ஒரு கிராம முன்னேற்ற சங்கம் வேண்டும் என்ற ஆவல் எற்பட்டது. அல்வாய் மேற்கு, அல்வாய் வடக்கு பகுதிகளில் எனைய சமூக மக்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் வைத்திருந்தார்கள். இத்தருணத்தில் உள்ளூராட்சி மந்திரி பருத்தித்துறையில் உள்ள கல்லூரியில் கூட்டம் வைத்து மக்களின் குறைகளை கேட்டு நிவர்த்தி வழிமுறைகளை கூறினார். அக்கூட்டத்தில் நான் ஆங்கிலத்தில் பேசினேன். உதவி அரச அதிபர் க.வேலும்மயிலும் தலைமை வகித்தார். அங்கு எமது கிராமத்திற்கு அபிவிருத்திச் சபையினை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 1976ம் ஆண்டு தொடக்கம் கிராம முன்னேற்ற மன்றம் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து நான் பேசகராக செயலாற்றினேன். தற்பொழுது இது செயற்படவில்லை. இது மிகவும் வருத்தமாக இருக்கிறது. வாசிகசாலை, கிராம முன்னேற்றக் கழகம் கோவில் இவற்றின் வளர்ச்சிக்கு என்னுடன் பல வழிகளில் கோ.இ.மகாலிங்கம், பு.வேலாயுதம் ஆகியவர்கள் மிகவும் உழைத்தார்கள்.

கிராமத்தில் பல்வேறு முன்னேற்றங்களில் முன்னின்று சேவை செய்த பலனாக நான் கிராமத்தில் மட்டுமல்ல அயற்கிராம மக்களுடன் நட்புடன் பழகி வருகின்றேன்.
இன்றும் என்னுடன் பலரும் அன்பு பாராட்டி மரியாதை செய்து வருகிறார்கள். இத்தகைய சமூகசேவையினை கருதில் கொண்டு 2002 ம் ஆண்டு சமாதான நீதவான் என்ற பட்டம் தந்து அகில இலங்கை ரீதியில் பாராட்டியுள்ளார்கள்.

எமது மக்கள் விவசாயிகள் தங்கள் உற்பத்திப்பொருள் விற்பனை செய்பவர்கள் இவற்றை வாங்க வருபவர்கள் இக்கிராமத்தில் சிறு கடையில்லாத குறையை கூறுவார்கள். அதனை மனதில் எண்ணி வீட்டில் ஒரு சிறு கடை வைத்து மக்களுக்கு உதவினேன். எனது மனைவி வீட்டில் குழந்தைகள், தகப்பன், தோட்டம் இவற்றின் மத்தியில் கடையினையும் குடும்பத்தையும் திறம்பட காத்து வளர்த்தார். நான் தூர இடங்களில் வேலை செய்த போதும் பிள்ளைகளின் படிப்பு பாதிக்காத வகையில் குடும்பத்தையும் பிள்ளைகளையும் பார்த்து கடையையும் நடத்தி உதவி செய்தார். மனைவியிடம் பொறுமைக் குணம் நிறையக் காணப்பட்டமையால் உறவுகளையும் பொருளையும் சம்பாதித்து எனக்கு பெருமை சேர்த்தார் என்பதை என்றும் மறக்க இயலாது. எனது சேவை என்றும் என் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற ஆவல் எப்போதும் என்னுள் இருக்கின்றது. அந்த வகையில் தொடர்ந்தும் எனது சேவை எம்மக்களுக்கு கிடைக்க வாழ்வேன் .எல்லோருடைய வளமான வாழ்விற்கும் எனது உதவிபுரிவேன் . அதற்கான சக்தியையம் அருளையும் வழங்குமாறு எனது மாறாம்புலம் மாணிக்க விநாயகரை வேண்டி எனது உரையை முடிக்கிறேன்

(எனக்கு பாராட்டு விழா வழங்கிய நிகழ்வில் என்னால் நிகழ்த்தப்பட்ட உரை).

# எமது முன்னோர்கள்

ஆலயத்தோடும் சமூக விழுமியங்களோடும் பங்காற்றிய பலர் எமக்களால் நினைவு கூறப்படத்தக்கவர்கள் அவர்களின் செயற்பாட்டை எல்லாரும் அறியும் முகமாக எழுத்துருவில் நிறுத்த முற்படுகிறேன். எனக்குத் தெரிந்தளவில் முயற்சி செய்கிறேன் பிழைகளும் இருக்கலாம் மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

மாவடி திரு. முதலி பெரியதம்பி

இவர் அக்காலத்தில் 8ம் வகுப்பு படித்து அத்துடன் சோதிடம், வைத்தியம், கற்று ஊரில் வைத்தியம் செய்து வந்தார். சோதிடத்திலும் மத அநுட்டானங்களில் சிறந்து விளங்கினார் . இவருடைய புலமையை அறிந்து அல்வாய் வடக்கு கந்தப்பு, அல்வாய் தெற்கு தம்பையா ஆகியோர் நெருங்கிய நண்பர்களானார்கள். சோதிடர் தம்பையா அவர்களிடம் ஓய்வு நேரத்தில் குறிப்பு எழுதி உதவி வந்தார். அக்கால கட்டத்தில் வதிரி கா. சூரன் ஆச்சாரியார் திண்ணைப்பள்ளிகள் பலவற்றை ஒன்றாக்கி தேவரையாளி சைவ வித்தியாசாலை ஆரம்பித்துப் பிள்ளைகளைச் சேர்க்கத் தொடங்கினார். எமது ஊரிலிருந்து பலமாணவர்கள் கற்கச் சென்றனர். அப்பொழுது ஆசிரியர்கள் எமது மாறாம்புலத்தில் இல்லாத காரணத்தால் திரு. மு. பெரியதம்பி உபாத்தியாராக நியமிக்கப்பட்டுச் செயற்பட்டார். இவருடன் திரு. க. கந்தப்பு, திரு. க. தம்பையா ஆகிய மூவரும் ஆசிரியர்களானார்கள்.

இவ்வாறு சமூக, சமய சோதிடம் ஆகிய மூன்று துறைகளில் முன்னோடியாக விளங்கிய பெரியதம்பி உபாத்தியாரை நினைவு கொள்ளும் பொருட்டு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை கவிஞர் மு.செல்லையா அவர்களின் முயற்சியினால் ஆரம்பித்து பாடசாலையில் இல்லத்துக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டு இன்றுவரை புகழுடன் விளங்கி வருகின்றார்.

திரு. கொ. கோவிந்தர்

இவர் சமூக, சமயபணிகளில் மிகுந்த ஈடுபாடுடையவர். அக்காலத்தில் தீட்சைபெற்ற சைவ ஆசால சீலர். இவர் தம்பையா, கந்தப்பு, (இவர்கள் அல்வாய் தெற்கு, வடக்கு) வதிரி சூரன் மூ.சி. ஆகிய பெரியார்களின் நண்பனாகி சமூக மேம்பாட்டுக்கு உழைத்தவர் அக்காலத்தில் எமது சமூகம் கல்வி அறிவில் பின்தங்கி உள்ளனர். கல்வி வளர்ச்சிக்குப் பல்வேறு ஆலோசனைகள் கூறி மக்களை வழி நடாத்தி வந்தார். மாறாம்புலப் பிள்ளையாரில் பக்தி உள்ளவர். விழாக்காலத்தில் வடக்கு வீதியில் தோத்திரப் பாடல்கள் பாடுவார். இவர் சிறந்த மேசன் தொழிலாளி ஆவார். முதிய பருவத்தில் இறையடி சேர்ந்தார்.

திரு. வைரி ஆழ்வார்

இவர் மாறாம்புலப் பிள்ளையார் ஆலயத்தொண்டு அடியார் என்று கூறினால் மிகை ஆகாது நான் சிறுவனாக இருந்த காலத்தில் ஆலயத்தில் பிள்ளையார் கதை படித்து வருவார் அக்காலத்தில் பிள்ளையார் கதை ஏட்டுச் சுவடியிலே இருந்தது மிகுந்த சிரமத்தின் மத்தியில் நாள் தோறும் கதை படித்துக் காப்புச்சொல்லுவார் பெருங்கதையன்று பெருங்கதைப்படிப்பு படிப்பார்.

சித்திரைப் பூரணை அன்று சித்திரைக் கதை படிப்பார். இக்கதையும் ஏட்டிலே உள்ளது. இவற்றைத் தனது இளமைக்காலந்தொட்டு முதுமை வரை படித்து வந்து எல்லாராலும் படிப்புக்காரன் எனப்போற்றப்பட்டு வந்தார். பிற்காலத்தில் பாரிச நோயினால் வருந்தி இறைவனடி சேர்ந்தார்.

க. சி. கதிர்காமர் (வைத்தியர்)

இவர் சிறந்த வைத்தியராவர் கல்வி அறிவிலும் சிறந்து விளங்கினவர். இவர் திருமலையில் வசித்து வந்தார். மாணிக்கப்பிள்ளையார் மீது ஊஞ்சல்பாடி அதனை எழுதிவைத்தார். அவ்வேடு இன்னும் ஆலயத்தில் இருக்கின்றது. மாறாம்புலப்பதிகம் இவராலே சீரமைக்கப்பட்டு 1937ல் அச்சுப்புத்தகமாக வெளியிடப்பட்டத. பின்பு மாறாம்புலத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட வேலாயுதருக்கும் ஊஞ்சல் பாடி அதனை அச்சிட்டு வெளியிட்டார் அப்பாடல் பாடியபோது தம்பசிட்டியில் இருந்தார். கண்கள் தெரியாதபோது வாயால் சொல்ல சி. கணேசமூர்த்தியால் எழுதப்பட்டது. அவ்வூஞ்சல் பாட்டை அவரது மகன் க.சி.க.சிவஞானபண்டிதர் அவர்களினால் அச்சுப்பதிவு செய்யப்பட்டது. இப்பாடல்களை மறு பிரசுரம் செய்து உதவினார் மா. விஜயநாதன்.

வல்லி சபாபதி (திருகோணமலை)

இவர் உத்தியோகமாக திருமலைக்குச் சென்று குடும்பமாகப் பல காலம் வாழ்ந்து பின் அல்வாய்க்கு வந்து ஆலயப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார் என்று கூறுவதில் பெருமையடைகிறேன். மாறாம்புலம் ஆலயம் ஆதிச் சைவ மரபில் ஸ்தாபிக்கப்பட்டது. திரு. சித்தர் மணியத்தின் பின் திரு. சுப்பர் மணியகாரராகப் பொறுப்பேற்று ஆலயத்தில் சில வேலைகளைச் செய்தார். அவருக்கு உதவியாக ஆழ்வார். சபாபதி ஆகியவர்கள் செயல்பட்டனர். பலிபீடத்தைக் கொண்ட தரிசன மண்டபம் ஓலைக் கொட்டிலாக இருந்ததை திரு. சுப்பர் கல்லினால் மண்டபமாகக் கட்ட முற்பட்டார். அதற்கு சத்திரத்தை ஆழ்வார் ஆறு தூண்களால் நிறுவிக்கொடுத்தார். அதன்பின் பொதுமக்களின் உதவியோடு கூரை போடப்பட்டு ஓடுகள் வேயப்பட்டன. சபாபதி, ஆழ்வார் இவர்களோடு சி. சின்னத்துரையும் அயராது பாடுபட்டார். அக்காலத்தில் ஆலய பூசகர் கூலி வருடத்துக்கு ஒருமுறையே கட்டப்படும் பெருங்கதையன்று எல்லா அங்கத்தவர்களும் தங்கள் பங்கைச் செலுத்தி உரிமை பெறுவர்.

ஆலயத்தின் கிணறு, மடப்பள்ளி மடம் ஆகியன திரு. வ. சபாபதி அவர்களின் காலத்தில் நடைபெற்றன. இவர் ஊர்கள் தோறும் சென்று நிதிசேர்ப்பார். ஆலய விழாக்கள் எல்லாம் சிறப்பாக நடைபெறச் செய்வார்.

இவருடைய காலத்தில் கொக்குவில் இரகுநாத ஐயர் அவர்களின் வழித்தோன்றலில் உள்ள பிராமணரைக்கூட்டி வந்து சைவ பிள்ளைகளுக்குத் தீட்சை கொடுத்து வந்தார். இது வருடா வருடம் நடைபெறும்.

இவருடைய சீரிய தனி முயற்சியால் ஆலய தண்டா மணியும் எழுந்தருளிப் பிள்ளையார் சிலையும் ஆலயத்துக்குக் கிடைத்தன. மணிக்கோபுர வேலையையும் பொது நிதியிலிருந்து நிறுவினார்.

இதுகாலவரை ஒருங்கமைப்பு இன்றி இருந்த ஆலயத்தை ஸ்தாபன ரீதியாக ஒரு நிறுவனமாக ஆக்கப்படுயிட்டார்.

அதன்பிரகாரம் மாறாம்புல மாணிக்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை ஒன்று 1950 அளவில் தோற்றுவிக்கப்பட்டு இன்றுவரை பரிபாலன சபையால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது.

பூசகர் வேதனம் மாதம் நான்கு அங்கத்தவர்கள் வீதம் வருடத்துக்கு எட்டுப்பேர் வழங்கிவந்தர்கள். 1965ல் இவர் முதுமை அடைந்து மீண்டும் திருமலை சென்று அங்கு இறைபதம் எய்தினார்.

சிதம்பரன்--கிட்டினன்

இவர் கல்வி அறிவில் சிறந்தவர். சாஸ்திர நூல் கற்று குறிப்புகள் எழுதும் வல்லமை பெற்றவர். தேவாரம், திருவாசகம், பண்ணோடுபாடும் வல்லமையுடையவர். பிள்ளையார் புராணம் கற்றுப் பயன் சொல்லும் ஆற்றல் இவரிடம் உண்டு. ஆலயத்தில் புராணப் படிப்பு இடம் பெறும்போது இவர் பயன்சொல்லி வருவார். இவர் சிறந்த தொழிலாளியாக இருந்து பின் பாரிச வாத நோயினால் உயிர் நீத்தார்.

சிதம்பரன் ஆழ்வார்

இவரும் சிறந்த தொழிலாளி தோட்ட வேலையிலும் மரத்தொழிலும் சிறந்து விளங்கினார். இவர் ஆலய பரிபாலனசபையின் தலைவராக இருந்து பல சேவைகள் செய்தார் ஆலயம் புதுப்பிக்கப்பட்ட போது மூலஸ்தான ஸ்தூபிக்கலசம் இவரால் பிரதிட்டை செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றது. 1997ல் முதுமையடைந்து இறைபதம் எய்தினார்.

கந்தர் வேலுப்பிள்ளை

இவர் ஒரு சைவ ஆசார சீலர் . எக்காரியம் செய்யினும் நாள் கோள் பார்த்து நல்ல நாளில் கருமம் ஆற்றுவார். இவருடைய காலத்தில் இரண்டாவது மண்டபம் நிறைவேற்றித் தொண்டுகள் செய்தார். ஆலய கும்பாபிஷேகத்தின் போது இரண்டாம் மண்டபத்தின் வடக்கு நோக்கிய கோபுரக் கலசம் இரண்டும் இவருடைய கையினால் பிரதிட்டை செய்யப்பட்டது. இவர் முதல் பரிபாலன சபைச் செயலாளராக நியமிக்கப்பட்டுச் சபை உருவாகியது. எனலாம்.

வே. கந்தசாமி

இவர் அக்காலத்தில் 8ம் வகுப்புவரை கல்வி கற்றுத் திறமையாகத் தொழில் செய்து வந்தார். அப்பொழுது நல்ல வழிகாடிகள் இல்லாத காரணத்தால் தொடர்ந்து படிக்க இயலவில்லை. இவருடன் பலர் நன்கு கற்று வந்து இடையில் தொழில் செய்து வந்துள்ளனர். கல்வி கற்கும் வசதிகள் அக்காலத்தில் இல்லை பொருளாதார வசதிகளும் இல்லாத நிலையில் இவ்வூரில் பலர் தொடாந்து கற்க இயலாமற் போய்விட்டது. ஆலய கும்பாபிஷேக காலத்தில் மணிக் கூண்டுக் கோபுரக் கலசம் இவரது கரத்தினால் பிரதிட்டைசெய்யப்பட்டது. இவர் 1998ல் திடீரென நோய் தாக்கி இறைபதம் எய்தினார்.

சி. ஏகாம்பரம்

இவர் அக்காலத்தில் 8ம் வகுப்புவரை கல்வி கற்றுச் சிறந்த விவசாயியாக வாழ்ந்தார் குடும்ப நிலைமையைச் சீர் செய்யும் நோக்கில் கொழும்பு சென்று ஒரு கடையில் வேலை செய்து வந்தார். பின்னர் இவர் திருகோணமலையில் விவகாஞ் செய்து அங்கு சொந்த வியாபரத்தில் ஈடுபட்டு முன்னேறி இப்போது அங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார். இவர் பிள்ளையாரில் பக்தி உள்ளவர் பல அன்பளிப்புக்கள் செய்து வந்துள்ளார். கோயிலுக்கு வெள்ளை கட்ட வீடு வீடாகச்சேலை எடுத்துக்கட்டி விழா நடப்பது வழக்கம் அதனை உணர்ந்து 6 வெள்ளச்சேலைகள், அலங்கார சோடனைகள். கோயில் வெளிமண்டபத்தின் நீளத்தில் தந்து உதவினார்.

க. இராமலிங்கம்

இவர் படிப்புக்காரர் ஆழ்வார் அவர்களின் மகளைத் திருமணஞ் செய்து வாழ்ந்தவர் கோயிலில் பற்றுக்கொண்டு கிணறு மடப்பள்ளி, மடம் என்பனவற்றை புதுப்பித்துத் தொண்டுகள் புரிந்து வந்தவர் இளவயதில் இறைவனடி சேர்ந்தார். இவரது மனைவி கோவிலம்மா அவர்களால் கோவிலுக்கான மின்சார வேலைகள் செய்து உதவினார்.

சி. தம்பிப்பிள்ளை

இவர் அக்காலத்தில் சிறந்த கல்விமானாக 8ம் வகுப்புவரை கற்றுள்ளார். தன் குடும்ப நிலை காரணமாகத் தொடர்ந்து படிக்க இயலாது தொழில் தேடித் திருமலை சென்று அங்கு குடியேறினார். ஆலய விழாக்கள் காலத்தில் தேவாரம், திருவாசகம் பண்ணோடு படித்து அடியார்களை மகிழ்விப்பார் . இவர் மிக இளவயதில் நோயுற்று இறந்து போனார்.

ச. அன்னலிங்கம்

இவர் பிள்ளையார் மீது அதிக நம்பிக்கையுடையவர் கோயிலில் தொண்டு செய்து வருவார். இவர் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டபோது பிள்ளையாரை வேண்டுதல் செய்து அதனால் விடுதலையானார். அதன் காரணமாக ஆயுள்முழுவதும் தொண்டு செய்து வந்தார். சுவாமி தூக்கும் திருவாடுதண்டு நான்கினை அன்பளிப்புச் செய்தார். வருடா வருடம் வரும் சிவராத்திரி பூசையை கிரமாகச் செய்து வழிபடுவார். இன்றும் அவரது பிள்ளைகள் தொடர்ந்தும் செய்து வருகின்றார்கள். எப்போதும் மாறாம்புலம் என்றுகூறிச் சிவகதி சேர்ந்தார்.

சு. நாகமணி

இவர் அன்னலிங்கம் அவர்களின் சகோதரர் மாணிக்கப் பிள்ளையாரில் அன்பு உள்ளவர். ஆலயத்தில் நடைபெறும் விழாக்களுக்கு தனது பங்கைத் தொடர்ந்து செய்து வருவார். அவரது முயற்சியால் பஞ்ச மணிக்கொத்து ஆலயத்துக்கு கிடைத்தது. இப்போது இவர் கனடாவில் வசித்து வருவதால் ஆலயப் பணிகளுக்குத் தனது பங்களிப்பைச் செய்துகொண்டு வருகிறார்.

சீ. சின்னத்துரை

இவர் ஆலய மணியமாகப் பல வருடங்கள் பணியாற்றி வந்தார். இவரது முயற்சியாலே ஆலய திருப்பணி வேலைகள் ஆரம்பமானது. திருப்பணிக்குரிய பொழிகல் இவரே முதல் முதல் இறக்கினார். இவரது முயற்சியால் பொது மக்களின் உதவியுடன் ஆரம்ப கால சிறு மடம் கட்டப்பட்டது. ஆலயத்தில் புராணப் படிப்பு, தேவாரம் ஓதுதல் முதலிய பணிகளைச் செய்து வருவார். ஆலயக் குருக்களைக் கூட்டிவந்த பெருமை இவருக்கே உரியது.

பு. கதிரவேல்

இவரும் பிள்ளையாரில் விருப்பு உடையவர் இவரை எல்லாரும் சாமியார் என அழைப்பார்கள். ஆலயத்தில் தோவரம் புராணம்படிப்பு பாடிப் பரவசம் ஊட்டுவார். சில காலத்தில் பிள்ளையார் கதை படிப்பு இவரால் பாடப்பட்டது. தீர்த்த உற்சவ காலத்தில் ஊஞ்சல் கிறமாகப் பாடுவார். மிகவும் இளைய வயதில் காலமாகி விட்டார்.

**த.மகேசன்**

**இவர் பிள்ளையார்மீது மிகுந்த அன்பு கொண்டு தினமும் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வார். கோயிலில் உற்சவகாலங்களில் தேவாரம் பாடுவார். வாரி ஆழ்வார் காலத்திற்குப் பின்பு பிள்ளையார் கதை படித்துக் காப்புச் சொல்வார். இவரும் ஏட்டுச் சுவடியிலே இருந்ததையே படிப்பார். இவருடைய காலத்திற்குப் பின்பு காப்புப் படிக்கும் பணியை நான் ஏற்றுக்கொண்டேன்.**

# பகுதி II

# ஆக்கங்களும் கட்டுரைகளும்

# வள்ளுவர் கண்ணோட்டத்தில் பொருளும் பொருள்சேர் வழியும் – ஆய்வும் விளக்கமும்

## பொருள் செயல் வகை

இன்று சமுதாயத்தில் பொருளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. பொருகின்றது. பொருளின் பெறுமதி கூடிக் கொண்டே வருகின்றது. அதனால் வாழ்க்கையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

வாழ்க்கையாகத் தொடங்கிய இல்லற வாணிகமாய் மாறி விட்டது. காதலாய்த் தொடங்கி மாறிவருகின்றது. இம்மாற்றங்கள் எல்லாம் பொருளினால் உண்டானவை காதலராய் மணந்து கொள்வோர் சிலர் ஆனால் பட்டும் பொன்னும் பணமும் மிகுந்தவராய் இருப்பதை அறிந்து அவற்றின் காரணமாக மணந்து கொள்வோர் மிகப் பலராகும் இதுவே இன்று நம் நாட்டில் சீதனப் பேயாக நடமாடுகின்றது.

ஆகவே இன்றைய சூழ்நிலை பொருள் ஒரு சிறந்த கருவியாகும் பொருள் இல்லாதவர்க்கு இந்த உகைம் வாழ்வு இல்லை என்பதைத் திருவள்ளுவர் அறத்துப்பாலில் நினைவூட்டுகின்றார்.

அதனை

" அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு " என்னும் குறட்பாவினால் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

எனவே பொருளின் சிறப்பைப் பற்றிக் கூறவேண்டுவதே இல்லை கல்வியாலோ, குலத்தாலோ வேறு வகைச் சிறப்பாலோ எதனாலுமே ஒரு பொருட்டாக மதிக்கப்படாதவரையும் மதிப்படையும்படியாகச் செய்ய வல்லது பொருள் பார்க்கப் போனால் அதற்கு நிகரான வேறு ஒருவகைப் பொருளே இல்லை என்று கூறலாம். இதனையே வள்ளுவர் பெருமான்

" பொருள் அல்லரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது இல்லை பொருள்"

என்று பொருளின் சிறப்பை விளக்கியுள்ளார்.

ஒருவனிடம் செல்வம் மட்டும் இருந்து விட்டால் போதும். எந்த ஊருக்குச் சென்ற போதிலும் வெற்றியுடன் வாழ்ச்துவிடலாம். பொருள் இல்லாதவர் கல்வியும் அறிவும் அழகிய தோற்றமும் வலிமையும் பெற்றறவராயினும் அவர் மற்றவர்களால் இகழப்படுவர் பணம் உள்ளவர் எல்லாக் கெட்ட குணங்களும்_உடையவரே ஆயினும் அவரை அறிவுடையவர் என்றும் வலிமையுடையவர் என்றும் புகழ்வர்.

இவ்வளவு நன்மை மிகுந்த செல்வத்தினை ஒருவன் செய்யும் திறமறிந்து செய்து மற்றவர்களுக்குத் தீமை பயவாத விதத்தில் சம்பாதித்திருப்பானானால் அப்பொருள் அவனுக்கு அறம் இன்பம் ஆகிய இரண்டையும் கொடுக்கும் ஆகவேதான்,

" அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து
தீ(து) இன்றி வந்த பொருள் " என்றார்

மற்றவர்களுக்குத் தீமை செய்யக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன் இருப்பதாலும் மற்றவர்கள் தம்மிடத்தில் அன்பு கொள்ளும்படியாகவும் தன்னுடைய முயற்சியல் பாடுபட்டுப் பொருள் சம்பாதிக்க வேண்டும். பாடுபட்டுச் சம்பாதிக்காத பொருள் தனக்குக் கேடு செய்வதே ஆகும்.

இங்ஙனம் தீதின்றி வந்த செல்வம் அழியாது அதுமட்டும் அல்லாமல் தன் மனத்துக் கண் உண்டாகும் அன்பினால் மற்றவர்களுக்கு இரங்குகின்ற பண்பு செல்வம் உள்ளவனுக்கே உடையதாகும். செல்வம் இல்லாதவன் இரக்கம் கொள்வதாலும் பயனில்லை. ஆகவே அன்பினால் பெறப்பட்ட அருள் என்னும் குழந்தை பொருள் என்று கூறப்படும் செல்வத்தையுடைய செவிலியத்தாயால் வளரும்.

"அருள் என்னும் அன்பு ஈசன் குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு"

எனலாம்.

எப்பேர்ப்பட்ட எதிர்களையும் அடக்கும் வல்லமை செல்வத்துக்கு உண்டு. இதுவே சிறந்த படைக்கலமாகும்.

மேலும் கையில் பணம் உள்ள ஒருவன் எக்காரியத்தையும் எளிதில் முடிக்கும் வல்லமை உடையவனாயவான். ஆனால் பொருள் இல்லாதவன் எதுவும் செய்ய முடியாது கஷ்டப் படுவான் தன் கைப் பொருள் ஒன்று தன்னிடம் இருக்க, அதைக் கொண்டு தொழில் செய்தல் ஒருவன் மலைமீது ஏறிநின்று யானைப்போரைக் கண்டதை ஒக்கும். அதனால் போரை நன்றாகக் காணவும் முடியும் யானையினால் உண்டாகும் அபாயத்தையும் அடைய மாட்டான். அதனை

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன் கைத் து ஒன்று
உண்டாகச் செய்வான் வினை"

என்பதனால் அறியக்கிடக்கின்றது.

ஆகவே இல் வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும். அறமும் இன்பமுமாகிய வாழ்க்கைப் பகுதிகளுக்குப் பொருள் கட்டாயம் வேண்டும் பொருள் உள்ளவர்களுக்கே அற வாழ்க்கையும் எளிது காதலாகிய இன்ப வாழ்க்கையும் எளிது.

ஆதலால் " திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற முது மொழிக் கிணங்கப் பொருளைச் சேர்க்கும் வழியை நாம் நாட வேண்டும். இல்லையேல் நம் வாழ்வு துன்பம் கொண்டதாக இருக்கும்.

# பொருளால் அடையும் பயன்!

செல்வத்தைச் சம்பாதித்து விட்டால் மட்டும் போதாது. அதனால் அனுபவிக்க வேண்டிய பயன்களை அனுபவியாதவன் அப்பொருளைச் சம்பாதித்தாலும் பயன் இல்லை.

"வைத்தான் வாய் சான்ற பெரும் பொருள் அஃது உண்ணான்
செத்தான் செயக் கிடந்து(து) இல்"

என்றபடி தன் வீட்டின் பரப்பெல்லாம் நிறையும்படி பெரும் பொருளை ஈட்டி வைத்து உலோப குணத்தால் அதை உண்ணாதவன் செத்தவனுக்குச் சமம். அப்படிப்பட்டவனால் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை.

பொருளினால் தான் நினைத்த காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்னும் எண்ணத்தால் சம்பாதித்த காலத்தில் யாருக்கும் ஒன்றும் ஈயாமலும் தானும் அனுபவியாமலும் இருந்து மடிபவன் இறந்தும் அப்பொருளாசையால் பேயாய் அலைவான் என்று உலகம் தூற்றும்படியான பழிக்கு ஆளாவான்.

பொருள் ஈட்டுவதன் நோக்கம் என்ன? அதனைத் தக்கார்க்கு ஈந்தும் தானும் அனுபவித்தும் வாழ்வதே நோக்கமாகும் பொருளை வேண்டிய மட்டும் சம்பாதித்தும் அதனைப் பிறர்க்கு ஈயும் இடத்து ஈந்தும் தானும் அனுபவித்தும் அதனால் உண்டாகும் புகழைச் சம்பாதிக்க வேண்டும் புகழைச் சம்பாதிக்க முடியாதன் வாழ்ந்தான் என்று சொல்லி என்ன பயன் பூமிக்குப் பாரமாக இருந்தான் என்று சொல்வதே மேல்,

இப்படி வாழ்பவர்கள் ஈயான், கருமி. உலோபி என்ற கெட்ட பெயரையே பெறுவர். இவர்கள் இந்த உலக வாழ்வை இழந்து இறந்து போனபின் புகழுடம்பைப் பெறமாட்டார்கள்.

கோடி கோடியாகப் பொருளைச் சம்பாதித்த போதிலும் அதனை அனுபவிப்பதும் கொடுப்பதும்மாகிய பயன்களை அனுபவியாதவர் அப் பொருளைச் சம்பாதித்தும் என்ன பயன்.

அதனால்லவா,

" கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லாக்(கு) அடுக்கிய
கோடி உண்டாயினும் இல்"

என்று கூறிப்பட்டிக்கின்றது.

மேலும் அழகும் இளமையும் உடைய கன்னி ஒருத்தி தன்னை உரிய கணவன் ஒருவனுக்கு மணஞ் செய்து கொடுப்பார் இன்மையால் வாடி வதங்கி வயதில் முதிர்ந்து கிழவியும் ஆகிப்போய் விடுவாள் எனில் அவளுடைய வாழ்க்கையால் என்ன பயன் அதே போன்றுதான் கருமி கையில் சிக்கிய பொருளும் பயன் பெறுவது இல்லை இப்படிப் பட்டவர்களது பொருள் நடு ஊரில் நச்சு மரம் பழுத்து நிற்பதைப் போன்றதாகும் நச்சு மரத்தில் பழுத்த கனி பிறர்க்குப் பயன்படாதது போலவே கருவி ஒருவனிடம் உள்ள பணமும் பயன்படமாட்டாது.

ஆனால் தாம் சம்பாதித்த செல்வத்தால் எல்லோரும் பயன்படவாழ்பவர் நிலையான புகழை அடைவர்.

இங்ஙனம் வாழ்பவர் சிறிதுகாலம் வருவாய் இன்றி வறுமை வாய்ப்பட நேரினும் அது உலகம் வாழும் பொருட்டுப் பெய்யும் மழை பருவம் தவறியது போலாகும்.

" சீர்உடைச் செல்வர் சிறுதுனிமாரி
வறங் கூர்ந்(து) அனைய(து) உடைத்து"

என்று புகழை உடைய செல்வர்க்கு மாரியை உவமானமாகக் கூறப்பட்டுள்ளது.

ஆகவே பணத்தைச் சம்பாதித்துத் தானும் அனுபவித்தும் மற்றவர்களுக்கும் வேண்டிய இடத்து ஈந்தும் வாழல் வேண்டும் அதுவே செல்வத்தைச் சேர்த்தலால் உண்டாகும் நன்மையாகும்.

அஃதின்றிப் பணத்தின்மேல் கொண்ட பேராசையால் யாருக்கும் ஒன்றும் ஈயாது வாழ்பவன் பிறரிடத்தில் அன்பு செலுத்த மாட்டான் தான் செய்ய வேண்டிய அறங்களையும் செய்யமாட்டான். இவ்வாறெல்லாம் அவன் ஈட்டிவைத்த பொருள் கடைசியில் யாரோ அனுபவிப்பர்.

ஆதலால் இவற்றை மனதிற்கொண்டு பொருளைச் சம்பாதிக்கவேண்டும் தான் சம்பாதித்த பொருளை நல்ல வழிகளில் பயன்படுத்தித் தானும் அனுபவித்தும் பிறர்க்கும் கொடுத்தும் வாழ்ந்து நிலையான பெயரைப் பெறுவோமாகா.

எனவே பொருளின் சிறப்பையும் பொருளால் அடையும் பயனையும் அறிந்தால் மட்டும் செல்வம் வந்து விடாது செல்வத்தை நாமே சேர்க்க வேண்டும் பொருளைச் சேர்க்கும் வழியைப் பார்ப்போம்.

# எண்ணித் துணிக கருமம்!

நாம் பிறந்து இறப்பதற்கு முன் செய்யவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. ஆனால் செய்வதற்கு அருமையான காரியங்களைச் செய்தவர்களே பெரியோர்கள் அத்தகைய காரியங்களைச் செய்யாதவர் சிறியரே என்ற கருத்தினை வள்ளுவர் பெருந்தகை.

" செயற்கரிய செய்வோர் பெரியோர்
சிறியோர் செயற்கரிய செய்கலாதார்"

என்று கருமம் ஆற்றப் புகும் மக்களுக்கு நினைவுபடுத்துகின்றார்.

ஆனால் அவ் வருஞ்செயல் ஒன்றினைச் செய்யத் தொடங்குமுன் கல்வியாலும் பொருளாலும் தனது வலிமையையும் தனக்குக் கிடைக்கும் துணையின் வலிமையையும் இவற்றைக் கொண்டு தான் எடுத்துக் கொண்ட காரியத்தைச் சாதிக்க முடியுமா என்பதையும் நன்றாக எண்ணிப் பார்த்து அதன்பின்னர் செய்யத் தொடங்க வேண்டும் அக்காரியத்தை மேற்கொள்வதால் தனக்குக் கிடைக்கும் இடையூறுகளையும் பார்த்து அதன்பின் செய்வது சாலச் சிறப்புடைத்து.

முன்னதாகவே எல்லாம் எண்ணிப்பார்த்து விளைவறிந்து தொடங்காத காரியம் தனக்குப் பகைவர்களையும் உண்டாக்கிப் பழியையும் வளர்க்கும் அதனால் கிடைக்கும் பயனையும் இழக்க வேண்டி வரும் ஆனால் முடிந்த காரியத்தை எண்ணி மனம் வருத்தப்படுவதால் விளையக்கூடிய பயன் எதுவுமில்லை கவலை படுதன்றி வேறொன்றுமில்லையே. அப்படியின்றி முடிந்தபின் எண்ணுவோம் என்பது தீராத பழியை உண்டாக்கும்.

அதனால்

"எண்ணித் துணிக கரும் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வள்ளுவர் வாசகத்தை கருத்தில் வைத்திருப்போமாக.

ஆனால் தன்னால் செய்யக் கூடிய காரியமாக இருந்தும் நம்மால் செய்ய முடியுமா முடியாத என்ற சந்தேகத்தினால் செய்யக் கூடிய காரியத்தைச் செய்யாமல் விடுவது கெடுதலாகும். எங்ஙனமெனில் அக்காரியத்தால் தான் பெறும் பயனையும் புகழையும் அடையாமல் விடுவது கெடுதலா அன்றோ. செய்யக்கூடாத காரியத்தைச் செய்யத் தொடங்குவது எங்ஙனம் தீதாகுமோ அதேமாதிரி செய்ய வேண்டியதைச் செய்யாமல் விடுவதும் தீதாகும்

எனவே

"செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் என்றார்"

அவ்வாறு செய்யத் தகுந்த காரியம் ஒன்றைச் செய்யத் தொடங்கும் போது அக்காரியம் செய்யும் முயற்சியில் செலவிடவேண்டிய பொருள், அந்த முதலீட்டால் உண்டாகக் கூடிய இலாபத்தையும் கருதிக் கணக்கிட்டுப் பார்த்துப் பின்னரே தொடங்க வேண்டும்.

அதனால்

" அழிவதூஉம் அவதூஉம் ஆகி வழி பயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

என்று கூறப்பட்டிருப்பதால் இனிது புலனாகின்றது.

ஆனால் தனக்குப் பெரிய பயன் கிடைத்து விடும் என்று ஒரு காரியத்தைச் செய்யத்தொடங்கி அதன் பொருட்டுத் தன் முதலையே இழக்கும் மடத்தனமான காரியத்தை ஒருபோதும் அறிவுடையாகள் செய்ய மாட்டார்கள் தனக்குத் தெரியாத ஒரு தொழிலைத் தெரிந்தவர்களின் துணைகொண்டு அறிந்து கொள்ளவும் முடியாததை ஒரு போதும் செய்யக் கூடாது.

இவை எல்லாம் உணர்ந்து தெரிந்த பின்னர் தொடங்கும் காரியம் எந்த வழியில் செய்து முடிக்க முடியுமோ அந்த வழியில் செய்து முடிக்க வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து அறிந்து காரியம் செய்யத் தொடங்குபவர்க்குச் செய்ய முடியாத காரியம் ஒன்றுமில்லையெனலாம். அத்துடன் அவற்றினால் கிடைக்கக் கூடிய வருவாயும் நிச்சயம் கிடைக்கும் எத்தொழிலை மேற்கொண்ட போதிலும் நட்டம் என்பது ஏற்படாது.

# அளவு அறிந்து வாழ்க

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது பொருள். அருள் இல்லாதவர்க்கு மோட்சம் இல்லாதது போலவே, பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்று பொருளின் பெருமையை மேலே காட்டியுள்ளேன். அப்படிப்பட்ட பொருளைத் தருவது தொழில் அத்தொழிலை மேற்கொள்கையில் கவனிக்க வேண்டியவற்றைப் பொதுப்படையாக மேலே காட்டினார் இங்கு எக்காரணத்தை முன்னிட்டு தன் தகுதிக் கொவ்வாத செயல் எதனையும் மேற் கொள்ளக் கூடாது என விரித்துக் கூறுகின்றார்.

தான் செய்ய விரும்பும் தொழிலின் வலிமை என்ன அதற்குத் தேவைப்படும் முதல் எவ்வளவு, அந்த அளவு முதல் இடத்தகுதி உண்டா இல்லையா, தனித்தோ சேர்ந்தோ அத்தொழில் செய்யும் பொருட்டுக் கிடைக்கும் உதவியின் அளவு என்ன? என்பவற்றை எல்லாம் முன்னதாகவே அறிந்து அத்தொழிலைச் செய்ய வேண்டும்.

இவ்வளவும் முன் கூட்டி யோசனை செய்யாது தொடங்கும் காரியத்தில் தோல்வியும் நஷ்டமும் உண்டாகக் கூடும். ஆதலால் இவற்றை முன்கூட்டியே அறிந்து செய்ய வேண்டியது மிக அவசியமாகும் அதனை,

" வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

என்னும் குறளால் அறியக்கிடக்கின்றது. இவ்வாறு தன்னால் எது முடியும் என்பதை அறிந்து அந்த அளவை மீறாது காரியம் ஆற்றுபவன் நாளாவட்டத்தில் இலாபம் பெற்று முடிவில் தான் நினைத்ததைச் செய்யும் வலிமை பெற்றுவிடுவான்.

ஆனால் தன்வலிமையையும் திறமையையும் அறியாமல் தான் கொண்ட ஆசையால் அளவு கடந்து செயல் புரிந்து இடையில் கைவிட்டவர் பலர். தன் தகுதியின் அளவை அறியாது தன்னால் எல்லாம் சாதித்து விடமுடியும் என்ற தற்புகழ்ச்சியால் காரியம் செய்பவன் விரைவிலே அழிவது திண்ணம் ஆகவே தனது வலிமையின் அளவுடன் காரியம் ஆற்றிப்புகழுடன் வாழவேண்டும். அதனால் பொருளுக்கு அதிக சேதம் உண்டாகாது.

பாறம் இழுப்பதற்கு வண்டி உபயோகப்படுகின்றது. ஆனால் ஏற்றக்கூடிய சுமையை மட்டும் வைத்தால் தாங்கும் அதற்குமேல் தாங்காது. வண்டியும் வண்டி என்ற பெயரில் இருக்காது அதுபோன்று மரத்தின் கொம்பரில் ஏறுபவனும், நுனி வரையிலும் ஏறலாம் அதற்குமேல் ஏறினால் சொல்ல வேண்டியதில்லை.

அதுபோன்றுதான் பொருளை எதன் பொருட்டுச் செலவிடுவதாயினும் தன் வருவாய் அறிந்து செலவிடவேண்டும் அதுதான் செல்வம் சேரும் வழியுமாகும். வரவு குறைவாயினும் கெடுதல் இல்லை ஆனால் செலவிடும் வழிகள் வருவாய்க்குத்தக்கதாக அமைய வேண்டும். எல்லை மீறிச் செலவு செய்தால் செல்வம் அழிந்து போகும் வாழ்க்கையும் அழிந்து விடும்.

தன்னுடைய வருவாயின் அளவையும் தகுதியையும் உணராமல் கண்ட படி பணத்தைச் செலவு செய்பவன் வாழ்க்கை பிறர்கண்களுக்கு உள்ளவன்போல் தோற்றினாலும் திடீரென்று கெட்டுப் போகும் என்ற கருத்தை

" அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை
உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்"

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்

# காலம் அறிந்து கடன் செய்க!

அடுத்தபடியாகத் தொழில் செய்ய விரும்பும் ஒருவன் எந்தத் தொழிலையும் அது செய்வதற்கு அமைந்த காலம்தானா என்பதையும் விதிப்பயனால் அது தனக்கு நன்மை பயக்கக்கூடிய காலமா என்பதையும் ஆராய்ந்து செய்யத் தொடங்க வேண்டும்.

அவ்வாறு காலம் அறிந்து தொழில் செய்பவன் எக்காலத்திலும் தன் செல்வம் குன்றாமல் இருக்கப்பாதுகாக்கும் திறனை பெறுகிறான் அதனாலன்றோ

"பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு"

என்று திருமறை பகருகின்றது. காலம் அறிந்து கடன் செய்யும் முறைமையானது செல்வத்தைத் தீர்ந்து போகாமல் தன்னுடன் சேர்த்துப் பிணித்துக் கொள்ளும் கயிறுபோல் அமையும் என்னும் கருத்தைக் கொண்டதாகும்.

ஆதலால் தொழில் செய்யும்காலமும் இடமும் அறிந்து தொழில் செய்யும் திறமை ஒருவனுக்குச் செய்யமுடியாத தொழில் என்பதொன்று இல்லாமல் போகும் எத்தொழிலையும் செய்து முடிக்கும் திறன் உடையவனாவான். வாழ்வில் கலக்கமோ தயக்கமோ நெருங்காது அதனால்

"அரும் வினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்"

என்ற குறட்பாவை மனதில் வைத்திருக்க வேண்டும்..

தொழிலில் வல்லவனாகிய ஒருவன் ஒரு தொழிலைச் செய்வதற்குத் தகுந்த காலத்தை எதிர்பார்த்துச் சிறிது காலம் சும்மா இருக்கலாம். ஆனால் காலம் அறிந்து கடன் செய்யும் திறன் பெற்றவர்கள் சட்டென்று எதையாவது செய்ய வேண்டும் என்பதற்காக அவசரப்பட்டுச் செயலாற்றமாட்டார்கள் தாங்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான காலம் வரவில்லையே என்று தங்களுக்குள் மனவருத்தப்பட்டுக் கொண்ட போதிலும் தகுந்த காலத்திற்காகக் காத்துக் கொண்டே இருப்பார்கள்.

தொழிலில் தமது பகைவ்கள் மேம்பட்டு நிற்பதைக்கண்ட போதிலும் தமக்குத் தொழிலில் வெற்றி காணும் காலம்வரும்வரை பொறுமையுடன் இருக்க வேண்டும் அவ்வாறு பொறுத்திருக்கும் பண்பானது தன்னிடம் உள்ள செல்வம் அழியாமல் காப்பதற்கு வழியாகும். ஆதலால்

" பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

என்றபடி காலம் வரும்வரை பொறுத்து இருக்க வேண்டும். தன்னைவிட ஆற்றல் மிக்க கூகையைக் காக்க பகல் பொழுது வென்றுவிடும் அதைப்போன்று தகுந்த காலம் வரும்போது எல்லாம் முடியும்.

இன்னும் தொழில்மேல் செல்லக் கூடாத காலத்தில் கொக்கினைப்போல் இருக்கவேண்டும். ஆனால் தொழில் செய்வதற்கான காலம் வந்ததும் குறிதவறாமல் பெருமீனைக் கொக்கு்க் குத்திக் கொள்வதுபோல் காரியத்தைச் சாதிக்க வேண்டும்.

"கொக்(கு) ஒக்க கூம்பும் பருவத்து மற்(று) அதன்
குத்(து) ஒக்க சீர்த்த இடத்து" என்பதிலிருந்து அறிவீராக ஆகவே தகுந்த காலத்தை உணர்ந்து தொழிலில் ஈடுபட்டால் அத் தொழிலால் அடையக்கூடிய புகழும் கிடைக்கும். செல்வமும் சேரும். பொருளைச் சேர்க்கும் வழிகளில் இதுவும் ஒன்றாகும்.

# இடம் அறிந்து தொழில் புரிக!

தகுந்த காலம் அறிந்து தொழில் செய்யத் தொடங்வது எவ்வாறு அவசியமோ அதேபோல இடம் அறிந்து செய்வதும் அவசியமாகும். நெல் விளையும் நஞ்சை நிலத்தில் சோளம் முதலிய தானியங்களையும் புல் விளையும் புஞ்சை நிலத்தில் நெல் விதைத்தால் அவை விளையாது வீணாவதைப்போல சிறிய காரியம் செய்யத் தகுந்த இடத்தில் பெரிய தொழிலை ஆரம்பிப்பது அத் தொழில் வளராமல் அழிந்து போவதற்குக் காரணமாகும் செலவிட்ட பணமும் இல்லாமற் போய்விடும்.

நீரில் வாழும் முதலைக்கு நீரில் இருக்கும்வரை அதிக பலம் உண்டு ஆனால் அதே முதலையை வெளியில் இழுத்துப் போடப்பட்டால் சிறு பிராணியும் வென்று விடும். அதைப்போலவேதான் தொழில் செய்வதற்கும் காலமும் இடமும் அறிந்து செய்தல் வேண்டும் அதனால் பொருளுக்கு அதிக நட்டம் ஏற்படாது.

" நெடும் புனலுள் வெல்லும் முதலை அடும் புனலின்
நீங்கில் அதனைப் பிற" என்று கூறப்பட்டிருக்கின்றது.

எந்தத் தொழிலிலும் நாம் சுலபமாக வெற்றி பெற்றுவிட முடியும் என்று அலட்சியமாக எதையும் ஆரம்பித்துவிடக்கூடாது நாம் தொடங்க இருக்கும் தொழிலுக்குத் தகுந்த இடம்தானா என்பதைப்பற்றி உணர்ந்த பின்னரே தொடங்க வேண்டும்.

" தொடங்கற்க எவ்வினையும் என்னற்க
முற்றும் இடம் கண்டபின் அல் அது"

என்று கூறப்பட்டிருப்பதைக் கவனித்தால் நன்கு அறியலாம்.

இவ்வாறு தகுதியான இடம் அறிந்து தொழில் செய்யும் ஒருவன் தன் முயற்சியால் தளராமல் தொழில் செய்வானகில் எவரும் அவனை இலகுவில் வெல்ல முடியாது அவனது செல்வத்தையும் அழித்து விட முடியாது அப்படி எண்ணுபவர்களது எண்ணம் வீணாவது திண்ணம்.

" எண்ணியார் எண்ணம் இழப்பர் இடம் அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்" என்றார்

இடம் அறிந்து தொழில் செய்யப்படும் தொழில்தான் நடைபெறும், சிறப்படையும் என்பதற்கு வள்ளுவப் பெருந்தகை இன்னுமொரு உதாரணந் தருகின்றார்

" கடல் ஓடா கால்வால் நெடுந்தேர்
கடல் ஓடும் நாவாயும் ஓடா நிலத்து"

என்றபடி தரையிலே மிக வேகமாகச் செல்லும் தேர் இருக்கிறதே அது தரையில்தான் ஓடும். நீரில் ஓடாது அதே மாதிரியாக நீரில் ஓடக்கூடிய கப்பலும் நிலத்தின்மேல் நகரவும் மாட்டாது.

ஒரு தொழிலினை ஆரம்பிப்பவன் அதை ஆரம்பிக்குமுன் காலத்தையும் இடத்தையும் தக்கார் துணையையும், சிந்தித்து ஆரம்பிக்க வேண்டும். அப்படிச்செய்பவனுக்கு வேறு துணைகள் வேண்டாம். சிறந்த முறையில் தொழிலைச் செய்து அதன் மூலம் அதிக செல்வத்தை ஈட்டலாம்.

ஆதலால் நம் வாழ்க்கையை வளம்படுத்துவதற் கேதுவாகிய செல்வத்தினை அடைவதற்காகத் தொழில் செய்யத் தொடங்கும் முன், அத்தொழிலைச் செய்வதற்குரிய வாய்ப்பு வசதி துணை முதலியவற்றை எண்ணிப்பார்த்து ஆரம்பிக்க வேண்டும் அப்போதுதான் நாம் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி காண முடியும்.

# ஊக்கம் உடையவனாய் இரு!

ஒரு தொழிலை மேற்கொள்ள விரும்பும் ஒருவனுக்கு ஊக்கம் அவசியம் காலமும் பொருளும் இடமும் துணையும் யாவையும் இருப்பினும், ஊக்கம் இல்லாதவர்கள் தங்கள் தொழிலில் அதிக அக்கறை காட்டமாட்டார்கள். ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு சும்மா இருப்பார்கள்.

ஆகையால் ஒருவனுக்கு உடமை என்று சொல்லப்படத்தக்கது ஊக்கம் ஒன்றுதான் ஊக்கம் இல்லாதவர்கள் வேறு எப்பொருள் படைத்தவராயினும் அப்பொருள் இல்லாதவர்களே ஆவார்களாம்.

"உடையவர் எனப்படுவது ஊக்கம் அஃது இல்லார்
உடையது உடையாரோ மற்று"

என்று கூறுகின்றார்.

ஊக்கம் இல்லாதவர்கள் உடையதும் உடையரோ?... என்று வள்ளுவ முனிவர் ஏளனமாகக் கேட்பதைக் கவனியுங்கள் வேறு செல்வங்கள் இருப்பினும் இல்லாதவர்கள் ஆவர் என்பது கருத்து.

ஊக்கம் இல்லாதவனிடம் இருக்கும் செல்வங்கள் அவனிடம் அவை இருக்கின்றன என்று சொல்வதைவிட இல்லையென்று சொல்வதேமேல்.

ஒருவனிடம் பணம் இருக்கிறதாக வைத்துக் கொள்வோம் அப்பணத்தை எவ்வகையாலும் பயன்படுத்தாமல் சும்மா இருந்து சாப்பிட்டானாகில் எவ்வளவு காலத்திற்கு காணும் அச் செல்வத்தால் யாது பயன் எனவே ஒருவனிடம் உள்ள உடமை என்பது ஊக்கம்தான் ஊக்கமில்லாதவனிடம் செல்வம் நில்லாமல் நீங்கிவிடும் ஆதலால்

" உள்ளம் உடமை உடமை பொருள் உடமை
இல்லாது நீங்கி விடும்"

என்றபடி ஊக்கமாயிருக்க வேண்டும் இல்லாவிட்டால் செல்வம் நீடித்து நிற்கமாட்டாது.

அவ்வாறு நீங்காத ஊக்கம் உடையவர்கள் எங்கே இருக்கும் இடத்தைத் தேடிச் செல்வம் தானாகச் செல்லுமாம்.

" ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும் அசைவு இலா
ஊக்கம் உடையான் உழை"

என்னும் குறளால் அறியக்கிடக்கின்றது.

நீரில் முளைக்கும் ஆம்பல் தாமரை முதலிய மலர்களைப் பாருங்கள் நீர் உயரும் அளவுதான் மலரும் உயரும் நீர் உயரவில்லை என்றால் மலரும் உயராது. அதேபோல் மனிதருக்கு உள்ள ஊக்கத்தின் அளவுதான் உயர்ச்சியும் கிடைக்கும். செல்வமும் பெருகும்.

"வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனைய(து) உயர்வு"

என்று கூறப்பட்டுள்ளதைக் கவனித்து வாழ வேண்டும்.

உலக வாழ்க்கையில் செல்வம் மிக்க நிலைமையும் பெருமையும் அடைவதற்கு ஊக்கம் உடையவர்களால் மாத்திரமே முடியும். மற்றவர்களால் முடியவே முடியாது.

அத்தகைய பெருமை பெறாத வாழ்க்கை வாழ்ந்துதான் என்னபயன் ஒருவருடத்தில் உள்ள மன ஊக்கத்தைதான் அவருடைய கல்வி அறிவு என்று கருத வேண்டும். அந்த ஊக்கம் இல்லாதவர்களை, மரத்தால் செதுக்கி வைக்கப்பட்டுள்ள பதுமைகள் என்று கூறுவதே பொருத்தமாகும் அதனை

" உரம் ஒருவதற்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார்
மர மக்களாதலே வேறு"

என்னும் குறளால் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஊக்கம் உடையவர்களாலேயே வாழ்க்கையில் முன்னேறமுடியும். அவர்களாலேயே செல்வத்தை எட்டவும் முடியும். ஆதலால் மனிதராகிய நாம் ஊக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

# சோம்பல் ஒழிக!

ஒருவன் எத்தகைய உயர் குடியில் பிற்நதவன் ஆயினும் சரி, எவ்வளவு செல்வம் உடைய குடும்பத்தில் பிறந்தவன் ஆனாலும் சரி சோம்பல் என்னும் தீய குணம் உடையவனாக இருப்பானாகில் அவன் தனது செல்வம் முழுவதையும் அழித்து விடுவதோடு தனது குலப்பெருமையையும் அழித்து விடுவான்.

சோம்பல் நாம் செய்யுந் தொழிலுக்குப் பகையாகும். சோம்பல் உள்ளவன் எத்தொழிலிலும் வெற்றி பெறுதல் இயலாது. அதனால் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளைத் தேடும் வகையறியானகித் தன் முன்னோர் சேர்த்துவைத்த பொருளையும் அழித்து விடுவான். அத்துடன் தன் குலப்பெருமையை அழித்து விடுவான்.

"குடி என்னும் குன்றாவிளக்கம் மடிஎன்னும்
மாசு ஊர மாய்ந்து விடும்"

என்னும் குறட்பாவினால் எடுத்துக் காட்டியுள்ளார். சோம்பேறித்தனத்தைத் தன் மடியிலே கட்டிக் கொள்பவன் பொருளீட்டக் கூடிய எம் முயற்சியிலும் ஈடுபடமாட்டான். அதனால் தனது குலப் பெருமையை அழித்து விடுவதால் பழிபாவங்களுக்கும் ஆளாக நேரும்.

தாம் செய்ய வேண்டிய காரியத்தைப் பிறகு செய்வோம், பிறகு செய்வோம் என்று நீடித்துப் போட்டுக் கொண்டே போகும் தன்மை, ஒரு நாளில் செய்யக்கூடிய காரியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பல நாட்களுக்கு நீடித்துக் கொண்டே போகும் தன்மை இவ்விரண்டும் சோம்பல் உடையவனின் தன்மைகள் ஒரே நாளில் முடியக்கூடிய காரியத்தைச் செய்து அதன்மேல் அடையக்கூடிய ஊதியத்தை விட்டுப் பல நாட்கள் செய்தும் பல நாட்கள் கழித்து அவ்வூதியத்தைப் பெறுவதால் தனது செலவுக்கே போதமையால் கடன்பட வேண்டிவரும். கடன்படுவதால் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விபரீதமான முடிவுகள் எழக்கூடும்.

இவ்வாறு குறுகிய காலத்தில் முடிக்க வேண்டிய காரியத்தை முடிக்காது சோம்பேறியாக இருக்கும் தன்மையுடையவர்கள் வாழ்க்கையில் முன்னேறமுடியாது. இவைகள் யாவும் வாழ்க்கையில் கெட்டுப் போகிறவர்களுக்கான அறிகுறிகள்.

" நெடுநீர மறவி மடி துயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

என்னும் குறளால் எடுத்துக் காட்டியுள்ளார் இவ்வழியில் கூறப்பட்ட நான்கும் வாழ்க்கையில் கெட்டுப் போகிறவர்களது பொக்கிஷங்களாகும்.

எனவே வாழ்க்கையில் முன்னேறுபவனுக்குச் சோம்பல் கூடாது அப்படிப்பட்டவன் ஒரு பொழுதும் சோம்பலுக்கு இடங்கொடுக் மாட்டான் சோம்பல் இல்லாதவன் எத்தொழிலும் வெற்றி காண்பான் அவற்றினால் கிடைக்கூடிய வருவாயை எப்போதும் அடைந்தே தீருவான்

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்றபடி பிறரால் தூற்ற இல்லாத இன்ப வாழ்வு வாழ்வான்.

பொருளைச் சேர்ப்பவனிடம் ஊக்கம் வேண்டும் ஊக்கம் உள்ளவனிடம் சோம்பல் தலைகாட்டாது.

ஆதலால் சோம்பலை விட்டு ஊக்கமாயிருந்து பொருளைச் சேர்க்க வேண்டும்.

" பணம் பத்தும் செய்யும்"

# முயற்சி உடையவனாக இரு!

தொழிலை ஆரம்பித்து நடத்துபவன் ஊக்கம் உடையவனாகவும் சோம்பல் இல்லாதவனாகவும் இருந்தால் மட்டும் போதாது அந்தத் தொழிலைச் செய்து முடிப்பதற்கான முயற்சியும் உடையவனாக இருக்கவும் வேண்டும்.

தொழில் செய்ய நம்மால் முடியாது என்று மனச் சோர்வுடன் விட்டுவிடுபவர்க்கு அத்துடன் அவர்களுடைய உலக வாழ்க்கையும் தீர்ந்து விட்டது என்றே வைத்துக் கொள்ளலாம். தொழிலைக் கைவிட்டு மூலையில் இருப்பவன் பின் எவ்வாறு வாழப் போகின்றான். தொழில் இன்மையால் சோம்பலுக்கும் மற்றும் தீய குணங்களுக்கும் இடம் அளித்துக் கடையரில் கடையனாகி விடுவதுடன் தனக்குத் தேவையான பொருளைக்கூட சம்பாதிக்க வகையற்றுப் போய் வீணா மடிவான்.

வினைக்கண் வினைகடல் ஓம்பல் வினைக்குறை தீர்ந்தாரில் தீர்ந்தவை உலகு என்றார் வள்ளவுனார். தான் செய்ய வேண்டிய தொழிலை விட்டவர்க்கு உலக வாழ்வே தீர்ந்து போனமாரியாகும். ஆதலால் முயற்சி உடையவனாக இருந்து தொழிலில் வெற்றி காணவேண்டும்.

தன்னுடைய தொழிலில் முயற்சியுடையவனாக இருப்பனால் தன்வாழ்க்கையில் நிறைவைப் பெறுவதற்கும் மற்றவர்கட்கும் வேண்டிய இடத்து உதவி புரியவும் முடியும்.

தன்னுடைய தொழில் முயற்சியிலேயே கவனம் இல்லாமல் இருப்பவன் பிறர்க்கு உபாறம் செய்வதாகச் சொல்வது பேடி ஒருவன் தன்கையில் வாளை வைத்துக் கொண்டு வீரம் பேசித் திரிவதை ஒப்பதாகும். எத் தொழிலிலும் முயற்சி இல்லாதவன் இல் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைப் பெறமுடியாது. அதனால் சதா வறுமையில் மூழ்கியவனாகி நித்திய துன்பத்தை அனுபவிப்பான் அப்படிப்பட்டவனால் எங்ஙனம் பிறர்க்கு உதவிபுரிய முடியும். முடியவே முடியாது.

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடி கை
வாள் ஆண்மை போல்க் கெடும்"

என்றார்

தன்னுடைய உடல் இன்பத்தை கூடப் பெரிதென்று கருதாமல் தான் செய்யும் தொழிலே பெரிதும் என்று கருதியிருப்பவன் தனக்கு மட்டும் அல்லாமல் தன்னுடைய உற்றார் உறவினர்களின் துன்பத்தைத் தாங்கும் தூணாக உதவுவான்.

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும் தூண்"

அப்படிப்பட்டவனை உற்றார், உறவினர் எல்லோரும் வாழ்த்துவர். எல்லோரும் உறவு கொண்டாடுவர். அவனால் மட்டும் வாழ்க்கைப் பயனைத் தாமும் பிறரும் அனுபவிக்கும்படியான பயன்மிக்க வாழ்க்கை நடத்தமுடியும்.

சோம்பல் இல்லாமல் தன் வாழ்நாளில் முயற்சியில் ஈடுபட்டிருப்பவனிடம் தாமரையில் வாழும் பொருட் செல்வி நீங்காமல் தங்கியிருப்பாள் முயற்சி இல்லாதவன் எப்போதும் மூதேவியை மடியில் கட்டிக்கொண்டவனாக இருப்பான். ஏனெனில் முயற்சிதான் ஒருவனிடம் செல்வம் உண்டாக்கும்.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்சியின்மை
இன்மை புகுத்தி விடும்."

என வள்ளுவர் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். ஒருவன் தன் முயற்சியால் மட்டும் செல்வத்தையும் வெற்றியையும் அடையமுடியுமா விதிப்பயனால் செய்யும் காரியம் தீமையை உண்டாக்கவும் கூடும். ஆனால் விதிப்பயனால் ஒருவனுக்குக் கேடு வந்த போதிலும் பழியாகாது. செய் தொழிலில் முயற்சி காட்டாது விட்டால் அதுதான் பழியாகும்.

"பொறி இன்மை யார்க்கும் பழி அன்று அறிவு அறிந்து
ஆள்வினை இன்மை பழி"

ஒருவர்க்கு நற்காலம் இல்லாமையால் தெய்வமே அவருக்கு இரங்காமல் பாராமுகமாக இருந்த போதிலும் அவர்தன் முயற்சியால் தன் உடலை வருத்திப்பாடுபடும் பொழுது அதன் பயனை அடைந்தே தீருவர் அவ்வாறு முயற்சி செய்பவர் விதியையும் தோற்கடித்து விடுவர்.

எல்லாம் விதிப்பயனே என்ற சித்தாத்தங்களுக்கும் விதியையும் வெல்ல முடியும் என்று தமிழ் அறம் கூறும் வள்ளுவர் வாக்கிற்கும் உள்ள வேறுபாடுதான் என்னே.

விதி வரட்டும் என்று எவரும் மூலையில் படுத்துக் கொள்வதில்லை அவ்வாறு இருப்பனுக்கு விதி சோறு கொண்டுவந்து போடாது அவன் பட்டினிகிடந்து சாகவேண்டியதுதான்.

" தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும்

பாடுபட்டவனே பலன் அடையமுடியும் விதி இல்லாது விட்டாலும் முயற்சி செய்வதால் சிறிதலவாவது பயன் கிடைக்கும்.

சோம்பல் இல்லாமல் தளரா முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் விதியையும் வெல்லக் கூடிய சக்தியுடையவனாக இருப்பான். அதனால் விதி விதி என்று கூறிக் கொண்டு வீட்டிலே சோம்பி இருக்காதீர்கள் அயர்வில்லாமல் பாடுபடுபவன் விதியையும் வெல்லும் திறனைப் பெறுவான். அப்படிப்பட்டவனால் மட்டும் பொருளைச் சேர்க்க முடியும்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்
தாழாது உஞற்று பவர்"

# நன்மை பயக்கும் தொழிலையே நாடுக.

இது வரை ஒரு தொழிலை மேற்கொள்ளும் ஒருவன் அத் தொழிலை மேற்கொள்வதன் முன் எவற்றைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் எவற்றைப் பற்றிமுன் எச்சரிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பவற்றைப் பற்றி வள்ளுவப் பெருந்தகையார் கூறிவந்தார்.

காலமும் இடமும் அறிந்து தன் தகுதியின் அளவு அறிந்து தான் ஆரம்பிக்க இருக்கும் தொழிலால் கிடைக்கக் கூடிய இலாப நஷ்டங்களை எண்ணிப் பாத்து ஆரம்பிக்கும் தொழிலை இடையளாது ஊக்கத்துடனும் சோம்பல் இல்லாது தளராது முயற்சி செய்து முடிக்க வேண்டும் அவ்வாறு செய்து முடிக்கும் திறன்படைத்தவன் விதியையும் வெல்லும் திறன் பெறுவான் என்றார்

இனிச் செய்யுந் தொழில் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றார்

"துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாந்தரும்"

என்னும் குறளை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தான் செய்ய நினைக்கும் தொழிலில் தகுதியான நம்பகமான துணைவர்களையும் கருவிகளையும் தேர்ந்து கொள்வது தொழில் வெற்றிக்கும் செல்வமேம்பாட்டிற்கும் காரணமாகும்.

தான் மேற்கொள்ளும் தொழில் தனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும் பொழுது மற்றவர்களின் உதவி தனக்குத் தானாகக் கிடைக்கும் அதனால் தான் ஆரம்பிக்கும் தொழிலின் சிறப்பாலே அதிக செல்வத்தைச் சேர்க்க முடியும்.

தனக்கு புகழும் நன்மையும் தராத ஒரு தொழிலை எந்தக் காலத்திலும் விரும்பக் கூடாது தான் மேன் நிலைக்கு வரவேண்டும் என்று எண்ணுபவர் தம் ஒளி குன்றும்படியான ஒரு காரியத்தைச் செய்வதற்கு எந்தக் காலத்திலும் துணியக் கூடாது.

தனக்குத் துன்பம் வந்துவிட்டது பிழைக்க வேறு வழி இல்லை அதனால் தம் நிலைக்கும் கீழானதே ஆயினும் தற்காலிகமான இந்தத் தொழிலைச் செய்து பிழைப்போம் என்று நினைத்து மற்றவர்கள் விரும்பாத தீய செயல்களைச் செய்யக்கூடாது. நமக்கு நேரிட்டுள்ள துன்பம் சிறிது காலத்திற்கே நிலைக்கக் கூடியது இதைப் பெரிதாகக் கருதி என்றும் நீங்காத பழியைத் தரக் கூடிய இழிவான செயலில் இறங்கக் கூடாது. அப்படி இழிவான காரியத்தில் இறங்கிய போதிலும் இத்துன்பம் நீங்கி விடும் என்பது என்ன நிச்சயம் இது விதியினால் ஏற்பட்டதாயின் மேலும் வேறு உருவத்தில் வந்து துன்புறுத்துமே தவிர விட்டுவிடாது. ஒருவன் தனக்கு ஏற்பட்ட துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவன் ஒரு பொழுதும் தனக்கு மேலும் இழிவான காரியம் செய்யமாட்டான்.

பின்னால் நினைத்துப் பார்க்கும் பொழுது ஐயோ இந்தக் காரியத்தை ஏன் செய்தோம் என்று எண்ணக்கூடிய காரியத்துக்குத் துணியக்கூடிய காரியத்தை ஏன் செய்தோம் என்று எண்ணக்கூடிய காரியத்துக்குத் துணியக்கூடாது. தன் மனதறிய தவறான காரியம் ஒன்றைச் செய்துவிட்டப் பின் வருத்தப்படுவதைவிட அதைச் செய்யாது விடுவது மேல் அதனால் அத்தொழிலுக்குச் செலவிடும் பணமும் மிச்சமாகும். வீண் செலவும் ஏற்படாது.

"எற்று என்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்று அன்ன செய்யாமை நன்று"

தனக்கு எத்தகைய துன்பம் வந்தபோதிலும் தன்னைப் பெற்றதாய்பட்டினி கிடப்பதைப் பார்க்கும்படியான வறுமை வந்த போதிலும் தீய காரியங்களைச் செய்து தீராத பழியைச் சம்பாதிக்கக் கூடாது

"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்றார் தெய்வப் புலவர்

அப்படிப்பட்ட பழிப்பிற்கிடமாகிய பெரும் செல்வத்தைச் சேர்த்து அனுபவிப்பதைவிட வறுமையிலே இன்பத்துடன் அனுபவிக்க முடியும். வறுமையிற் செம்மையாக வாழ்தலே உண்மையான இன்பமான வாழ்க்கையாகும்.

"பழி மலைந்து எய்திய ஆக்கத்தில் சான்றோர்
கழி நல்குரவே தலை"

என்ற குறட்பாவனால் எடுத்துக்காட்டியுள்ளார்.

அறநெறி உரைத்தவர்கள் இவற்றைச் செய்யக்கூடாது என்று கடிந்து ஒதுக்கியவற்றைத் தாமும் விலக்க வேண்டும். அவற்றைச் செய்யமுடிந்த போதிலும் நீங்காத அவமானத்தையே உண்டாக்கும்.

மற்றவர்கள் அழும்படியாக அவரை வஞ்சித்துச் சம்பாதித்த பொருள் எல்லாம் பின்னால் தாமே அழும்படியாகத் தம்மை விட்டு நீங்கிவிடும் வஞ்சகத்தால் வந்தவை எல்லாம் வஞ்சகத்தாலேயே போடும் ஆனால் நல்ல தொழிலால் நேர்மையாகச் சம்பாதித்தவற்றை தலம் இழக்க நேரினும் பின்னரும் அவை எவ்வாறாவது தம்மையே வந்து சேரும் அழக் கொண்ட எல்லாம் அழைப்போம் இழப்பினும்.

பின் பயக்கும் நற்பாலவை என்று வரையறுத்துக் கூறப்படுகின்றது.

இந்தக் குறளின் கருத்து ஊன்றிக்கவனிகற் பாலது மற்றவர்கள் வருந்தி அழுந்தும்படியாக வஞ்சகத்தால் சம்பதித்த ஒன்றைத் தான் அனுபவிக்கும்பொழுது அது நமக்குத் தரவேண்டிய இன்பம் தருவதில்லை. அதனால் அப்பொருளுக்குரியவர் கூறும் பழிக்குக் காரணராக நேருகின்றது. இச்சிக்கல்களிலிருந்து நமது புத்தி சாதுரியத்தால் காத்துக்கொண்டபோிலும் பின்னால் விதிப்பயனால் துன்பத்தில் இருக்க நேரிடும். அவை போதும் தமதாகிவிடுவதில்லை.

மற்றவர்களை வஞ்சித்துச் சம்பாதித்த பொருளைப் பாதுகாத்து வைத்து நமதாக்கிக் கொள்வோம் என்று நினைப்பது வேகாத பச்சையான மண்பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி அதைப்பாதுகாத்து வைக்க முயல்வதற்கு ஒப்பாகும் சுடாத கலையத்தில் ஊற்றப்படும் நீர் கசிந்து ஓடிப்போவதோடு நில்லாமல் பாத்திரத்தையும் அழித்துவிடும் தன்மையைபோல் வஞ்சித்துச் சம்பாதித்த பொருள் நில்லாமல் அழிவதோடு அவ்வாறு சம்பாதித்தவரின் அழிவுக்கும் ஏதுவாகும்.

# மண்ணில் நல்ல வண்ணம் வாழக் கோயிலை காண்க

இந்து மதத்தின் மேன்மைக்குக் கோயில் பிரதான இடத்தை வகிக்கின்றது. கோயில் என்பது இறைவனது வீடு ஆன்மாக்கள் இறைவனிடத்தே நெருங்குவதற்கு ஏதுவான இடமொன்றும் கூறப்படுகின்றது. ஒவ்வொரு இந்துவும் ஆலயத்திற்குச் செல்லுதலைப் புனிதமான செயல் என்று கூறிச் சென்றார்கள்.

சிவாகமங்கள் ஆலய வழிபாட்டின் மனம் ஒருமைப்பட சிவனருள் கிட்டும் என்றும் சிவனருளால் சிவஞானம் உண்டாகும் என்றும் சிவானந்தத்தினால் பேரானந்தம் உண்டாகும் என்றும் நம் முன்னோர்கள் கூறுகின்றன. எனவே அவனின்றி ஓர் அணுவும் அசையாது அவனருளாலே அவன் தாழ் வணங்கு என்றார்கள். கடவுள் சந்நிதியில் நாம் வாழுகின்றோம் கடவுள் எங்கும் உறைபவர். அவர் நாம் பேசுவதை, நினைப்பதை, செய்வதை,அறிந்துகொண்டே இருக்கிறர். எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கும் இறைவன் சிறப்பாகக் கோயில்களிலே எழுந்தருளியுள்ளான் என்பதற்குச் சுந்தரமூர்த்தி நாயனாரின் தடுத்தாட்கொண்ட புராணம் தக்க சான்றாகும். இறைவன் சுந்தரரைக் தடுத்தாட்கொண்ட புராணம் தக்க சான்றாகும். இறைவன் சுந்தரரைக் தடுத்தாட்கொள்ள முதியவர் வடிவில் வந்தார். திருவெண்ணெய் நல்லூரில் உள்ள மக்கள் இருக்கும் இடம் எது என்று அம்முதியவரைக் கேட்கின்றார்கள். அவர் காட்டுகிறேன் எனக்கூறி அவ்வூர் ஆலயத்துக்குள் சென்று மறைந்தார். இது இறைவனது இருப்பிடமாக ஆலயம் இருப்பதை காட்டியுள்ளது. மேலும் பசுவினது உடல் முழுவதும் பால் சுரந்தாலும் மடியின் வழியாகவே அது பெறப்படுகின்றது போல் இறைவன் விறகில் தீயினன் பாலில் படுநெய்போல் மறைய நின்றனன் மாமணிச்சோதியான் என்றவாறு எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும் இறைவன் ஆலயத்தின் வழியாகவே வெளிப்பட்டு அருள் பாலிக்கின்றான்.

இதனைச் சிவஞான சித்தியார் திருக்கோவிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்கு சிவனாவானங்கே என்று கூறியுள்ளார். இந்து சமய வாழ்வில் முக்கியத்துவம் பெறும் ஆலயத்தைக் காணும்போது கடவுள் உணர்ச்சி தோன்றுகிறது. சிதறும் இயல்புடைய சிந்தனையை ஒரு வழிப்படுத்த கோயில் உதவுகின்றது. மேலும் கோயிலில் நடைபெறும் வேத மந்திரங்களும் மூவர் தேவாரங்களும் ஒலிக்கும் போது ஓர் ஒப்பற்ற சக்தி அங்கு நிலவுகின்றது. அது நமது மனதை நல்வழிப்படுத்த உதவுகின்றது.

கோயிலில் நடைபெறும் பிரதிஷ்டை பூசை முதலியவற்றால் சிவாச்சாரியார்கள் இறைவனை எழுந்தருளச் செய்கின்றார்கள் அவர்கள் எல்லோரும் சுகம் அடைய, எல்லோரும் மங்கலம் பெறுக என்று தினமும் உற்சவ காலங்களிலும் இறைவனை எமக்காக வேண்டுகிறார்கள். நம்மிடத்தில் உள்ள ஆணவமாகிய பாசத்தினை விலக்கிய மெய் ஞானத்தைப் பெற வழிகாட்டுகின்றது. அவர்களின் பிரார்த்த பூசை எம்மை இறைவனுக்கு அண்மையில் கொண்டு சேர்க்கின்றது.

எனவே கோயில் சமய ஒழுக்கத்தினை வளர்க்கின்றது. தீய குணங்களை அழிக்கின்றது. பக்திப்பயிரை செழித்தோங்கச் செய்கின்றது.

மேலும் ஆலயத்தில் நிற்கும் மக்கள் எந்நேரமும் மனதை வேறு கெட்ட சிந்தனைகளில் அலைய கடவுள் சிந்தனைகளுக்குரிய நேரமாக அமைத்துக் கொள்கின்றனர் அங்கு இடம்பெறும். சமயசம்பந்தமான உரைகள் எமது சமய சிந்தனை நீண்டு நிலைபெற வழிவகுக்கின்றது. சைவநாற்பாதங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் பின்பற்ற முயல்வோருக்கு கோயில் வழிபாடு இன்றியமையாதது.
நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவிர்
நித்தமும் எம் பிரானுடைய கோயில் புக்கும்
"என்றுமேசலம் பூவொரு தரமும் மறந்தறியேன்"
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன் என்றும் தேவாரத்தில் பாடப்படுவது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இதன் மூலம் கோயில் சமய சமுதாயத்திற்கு ஒரு நிலைக்களமாகத் திகழ்கின்றது. எமது இந்து மதத்தின் உயிர் நாடியா விளங்கி வருகின்றது. எனவே தான் ஆலயங்களை நாம்பேணிப் பாதுகாத்தால் எமது வாழ்வு சிறக்கும் இப்பிறப்பிலும், மறுபிறப்பிலும் பயன் தந்து எம்மை வாழ்விக்கும் என்பதில் ஐயமில்லை.

# மாறாம்புலம் மாணிக்க விநாயகர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகரின் மகிமைகள்.

இறைவன் அன்பே வடிவானவர். இறைவன் மீது வைக்கும் அன்புக்கு பக்தி என்று பெயர். இப் பக்தியால் மிகமிக ஞானப் பொருளாகிய கடவுள் நமக்கு காட்சி தருவார். கைத்தலம் உடையார் நெஞ்சில் கனவிலும் காட்டமாட்டார் என்பது புராண வசனம் கைதலம் என்றால் கபடிகள், வஞ்சகர் என்பதாகும் கபடிகள் மனதில் கனவிலும் காட்சி கொடுக்கமாட்டார் இறைவன். அன்பு, கருணை, ஒழுக்கம், பொறுமை இல்லாதவர்கள் கபடிகளாவார். அன்புடையார் எல்லாம் உடையார் என்றார் வள்ளுவர். அன்பேசிவம் என்றார் திருமூலர். காரைக்கா ல் அம்மையார் அன்பினால் இறைவனை வேண்டுதல் செய்தார். அதன் பலனால் இறைவன் காட்சி கொடுத்தார். அப்போது அவர் இறவாமை வேண்டும் என்றார் இருப்பினும் பிறவாமை வேண்டும் என்றார். வந்திக்கிழவியின் பக்தியாலும் அன்பினாலும் அவருடைய பிட்டுக்காக அணை கட்டக் கூலியாளாக வந்தவர் சிவன். இவ்வாறு அன்பும் பக்தியும் முத்தியையும் மேன்மையையும் அளிக்கின்றது. அவ்வகையில் எமது ஆறாத்தை அம்மாவின் அன்பினாலும் பக்தியினாலும் அவருக்கு எமது பிள்ளையார் காட்சி கொடுத்து அவரது அருகில் வீற்றிருந்து அருள்புரிந்தார். மேலும் யட்ட புளியை நனைக்கச்செய்து தனது மூர்த்திச்திறனை வெளிப்படுத்தினார்.

எமது ஊர்மகன் ஒருவர் சிறையிலிருந்தபோது கூட இருந்த அந்தணர் ஒருவர் எமது பிள்ளையார் மீது பத்துப்பதிகம் பாடினார். அப்போது அவர்களின் தண்டைனைக்காலம் முடிவதற்கு முன்னரே சிறையிலிருந்து அவர்களை விடுவித்து கருணை புரிந்தார்.

ஆலயக் கற்பக்கிரகம் இருக்கும் இடத்திலிருந்து அபிஷேக தீர்த்தம் வந்த விழுந்த இடத்தில் காளான்கள் இருந்தன அக்காளான்களை எடுத்து சமைப்பதற்காக வீட்டிற்கு செல்லுவதற்காக கோவிலின் தெற்கு வீதியை வந்தபோது எமது ஊர் பெண் ஒருவருக்கு கண் தெரியாமல் இருந்தமையால் அவர் காளான்களோடு அரிசியையும் சமைத்து விநாயகருக்கு படைத்து கண்பார்வையை பெற்றுக்கொண்டார்.

முன்னையகாலத்தில் தண்ணீருக்கு தட்டுப்பாடு. கோவிலில் கிணறு கட்டப்பட்டிருந்தமையால் சிலர் அக்கிணற்றில் தண்ணீர் எடுத்து வீட்டில் சமையலுக்கும் தேவைகளுக்கும் பயன்படுத்தினர். அவர்களின் பாவனையில் சுத்தம் பேணப்படாமையினாலோ என்னவோ அவர்களில் பலர் சந்ததி இன்றியும், கவலையுடன் வாழ்ந்தனர்.

மரண வீட்டிற்கு சென்று வந்த ஒரு அன்பர் தனது தொழில் நிமித்தம் காரணமாக ஆலயத்தினுள் பிரவேசித்த வேளை மெய்சிலிர்த்து காய்ச்சலால் துன்பப்பட்டார். பின்கோவிலுக்கு வெளியே வந்து குளித்துவிட்டு தூய்மையுடன் கோவிலுக்குள் சென்று தனது வேலையை செய்தார்

அப்போது அவர் பிணியும் நீங்கியது. அவ்வாறே துடக்குடன் கோவில் வாசலால் சென்ற பெண் மீதும் ஏற்பட்டு பின் அவரின் நேர்த்தியால் பிணி நீங்கியது. இவ்வாறு தனது உண்மையான மூர்த்தியினை வெளிப்படுத்தி வருகின்றார். இன்றும் எம்முள் பலருக்கும் பல அற்புதங்களை வழங்கி வருகின்றார்.

இவை பறம்பரை பரம்பரையாக கூறப்பட்டு வந்தாலும் அவை காற்றோடு காற்றாக செல்லாது அடியார்கள் மனதில் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே கூறுகின்றேன். முன்னோர் வாழையடி வாழையாக மரபு தவறாது ஆலயத்தை வழிநடாத்தி வந்துள்ளார்கள் அவர்களது வழித்தோன்றல்கள் தொடர்ந்தும் இறை பணியில் செயற்பட்டு ஆலயத் தூய்மையை பேண வேண்டும். வருங்கால சந்ததியினர் இவ்வாலயத்தின் சிறப்பையும் மேன்மையையும் அறிய வேண்டும் அதனை கருத்தில் வைத்து ஒழுக்க சீலராக வாழ வேண்டும்.

## தேர்த்திருவிழா

அல்வாய் மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்ஸவம் ஆனி மாதம் !9ம் திகதி மகம் நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் சஷ்டித்திதியும் கூடிய சுபதினத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா தீர்த்ததிருவிழா, வேட்டைத்திருவிழா, ஆகிய சிறப்பம்சங்களுடன் நடைபெற்று இன்று தேர் உற்ஷவமாகும். இவ்வாலயத்துக்கு தேர் இல்லாத குறை ஒன்று உள்ளது. அதுவும் விரைவில் அடியார்களின் திருவுளம் இரங்கி விரைவில் இனிதே நிறைவேறும் என எம்பெருமானின் திருத்தாளைப் பணிந்து நிற்கின்றோம்.

"யாதுமாகி நின்றாய் எங்கும் நீ நிறைந்தாய்" என்றான் பாரதி இறைவன் எங்கும் உள்ளவர். எல்லம் அறிவார், எல்லாப் பொருள்களிலும் பாலில் நெய் போலவும் "தேனில் சுவைபோலவும்" கடவுள் நீக்கமுறச் சேர்ந்து தனித்து நிற்பவர்.

கடவுள் என்றால் எல்லாம் கடந்து நிற்பவர் எம்மைப் பிறவிப் பெருங் கடலைக்கடக்க உதவுபவர். யாதொரு தெய்வம் கண்டீர். அத்தெய்வமாகி மாதொரு பாகனாய் இறைவன் தோன்றுவார். நாம் விநாயகனை வணங்குகின்றோம். முருகனைத் துதிக்கின்றோம். அம்மனை வேண்டுகிறோம். எல்லா மூர்த்திகளிலும் சிவமும் சக்தியும் தோன்றி ஆன்மாக்களுக்கு அருள் செய்கின்றார். சிவபெருமான் முழுமுதற்பொருள் பணமின்றி அவனன்றி ஓர் அணுவும் அசையாது. சிவன் சக்தியின் துணையுடன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களை செய்து சீவாத்மாக்களை தன்வசப் படுத்தி முத்தி இன்பம் பெற வழிசெய்கின்றார்.

கொடியேற்றம் படைத்தல், கருமத்தையும் மற்றைய தினங்கள் காத்தல் கிருபையையும், தேர் திருவிழா அழித்தல் நிலையையும், தீர்த்தத்தமாடுதல் அருளல் காட்சியையும் கொடியிறக்கம் மறைத்தல் பொருளிலும், ஆலயங்களில் வருடாந்த இந்நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

ஆன்மாக்கள் பாசத்தால் கட்டுப்பட்டவர்கள். நாம் செய்யும் நல்வினை, தீவினைகளினால் அடையாளம்பெற்ற பாவங்கள் எம்மை விட்டு நீங்கும் பொருட்டு தேர் திருவிழாவிலே மூலமூர்த்தி எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சிகொடுக்கின்றார்.

உற்ஷவ மூர்த்திவீதி உலா வரும்போது ஆன்மாக்களை அருள் பார்வையினால் ஆட்கொள்ளப்பட்டு ஜீவாத்மாக்களிடம் காணப்படும். பாவங்களை நீக்கி அவர்களை மன்னித்து மீண்டும் தன்வசப்படுத்துகின்றார். இந்து மதம் வெறும் சம்பிரதாய மதம் அல்ல சைவம் வாழும்வழி, வாழ்க்கைநெறியைக் காட்டி நிற்கின்றது. ஆலய வழிபாடுகளில் மனித பண்பாட்டின் மூலக்கூறுகளை காணலாம். ஒழுக்கத்தின் உயர்வுகளைநம்பிக்கையின் பலாபலன்களையும் காணலாம்.

இதற்காகவே கடவுளை நம்பினோர் கைவிடப்படார். என்று ஆன்றோர்கள் கூறிவைத்தார்கள்.மனித வாழ்வும் ஓர் தேரோட்டம் தேர்பல கலை வடிவங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மரத்தில் செதுக்கப்பட்ட சாட்சிகள் எமது வாழும் பாதையைக் காட்டி நிற்கின்றது. ஆன்மாக்கள் அனுபவிக்கும் இன்ப துன்ப நிகழ்வுக்கு ஆலயமே காரணம். மண்ணாசையையும் பெண்ணாசையையும ' வாழ்வில் அழிவைத் தந்ததென்றும் இராமாயணமும் பாரதமும் காட்டவில்லையா? அரசன் அன்றருப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்றார்களே, அறம் வெல்லம் மறம் தோர்க்கும் தர்மம் காக்கும், வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான். என்று முன்னோர்கள் கூறிய வாசகம் பொய்யல்ல. இதனாலேயே பகவத் கீதை சொன்னது கடமையைச் செய் பலனை எதிர்பாறாதே என்றார் கிருஷ்ணன்.

மூலமூர்த்தி அலங்காரமாகத் தேரில் பவனிவருகின்றார். பக்தி சிரத்தையுடன்அடியார்கள் வடம்பிடித்துதேரை இழுக்கின்றார்கள். தேர் மெதுவாக நகர்ந்து வருகின்றது.

ஊர்மக்கள் எல்லாரும் ஒன்று கூடித் தேரை இழுக்கின்றார்கள். இங்கே ஒற்மையையும் பலத்தையும் அறிகின்றோம். இதுபோலவே வாழ்க்கைத் தேடும் குடும்பம் என்ற கயிற்றினால் கட்டப்பட்டு இழுக்கப்படுகின்றது.

அண்ணன், தம்பி, மச்சாள் மாமன் மூத்தோர், இளையோர், அயலவர், நண்பர், குரு,ஆசிரியர், இன்னோரன்ன உறவு முறைகளின் பிணைப்பே வாழ்கை குடும்பத்தில நடைபெறும்.இன்ப துன்ப நிகழ்வுகளும் உறவுக்கொரு மெருகு ஏற்றுதலாகும். வருடத்தில் ஒரு முறையாவது எமது பகைமையை விட்டு ஒன்றுபட்டு தேர் இழுக்க முன்வருகின்றோம்.வாழ்வின் இரகசியத்தைக் காட்டவல்லது. தேர் உற்சவம்

தேர் தனது இருப்பிடமாகிய ஈசானத்தில் வந்ததும் தேங்காய் உடைத்து வழிபடுகின்றோம். சிதறுதேங்காய் உடைப்பது நமது பாவங்கள் எம்மை விட்டு நீங்கும்படியாகவே தேங்காய் நாலா பக்கமும் சிதறிச்செல்கின்றன. தேங்காய் வெண்மையாகித் தோன்றுகின்றது. தேங்காயின் காணியாக்கப்படுகிறது.இதுபோலவே எம்மிடம் உள்ள தீமைகள் விலகி மனம் தூய்மையடைந்து ஆனந்தம் பெறும்போது கண்களினின்றும் நீர் சிந்திக் காணிக்கையாக்குகின்றோம்.

எனவே அடியார்களே இறைவனை நம்புங்கள் நம்பிக்கை வீண்போகாது. விழாக்கள் வீணுக்கல்ல நம் உள்ளத் தூய்மைக்கு உகந்தது. மனதை நல்வழிப்படுத்தி வாழ்வின் சூட்சுமத்தை உணர்ந்து நல்வழி நின்று நடப்போமாக.

கல்லைக்கண்டால் நாயைக்காணோம் நாயைக்கண்டால் கல்லைக்காணோம் என்ற சொற்றொடர் பேருண்மையை விளக்கி நிற்கின்றது. மெய்ஞானம் விஞ்ஞானம் என்றும் வாதம்பேசிய உலகில் எல்லோரும் முடிந்த முடிவாகக் கண்டனர். கடவுள் கல்லிலும் செம்பிலும் வடிவமைக்கப்பட்டமை ஆன்மாக்களை எளிதில் அருள் கொள்ள என்பதே இவ்வாசகம்.

# சைவம் ஒரு வாழ்க்கை நெறி

உலகம் ஒரு குடும்பம் இறைவனே எமது தந்தை நாம் எல்லோறம் சகோதரர்கள் உற்றார், உறவினர்கள் என்ற மனப்பான்மையோடு வாழவேண்டும். என்பது சமயத்தின் தத்துவமாகும். ஆண்டவன் படைப்பில் நாம் எல்லோரும் சமம் உயர்வு, தாழ்வு, மேல், கீழ் என்ற ஏற்றத்தாழ்வுடைய சமூகம் செம்மையானது இல்லை. அங்கே சைவம் இராது.

தன்னில் இறைவனைக் கண்டுதான் தான் இறைவனாய் நின்றார் ஒரு மகாஞானி – சகல உயிரினங்களிலும் கடவுளைக் கண்டார் எமது முழுமுதற் கடவுளாகிய சிவம் அன்பே வடிவமானவர் அன்பே சிவம் என்றார் திருமூலர்

அப்பனும் அம்மையும் சிவமே அரிய சகோதரரும் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே ஒதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே தேவாதி தேவரும் சிவமே
இப்புவியெல்லாம் சிவமே என்னை ஆண்டதும் சிவமே
என்ற நற்சிந்தனைப் பாடல் மூலம் கடவுள் அனைத்து உயிர்களுளும் உறைந்துள்ளார்.

தவயோகி யோகர் சுவாமியும் எல்லா உயிர்களுளும் இறைவனின் படைப்பு என்று கூறியுள்ளார்
மங்கும் பொழுதளவும் வாடித் தொழில் புரியும்
மக்களெல்லாம் இறைவன் வடிவல்லவோ
அங்கம் குறைந்தழுகி ஐயா எனக் கையேந்தி
அகத்தினுள் கதவருகே    அவனல்லவோ என்று கூறியுள்ளார்.

இன்று பல ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மக்கள் தவறாது ஆலயங்கள் சென்று வருகின்றனர். ஆனால் மக்கள் மத்தியில் அன்பு அமைதி அருள் குறைந்து காணப்படுகின்றன

இதற்கு காரணம் நமது சைவ தத்துவங்கள் ஒரு புறமாகவும் வாழ்வு மறு புறமாக வாழ்வதுதான். நமது சைவரெனக் கொண்டிங்கு வாழ்கின்றோம். அன்பே வடிவான சிவம் அன்பு செய்வது வாழப் படைத்திருக்கின்றான். ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்றது சைவம்.

நான் எனது என்ற அகங்காரத்தை அகற்றுவது சைவம். இம்மைக்கும் மறுமைக்கும் வழி காட்டுவது சைவம் உண்மைபேசி உயரச்செய்வது சைவம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்றும் கூறிவந்துள்ளார்கள்.

பிறவியில் மனிதப்பிறவி மேலானது மனிதனுக்கு மட்டுமே மனம் உண்டு. நல்லவற்றை நினைத்து நல்லவற்றை செய்து வாழ வழி செய்வது சைவம். நல்ல சிந்தனையும் தெய்வ வந்தனையும் எமது வாழ்வை உயர்த்தும்.

வேத நூல்களும் சாத்திரங்களும் இவ்வுண்மையையே கூறியுள்ளன. இதிகாச புராணக்கதைகளில் அன்பு, கருணை, அறம், தருமம், ஈகை முதலிய பண்புகளைக் காக்க அமைந்தவை

தர்மம் தலைகாக்கும், அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்றும் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்று அர்ச்சுனனுக்கு விளக்கிய கீதையும் வாழ்வின் தத்துவத்தையும் சைவத்தின் மேன்மையையும் சொல்லிவைத்துள்ளனர்

மூவர் பாடிய தேவாரங்களுள்மாணிக்கவாசர் பாடிய திருவாசகம் இறை நம்பிக்கையினால் உயர்வடையலாம் என்று கூறுகின்றன.சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் 03 நாயன்மார்களின் வரலாற்றை எடுத்துக்கூறியுள்ளார். குலப்பெருமையை விலக்கிவ் பக்தியின் சிறப்பை காட்டி சைவ சமய உண்மைகளை மேல் நிலைக்கு வைத்துள்ளார்.

அதுசாத்திரம் அல்லது கடவுளை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்கள். என்ற கருத்தைக் கதை வடிவத்தில் கூறிவைத்துள்ளார்.

ஆகவே சைவம் தழைக்க அதன் வழிநின்று வாருங்கள். எல்லாவிடத்திலும் அன்புசெய்து வாழுங்கள் கடவுள் சந்நிதியில் நாம் வாழுகின்றகடவுள் எங்கும் உறைபவர் அவர் நாம் நினைப்பதை பேசுவதை செய்வதை அறிந்து கொண்டே இருக்கின்றார். ஆதலால் தீயசிந்தனை, தீயசொற்கள், தீயநினைவுகள் இவைகளை விளக்கி உண்மையையே பேசி அன்புடன் இனியவர்களாக வாழக்கடவுளை சிந்தனையுடன் வாழ்க்கையை மேற்கொள்ளல் வேண்டும்.

மரணம் எப்போதுவரும் எந்த இடத்தில் வரும் என்பதை எவராலும் அறிந்துகொள்ள முடியாது ஆகவே நல்ல அறங்களை செய்து சொர்கத்திற்கு நலந் தேடவேண்டும். எல்லாச் சமயங்களும் கடவுள் நம்பிக்கையுடையது கடவுள் நடுவர் உண்டு என்கின்றன.கடவுளைக் கண்ணால் கண்டவர்கள் இலர். சித்தர்களும் முனிவர்களும் தவயோகிகளும் தவவலிமையினால் கண்டுசொன்ன உண்மைகள்தலன் சாத்திர வேதங்கள். கடவுள் நம் உடம்புக்குள்ளே இருக்கின்றார். உடம்பை உயிர் செலுத்துகின்றது. உயிரைக்கடவுள் செழுத்துகின்றார். கடவுள் தேனும் சுவையும்போல, பாலில் நெய்போல விறகில் தீயென மறைந்துள்ளார்.
தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலர்
தேனுக்குள் இன்பம் செறிந் திருந்தாற்போல்
ஊறுக்குள் ஈசன் ஒளிந்திருக்கின்றார் என்கிறார் திருமூலர்.
ஆதலால் ஞானம் பொருளாக விளங்கும் இறைவனை காண அனுபவத்தால் உணரவேண்டும்.
எனவே பற்றுக பற்றற்றுள் பற்றை அப்பற்றை
பற்றுக பற்றை விடற்கு என்ற கூற்றின் வழி இறைவனை இறுகப்பற்றுக

## மாறாம்புலப் பிள்ளையாரை வேண்டிப் பாடப்பட்டவை

மேருவிற் பாரத மாக்கதை தன்னை எழுதிடவே
சீருற் றிடுமொளி ஒண்மருப்போ கொண்ட ஐங்கரனே
பாருள் மாறாம்புத் துறைபவனே பகருமடியான் நிதம்
பேரும் பொலிய உன்பாதம் பணிந்தான் பேறு அளித்திடுவாய்.

ஆலும்பூ அரசும் எனமரங்கள் வளர்ந்து நல்ல நிழலிடவே
ஞாலம் புரக்கும் மாறாம்புல த்துன்னடியான் துயர் நீக்க
கோல வடிவிற் கொலுவீற்றிருக்கும் கரிமுகத்துக் தூமணியே
காலம் முடிய வந்தடைந்தான் காத்துக் கருணை ஈய்வாய்

நல்ல தினங்கள் நாளும் நடக்கும் திசைகளெட்டும்
வல்ல விநாயகன் என்றுனை ஏத்தி வணங்கிடுவான்
தொல்லை யுலகத் துறவை விட்டுமேயுன் சேவடியிற்
புல்ல அணைத்திடுவாய் மாறாம்புலம் மேவிய புண்ணியனே

பொங்கல் இடுவார் பூவிடுவார் பூரிப்போடு வீதிதனை
எங்கும் புனிதம் செய்திடுவார் என்றும் நின்றுகோயிலிலே
பங்கம் அகற்றும் பிள்ளையாரே பக்தி மிகுந்த ஏழைதனை
அங்குள் அடியிற் சரணடைந்தான் அருள்வாய் மாறாம்புலத்தானே

முத்திக்கு அருளித்து சிந்தைக்குத் துணைநிற்கும் மூத்தவனே
சித்திர வடிவேலனுக்கு உற்றசோதரனே மாறாம்புல மாமணியே
சத்திய வாழ்வு வாழ்ந்து சஞ்சலம் ஏதுமில்லான்
உத்த மன்அன்ன லிங்கம் உருகி மனந்தேற்றுவாயே.

(சி.க)

# இறைவன் துணை இருந்தால் வெற்றிநமதே

அது பாரதப்போர் நடந்த காலம். திருதராட்டிரன் புதல்வரான துரியோதனன் பாண்டவர்களின் ஆட்சியை கபடமாக கைப்பற்றி பாண்டவர்களுக்கு அநீதி இழைத்தான். பாண்டவர்களுக்காகத் தூதுபோன கிருஷ்ணன் துரியோதனிடம் முதலில் அவர்களுக்குரிய ஆட்சியைக் கொடுக்குமாறு கேட்டான் துரியோதனன் அதற்கும் சம்மதிக்கவில்லை. அதன்பின் கிருஷ்னன் ஊர் ஒன்று கேட்டான் அதற்கும் சம்மதிக்கவில்லை பாண்டவர்களுக்கு ஒரு ஊசியளவு நிலம்தானும் கொடுக்க சம்மதிக்கவில்லை. வேறு வழியில்லாமல் யுத்தம் நடைபெறவேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது. எல்லாம் கிருஷ்ணனின் வேலைதான். பாரதப்போர் வெகுவேகமாக நடந்து கொண்டிருந்த காலம். பாண்டவர்களின் பக்கம் கண்ணன் துரியோதனனின் பக்கம் கண்ணனின் சேனைகள் பாரத்தன் பக்கம் துணைநின்ற கண்ணனைக் கண்ட கௌரவர்கள் அணியினை சேர்ந்த இல விவேகன் கார்த்தன் ஆயுதம் ஏந்திப்போர் புரியவேண்டியதில்லை கண்ணன் துணை ஒன்றே போதும். கௌரவர்கள் தரப்பில் பிரதம தளபதியாக பீஸ்மர் இவர்கள் பக்கம் இன்னுமொரு தளபதி கர்ணன் இவ்விதம் வலிமை படைத்த பலர் அணிவகுத்து நின்றனர் பீஸ்மர் எல்லையற்ற ஆற்றலும் நற்பண்பும் மிக்கவர். தவ வலிமையுடையவர் பாண பிரயோகத்தின் நுட்பம் அறிந்தவர். பஞ்சபாண்டவர்களின் மனைவியான திரௌபதிக்கு பீஸ்மரின் ஆற்றல் தெரியும் அர்ச்சுனனின் உயிரைக்காப்பதற்கு என்ன செய்யலாம் என்று எண்ணி கண்ணனிடம் கேட்டாள். கண்ணன் அதற்கு திரௌபதியை பீஷ்மரிடம் சென்று ஆசீர்வாதம் வாங்கும்படியும் போகும்போது முகத்தை மறைத்து செல்லும்படியும் செல்லும்படியும் வளையல்களில் ஓசையையும் எழுப்பும்படி பணித்தார். அக்காலத்தில் இரவுவேளைகளில் போர் நடப்பதில்லை சேனைகள் ஓய்வு எடுத்துக் கொள்ளும். இவ்வேளையில் எதிரிகள் வந்தாலும் நட்புடன் உரையாடுவர். யுத்தமே இப்படித்தான் இத்தருணத்தில் கண்ணன் பணித்தபடி திரௌபதி முகத்தில் முக்காடிட்டு பீஷ்மர் முன் வந்து நின்று வலையல் ஒலிக்கச் செய்தால் பணிந்தாள். பீஷ்மர் அக்கால வழக்கப்படி தீர்க்க சுமங்கலி பவ என ஆசீ கூறினார். திரௌபதி அதன்பின் முக்காட்டை விலக்கி தன்னை வெளிப்படுத்தினாள். பீஷ்மரும் அவளை நோக்கி இந்த அகால வேளையில் ஏனம்மா வந்தாய் என்று கேட்டார். நீங்கல் என்னைத் தீர்க்க சுமங்கலி என்று வாழ்த்திவிட்டீர்கள் இனிபயம் இல்லை பாண்டவர்கள் உனிருக்கு ஆபத்து வராது இதுபோதும் என்று பதிலளித்தாள். திரௌபதி அப்போது வாசலைப்பார்த்தார் அங்கெ கண்ணன் காட்சியளித்து கொண்டிருந்தார். கண்ணன் எல்லாம் உன் வேலைதான் நீ அர்ச்சுனன் கூட நிற்கும்போது பாண்டவர்களுக்குத்தான் வெற்றி நிச்சயம் என நினைத்துக் கொண்டார். இறைவன் துணைநின்றால் எக்காரியமும் வெற்றியடையும் அதிகாரம்,பணப்பலம், படைப்பலம் அனைத்தும் இருந்தும் இறைவன் துணை இல்லாவிடில் தோல்வியே கிட்டும்.

# அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

சைவ சமயமே எல்லாச் சமயங்களுக்கும் மேலான முதன்மைச் சமயம் எனக் கொள்ளப்படுகிறது. இதற்கு தொடக்கும் இல்லை முடிவும் இல்லை எனலாம். தென்னாவட்டுடைய சிவனே போற்றி என் மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்னும் வரிகள் நமக்கு அதன் பெருமையை எடுத்தியம்புகின்றது. சைவ சமயம் நல்லொழுக்க நெறிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. உயரிய வாழ்க்கை நெறிகளை உடையது சீரிய பண்பாட்டு விழுமியங்களை அறியச்செய்வது. மனிதன் சமூக வாழ்க்கையை மேற்கொண்டுவிட்ட ஒரு மிருகம் அதனால் தனிமினதன் சமுதாய வாழ்வில் ஈடுபடச் சில சமயநெறிகளும், சட்டங்களும் அவசியமாக என்றால் மிகையில்லை சைவசமயம் அன்பை நீலை நிறுத்திப் போடப்படுகிறது. அன்பே சிவம் என்றும் தத்துவத்தை திருமூலர் வாயிலாக அறியலாம்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாகவும் தாருமருகிலார்ன்பே சிவமாதாடு மறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந்தாரே என்பது திருமந்திரம் சைவசமயக் கடவுளை எடுத்துக்கொண்டாலும் அங்கே காண்பது அன்பு மயமாகிய குடும்ப உறவுகளே. சிவனும் சக்தியுமாய் விளங்குவது கணவன் மனைவி உறவு சிவனும் சக்தியுமே எமது தாய் தந்தை என்பதால் தாய் தந்தை உறவு காணப்படுகிறது. விநாயகர் முருகன் வழிபாடு சகோதர பாசத்தை வெளிப்படுத்துவன லக்குமி, சரஸ்வதி துர்க்கை என்றும் தெய்வ வழிபாடு மாமன் மாமி உறவுகளை காட்டி நிற்கின்றது. இந்த உறவுகள் ஒழுக்கங்களுக்கும் நிம்மதிக்குமாக உருவாக்கப்பட்டவை. பிறப்பாகவும் உறவு நிலைக்கிறது பிணைப்பாலும் உறவு வளர்க்கிறது. சைவ சமய சொல்லப்படாதவை எவையும் இல்லை அத்தனை கோட்பாடுகளும் சட்டங்களாகிய நம் வாழ்வில் ஒளியை ஏற்றுகின்றன இதனையே வள்ளுவரும்
அன்பெலார் எல்லாம் தமக்குடையார் அன்புடையார்

என்பும் உரியார் பிறர்க்கு . என்று அன்பின் சிறப்பை தெளிவு படுத்துகிறது. சைவசமயத்தில் காணப்படும் புராணங்கள், இதிகாசங்கள் யாவும் அன்பைத் தலைமையாகக் கொண்டு அமைந்தவையே எனவே சமய வழிபாட்டில் அன்பைப் பேணுங்கள் இன்பமாய் வாழுங்கள். எல்லோரும் இன்புற்றிரும் பாதங்கள் தவிர வேறெதும் அறியேன் பராபரனே.

# வரலாற்றுக்கு துணை நின்ற நூல்கள்


1. யாழ்ப்பாண வைபவ கௌமுதி – க.வேலுப்பிள்ளை
2. யாழ்ப்பாண சரித்திரம் – இராசநாயகம் முதலியார்
3. ஈழத்தவர் வரலாறு – கலாநிதி க.கணராசா
4. யாழ்ப்பாணவைபவ மாலை – குல. சபாநாதன்
5. தமிழரின் தோற்றம் –வீ.ஆா.இராமச்சந்திர தீட்சிதர்

